
Registered as a Newspaper in Srilanka


தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 47 • 12.06.2016

NATHAN
KEY CUTTING CENTER
இல.63, முட்டாஸ்கடைச்சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மிசின் மூலம் திறப்புகள் வெட்டிக் கொடுக்கப்படும்
0776175609



# அமைச்சர் சத்தியலிங்கத்தை "போட" 3 கோடி டீல்...

சுவிசிலிருந்து பேசியது விடுதலைப்புலிகளா?



# யாழ்ப்பாணத்தில் உருவாகிவரும் ஹம்பாந்தோட்டை



வவுனியாவில் எந்த வீதிகளில் சொதி விட்டு சாப்பிடலாம்? 6



திருமணம் செய்தவர்கள், செய்யப்போகிறவர்களிற்கு அவசியமான சோதிடகுறிப்புக்கள் 9



சரவெடி ஸம்பா 21

# காலம் சொல்லும் பாடம்

கொஸ்கம, சாலவ இராணுவ ஆயுதக்களஞ்சிய வெடிப்பு பேரனர்த்தத்தை உண்டுபண்ணியுள்ளது. 2009 இன் பின்னர் இடையிடையே சில இயற்கை அனர்த்தங்கள் மக்களின் வாழ்வை சீர்குலைத்திருந்தாலும், இராணுவரீதியிலான அனர்த்தம் நிகழ்ந்ததில்லை. இயற்கை அனர்த்தங்களின் காரணங்களை தேடினால் எல்லா காரணங்களின் முடிவிலும் மனிதன்தான் இருப்பான். அவனது செயல்களின் விளைவது. ஆனால் இராணுவ அனர்த்தங்களின் காரணத்தை தேடினால் முதலாவது காரணமாகவே மனிதன்தான் இருப்பான்.

நாடுகளை ஒன்றிணைத்து வைத்திருக்கும் காரணமாக ஆயுதங்களை, இராணுவ உபகரணங்கள் மட்டுமே நம்பியிருந்தால், இனங்களிற்கிடையிலான பிணைப்பை ஆயுதங்களால் மட்டுமே உருவாக்க முடியுமென நினைத்தால், ஆயுதங்கள் மட்டுமே ஒரு மனிதனின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமென நினைத்தால், மனிதர்கள் தமது வரலாறு முழுக்க கொஸ்கமக்களை சந்தித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

தென்னாசியாவிலேயே இராணுவ அடர்த்தி அதிகமுள்ள நாடு இலங்கை. இலங்கை போன்ற சிறிய, குறைந்த மக்கள் தொகை கொண்ட, வளரும் பொருளாதாரத்தை கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கைதான் அதிகமும் இராணுவ மயப்பட்ட நாடு. இராணுவத்தேவைகளிற்காக அதிக நிதியை ஒதுக்கிடும் நாடு. போர்ப்பதற்றத்தையும், இராணுவவாதத்தையும் வைத்து இன்னும் அரசியல் செய்யலாமென்ற மூன்றாம்தர அரசியலை நீடிக்கும் நாடு.

தென்னிலங்கை அரசியலில் இன்றும் இனவாதம், இராணுவவாதம் பேசும் அரசியலின் வலு குறையவில்லை. புதிய ஆட்சிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் விதத்தில் அது நீடித்துக் கொண்டிருக்கிறது.

மனிதர்கள் போர்களை கைவிட்டு வெகுதூரம் முன்னால் போய்க்கொண்டிருக்கிறார்கள். யுத்தம் பிரச்சனைகளிற்கு தற்காலிக தீர்வை தரலாமே தவிர, நிரந்தர தீர்வை தந்ததே கிடையாதென்பதை உலகம் எண்ணற்ற தடவைகள் குறித்தும் வைத்துவிட்டது. ஆனால் இலங்கை வரலாற்றிலிருந்தும், உலகநாடுகளிலிருந்தும் பாடம் படிக்க மறுத்துக் கொண்டேயிருக்கிறது. புதியஅரசின் காலத்தில் இதில் சில மாற்றங்கள் தெரிந்தாலும், இன்னும் விளைவுகள் உருவாகவில்லை.

இலங்கை இராணுவம் உண்மையில் வீங்கித்தான் உள்ளது. அதனால்த்தால் இராணுவ பிரசன்னம் பற்றிய பேச்சுக்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவ்வளவு சிறிய நாட்டில் மிகப்பெரிய இராணுவத்தை எங்கேதான் வைத்திருப்பது?

இந்தளவு பெரிய இராணுவத்திற்கு கைகளில் சமாதானக்கொடியையா கொடுத்துள்ளார்கள்? இல்லைத்தானே. அவர்களிற்கு ஆயுததள பாடங்கள் தேவை. அவற்றிற்கு களஞ்சியசாலைகள் தேவை. இலங்கை போன்ற சிறிய நிலப்பரப்புள்ள நாடுகளில் அவற்றை மக்கள் மத்தியிலேயே களஞ்சியப்படுத்த முடியும். அந்த இடங்களில் அனர்த்தம் உருவாகும்போது நிலைமை விபரீதமாகிறது.

ஆயுதக்களஞ்சியங்களில் வெடிப்பு நிகழும்போது அது அயலிலுள்ளவர்களிற்கு ஆபத்தை உண்டாக்காமல் இருக்கும் வழிவகைகள் பற்றிய பேச்சுக்கள் இனி எழும். சில பாதுகாப்பு முன்னேற்பாடுகளை இராணுவம் செய்யும். எனினும், பாதுகாப்பு ஏற்பாடுகள் தீர்வல்ல. உலகம் முழுக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறி நடந்தவைதான் மனிதவரலாற்றில் கறுப்புப் பக்கங்களாக உள்ள விபத்துக்கள்.

இதில் இன்னொரு விடயமும் உள்ளது. இந்த வெடிவிபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மீது அரசு காட்டும் அதீத அக்கறை. விவகாரத்தின் தீவிரத்தை குறைக்க அப்படியொரு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அது பாரபட்சமான ஒன்றுதான். பாதிக்கப்பட்ட மக்களிற்கு கிடைக்க வேண்டிய மனிதாபிமான உதவிகளை தடுப்பதோ, கொச்சை செய்வதோ நமது நோக்கமல்ல. எனினும், 'உனக்கு வந்தால் தக்காளி சட்னி. எனக்கு வந்தால் இரத்தம்' பாணியில் அரசுகள் செயற்பட முடியாது. நல்லரசுகளிற்கு அது அழகல்ல.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட, உடம்பில் குண்டுச்சிதறல்களுடன் வாழும் எண்ணற்றவர்கள் நம்மத்தியில் உள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களின் மீள்வாழ்வில் அரசு போதிய நடிவடிக்கை எடுக்கவில்லையென்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். நாடாளுமன்ற அமர்வில் சிவசக்தி ஆனந்தனும் குண்டுச்சிதறல்களை உடம்பில் தாங்கியபடி வாழ்பவர்கள் பற்றி சுட்டிக்காட்டியிருந்தார்.போர் எவ்வளவு கொடியதென்பதை ஏழு வருடங்களின் முன்னரே இலங்கை உணர்ந்துவிட்டது. இனியும் ஆயுதங்களை வைத்துக்கொண்டு அதனை திரும்பத் திரும்ப அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டுமா என்பதே சிந்தனைக்குரியது.

இராணுவவாதமும், படை மேலாதிக்கமும் இனநல்லிணக்கத்திற்கான வழிகள் அல்ல. அவற்றை நம்பியிருப்பது இனஐக்கியத்திற்கும், இலங்கையின் அபிவிருத்திக்கும், தனிமனித பாதுகாப்பிற்கும் ஆபத்துக்களைதான் உருவாக்கும். இதற்கு, தமிழ்சிங்கள இனப்பகை தீராமலிருப்பதும் உதாரணம். கொஸ்கம அனர்த்தமும் உதாரணம்.

**தீபம்**

211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562

சந்தா : subs@deepam.lk ☎ 0768255566

விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567

செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



## ரணில் விக்கிரமசிங்க – பிரதமர்

யுத்தத்தின் போது பொதுமக்களுக்கு பாதிப்புகள் நிகழ்ந்தன என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். உடலில் குண்டுத்துகள்களுடன் இருப்பவர்களுக்கு பூரண சிகிச்சைகளை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கின்றது. அத்தோடு குண்டுதுகள்களுடன் வாழும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பான உத்தியோகபூர்வமான அறிக்கை இதுவரையில் கிடைக்கவில்லை. உரிய தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை கையளிக்கவும். உடன் மருத்துவ தேவைகள் காணப்படின் அமைச்சர் சுவாமிநாதன் மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் கலந்தாலோசித்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.



## அஸாத் சாலி – தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர்

ராஜபக்ஷ குடும்பத்தினரை அரசாங்கத்துக்குள் இணைத்துக்கொண்டு நல்லாட்சியை கொண்டுச் செல்ல முடியாது. அவ்வாறு நடந்தால் வீதியில் இறங்கிப் போராடுவோம். நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்குவதற்கு இடமளித்தால் பாரிய பிரச்சினை ஏற்படும். அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுவோம். கோத்தபாய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இரண்டாம் இடத்துக்கு கொண்டுவருவதற்கு பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறு எந்த முயற்சியும் இடம்பெறவில்லை. சர்வதேச தலைவர்கள் ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்து வருவதை பொறுத்துக் கொள்ளாதவர்கள் ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.



## சந்திரிகா – முன்னாள் ஜனாதிபதி

போரின் போது காணாமற்போனவர்கள் உயிருடன் உள்ளனர் என்ற நம்பிக்கை வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட உறவினர்களின் உள்ளத்தில் ஆழமாக பதிந்துள்ளது. ஆகவே மரண சான்றிதழ்களுக்கு பதிலாக காணாமல் போனோருக்கான சான்றிதழை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கிகாரமும் கிடைத்துள்ளது. இதுவரையில் 65 ஆயிரம் முறைப்பாடுகள் காணாமற்போனவர்கள் தொடர்பில் பதிவாகியுள்ளன. இந்நிலையில் இவர்கள் அனைவருக்குமான காணாமல் போனோருக்கான சான்றிதழ் வழங்குவதற்கு அங்கிகாரம் கிடைத்துள்ளது.



## இம்ரான் மஹ்ரூப் – நாடாளுமன்ற உறுப்பினர்

விஞ்ஞான துறை மாணவர்களுக்கும் வெளிவாரி கற்கைகளை வழங்க வேண்டும், தொண்டராசிரியர்களுக்கு நியாயம் வேண்டும், கல்வியல் கல்லூரி அனுமதி மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். வருடாந்தம் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுள் இருபது வீதத்துக்கும் குறைந்தவர்களே பல்கலைகழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர் இதனால் பெரும்பாலானோர் வாய்ப்புகள் இன்றி இருக்கின்றனர் கலைத்துறை வர்த்தகத்துறையில் கற்றோர் வெளிவாரியாக பட்டங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் இருக்கின்றன ஆனால் விஞ்ஞான துறையில் கற்றோர் தாம் விரும்பிய பட்டங்களை வெளிவாரியாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு நமது நாட்டில் குறைவாகவே காணப்படுகின்றது.



## துரைரெட்ணம் – கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பிரதேச வைத்தியசாலைகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. 30 வருடகால யுத்தத்தினால் பாதிப்புக்கு உள்ளாகிய பல தமிழ் கிராமங்களில் உள்ள வைத்தியசாலைகள் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற போதும், அது குறித்து கவனம் செலுத்தாத கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு 90 வீதமான நிதி ஒதுக்கீடுகளை முஸ்லீம் பிரதேச வைத்தியசாலைகளுக்கு மாத்திரமே ஒதுக்கீடு செய்துள்ளது. 2016ம் ஆண்டுக்கு மத்திய அரசாங்கத்தால் கிழக்கு சுகாதாரத்துறைக்கு 10,63,79 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 90 வீதத்துக்கு மேற்பட்ட நிதி முஸ்லிம் வைத்தியசாலைக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது .

# க்ளிக் பக்கம்





படம்: சுயந்தன்

இடம்: பண்ணைப்பாலம்

பண்ணைப்பாலத்தில் ஒரு மாலைப்பொழுது காட்சி.

**என்னைப்பற்றி:** கிளிநொச்சியை சேர்ந்த நான் எஸ்.சுயந்தன். ஊடககற்கைநெறி மாணவன்.

குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk



www.facebook.com/Siya PJ

அதிகம் நேசிப்பவர்களிடம் தான்
அதிகம் கோபிக்கின்றோம்
அவர்களை வெறுத்தல்ல
அவர்கள் எம்மை வெறுத்திடுவார்களோ என்ற ஏக்கத்தில்.....



www.facebook.com/pirainila.m·

வீட்டுப்பிரச்சினை, வீதிப் பிரச்சினை, விஞ்ஞானப் பிரச்சினையெண்டு எல்லாப் பிரச்சினையும் பெரும்பிரச்சினையான எக்ஸாம் பிரச்சினைக்குள்ள வாறதைத்தான் நரகத்தின் ஒட்டுமொத்த சாபம் எண்டுசொல்லுறது.



www.facebook.com/kanapathipillai.prapakaran

'தூண்டில்' என்னும் துரோகத்தை கண்டுபிடித்தற்காக முழு மனித இனமுமே நாண்டுக்கிட்டு சாகணும். !



www.facebook.com/nadarajah.vinotharan

செட்டிகுளம் ஆஸ்பத்திரியை நினைக்க கூடாத நினைவுகளில் எல்லாம் அந்த இளம் தாய் வருகிறாள். அவளை கலைய விடாமல் கண்ணீர் கட்டுகிறது. அவளை பெண்ணென்றோ ; அல்லது அவளென்றோ எட்டத்தில் விட முடியவில்லை. அவள் என் மூத்த சகோதரி அல்லது இளையவள். அவளுக்கு என்னென்னமோ காரணங்களால் கலியாணம் ஆகியிருக்கலாம். அதனால் அவளுக்கொரு கைக்குழந்தை. பத்து நாளைக்கு மேலாக இரவில் தூங்கவில்லை. அவளும் ஒரு கண் நித்திரை இல்லாமல் அழுகையை முடித்திருக்கிறாள். பாலில்லை பாலே இல்லை!. ஸேர், இப்படி கூப்பிட்டது கூட அவளுக்கு மிக அந்நியமான சொற்கள் தான். மூன்று நாளாக ஒரு சுடுதண்ணி போத்திலுக்காய் ஓடுகிறாள்; படிகளால் உலாஞ்சி இறங்குகிறாள்; சுதர்சன் டொக்டரை கெஞ்சுகறாள்; அவளும் மொழியும் அத்தனையும் அவளது ஊரில் அந்நியம்; அது எந்த நிச்சயங்களும் இல்லாத சூனிய பெருவெளி! கொடியவர்கள் ஏதோவொரு நிறுவனத்தை சார்ந்தவர்கள் சில சுடுதண்ணி போத்தல்களை குழந்தைகள் வைத்திருந்த என் சனங்களிடம் வீசிவிட்டு வேகமாக கலைந்து துவிட்டார்கள். பெரிய கியூவில் மருந்துக்கு நின்றவள் இந்த மணித்தியாலத்தை விட்டுவிட்டாள் . மீண்டும் அழுகிறாள். ஸேர்களுக்குள் அடைக்கப்பட்டுள்ள அவள் எப்படி என்னை அண்ணை தம்பி என கூப்பிடுவாள்? சிலர் பால் மா பெட்டிகளுக்காக இந்த போத்தல்களை மூலையில் இலையான்காளல் நிறைந்த அந்த கன்ரீனல் விற்று விட்டார்கள். எல்லோரையும் கேட்கவில்லை. அருகில் வந்து மெதுவாக கேட்டாள். அந்த குழந்தையின் அப்பா எப்படியும் வந்திடுவர். அப்ப கட்டாயமா காசு வாங்கி தாறன். என்னால் முடியவில்லை. அந்த போத்தலும் சில்லறைகளும் அவளிடம் திணித்தேன்.

அந்த குழந்தையின் தகப்பன் எங்கே? இருக்கிறானா? இல்லையா? வருவானா? அல்லது அழித்தார்களா? தடுப்பில் தள்ளிவிட்டார்களா? இனிமேல் ஒரு நோடி தன்னும் காண்பார்களா? எந்த நம்பிக்கையில் அப்பா வந்த உடனை அந்த காசை திருப்பி தந்திடுவன் எண்டாள். நினைக்கும் போதெல்லாம் கலங்குகிறது. நான் தான்; நானே தான் மீள முடியாத பெரும் கடன்காரனாய் கரைகிறேன்.





www.facebook.com/s.m.sugumar.sugumar

நன்றி உள்ள ஜீவன் என்பதற்கு இந்த புகைப்படம் போதும்



மட்டக்களப்பு, காத்தான்குடி காத்தான்குடியிலுள்ள மெத்தைப்பள்ளி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 10 வயதுடைய மாணவன் ஆசிரியை ஒருவரினால் கடுமையாகத் தாக்கப்பட்டு காத்தான்குடி ஆதார வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




தீபத்தின் சமூக வலைத்தளங்களில் கடந்தவாரம் அதிகமாக பகிரப்பட்டது இந்தப்படம். கொட்டகலையில் உள்ள வீடொன்றில் பிள்ளையார் உருவத்தில் பிலாக்காய் காய்த்தது. விடயம் காட்டுத்தீயாக பரவ, அந்த வீட்டிற்கு பெருமளவானவர்கள் பக்திக்கோலத்தில் படையெடுத்த சம்பவமும் பதிவாகியது.



அவிசாவளை நகரில் காதல் தோல்வியால் இளைஞன் ஒருவன் தனக்குத்தானே தீ வைத்துக்கொண்டான் என சமூகவலைத்தளங்களில் தீயாக பரவிய படம் இது. எனினும், இந்த செய்தியை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை.

# யாழ்ப்பாணத்தில் உருவாகிவரும் ஹம்பாந்தோட்டை


எஸ்.என்.நிக்ஷன்




யாழ்பாண நகரத்திலிருந்து செல்லும் ஏ9 வீதியோர கிராமங்களின் பெயர்களை வரிசையாக உச்சரித்துக் கொண்டு வாருங்கள். கச்சேரியடி, அரியாலை, நாவற்குழி, என நீளும் பெயர்களின் இடையே ஒரு பெயர் புதிதாக நுழைந்து கொண்டுள்ளது. அது சிங்கள ராவய கிராமம்.

நாவற்குழி சந்திக்கு அண்மையில் உள்ள வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் உருவாக்கப்பட்ட சிங்கள குடியேற்றமே இப்பொழுது சிங்கள ராவய கிராமமாக உருவெடுத்துள்ளது. அதாவது தமிழர்களின் பாரம்பரிய நிலத்தில் உருவாகியுள்ள புதிய சிங்கள குடியேற்ற கிராமம். யாழ்நகரத்தின் நுழைவாயிலில் இனி உங்களை வரவேற்கப் போவது சிங்கள ராவயதான்.

நாவற்குழிசந்திக்கு அண்மையில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பகுதியே முழுமையான சிங்கள குடியேற்றமாக்கப் பட்டுள்ளது. முழுக்கமுழுக்க சிங்களம் பேசுபவர்கள், சிங்கள பெயர்பலலைக என காட்சிதரும் இந்த பகுதிக்குள் நுழைந்தால்



ஹம்பாந்தோட்டைக்குள் நுழைந்துவிட்டோமோ என நினைக்க வைக்கிறது.

சிங்கள ராவய கிராமம் அமைந்துள்ள பகுதி வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமானது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் இந்த ஆக்கிரமிப்பு கிராமத்திற்கு விதை போடப்பட்டது. அங்கு திடீரென இரவோடிரவாக சில சிங்கள குடும்பங்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். அவர்களிற்கு அந்த நிலங்களை பிரித்து காணி உறுதி வழங்கி, சிங்கள குடியேற்றத்திற்கு பிள்ளையார் சுழி போட்டு வைத்ததும் மகிந்த ஆட்சிதான்.

தமிழர் பிரதேசத்தில் நுழைந்து குடியேற்றம், விகாரை அமைப்பதையே தலையாய காரியமாக நினைக்கும் சிங்கள அமைப்புக்கள் பல உள்ளன. மகிந்த கோடு கீற அவர்கள் றோடு (ஸிளிகிஞ்) போட்டார்கள்.

சிங்கள ராவய என்ற அமைப்பு இதில் முன்னணியில் நின்றது. அவர்கள் பல்வேறு இடங்களிலிருந்தும் நிதியை திரட்டி அந்த கிராமத்திற்கு கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள குடியேற்றத்திற்கு அண்மையில் உள்ள பாரம்பரிய தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் எந்த அடிப்படை வசதியுமில்லாமல் இருக்க, சிங்கள குடியேற்றம் மட்டும் சகல வசதிகளுடனும் உள்ள மர்மம் இதுதான். அங்கு குடியிருக்கும் சிங்களவர்களிற்கு தேவையான சகல உதவிகளும் பணம் உட்பட வழங்கப்படுவதாக சொல்கிறார்கள்.

சிங்கள குடியேற்றம் அமைந்தால் அடுத்து என்ன நடக்குமென்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆரம்பத்தில் குடியேற்றமாக அழைக்கப்பட்டது, இப்பொழுது கிராமமாகி விட்டது. அடுத்தது ஒரு விகாரை அமைக்கப்படவுள்ளது. இதற்கு தீவிரமாக நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் விகாரை கட்ட பணம் ஒதுக்கியிருக்கிறார் என்றால் பாருங்கள்.

தமிழர் பகுதிகளில் சிங்களவர்களோ, சிங்களவர் பகுதிகளில் தமிழர்களோ குடியிருப்பது தவறல்ல. நமக்கு நல்லிணக்க குடியிருப்புக்கள் அவசியம்தான். ஆனால், நல்லிணக்க குடியிருப்புக்கள் வேறு, பலவந்த சீண்டல் குடியிருப்புக்கள் வேறு. தென்பகுதியில் உள்ள தமிழர்கள், அங்கு காணி, வீடு வாங்கி குடிபெயர்ந்தவர்கள். நாவற்குழி குடியிருப்பு தமிழர்களை சீண்டி உருவாக்கப்பட்டது.

நாவற்குழி சிங்கள ராவய குடியிருப்பின் வரலாற்றை கவனித்தால் ஆரம்பத்திலிருந்தே இது தமிழர்களை சீண்டி, மல்லுக்கட்டி உருவாக்கப்பட்டதென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அங்குள்ள தமிழ்மக்களிற்கு ஏட்டிக்குப்போட்டியாகவே கிராமத்தின் செயற்பாடு அமைந்துள்ளது.


இப்பொழுது சிங்கள ராவய கிராமத்திற்கு பின்பகுதியில் உள்ள தமிழ் மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. பல்வேறு விதமான நெருக்கடிகள் தமக்கு ஏற்படுத்தப்படுவதாக அங்குள்ள மக்கள் முறையிடுகிறார்கள். இராணுவத்தினர் வந்து தம்மை விரட்ட முனைகிறார்கள் என்பது மக்களின் குற்றச்சாட்டு. வடக்கு முதல்வரிடமும் இதுபற்றி முறையிட்டுள்ளனர். தமிழ் மக்களை இராணுவம் அங்கிருந்து விரட்ட முனைகிறதென்பதை அறிந்ததும் சிவாஜிலிங்கம் அங்கு சென்று, மக்களை வெளியேற விடாமல் தடுத்திருந்தார்.

வடக்கில் பல இடங்களிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில், யாழ்நகர நுழைவாயிலிலும் பலவந்த பௌத்த விகாரை அமைவது நிலைமையை மேலும் சிக்கலாக்குவதாகவே முடியும். இலங்கை பல்லினநாடு,யாரும் எங்கும் குடியேறலாமென வாதம் புரிபவர்கள் கவனிக்க வேண்டியது, திட்டமிட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்தும் வில்லங்கத்தை. சிங்களவர்கள் வடக்கில் நிலம் வாங்கி குடியிருப்பது எந்த சர்ச்சையையும் தோற்றுவிக்காது. யாழ்நகர மையத்தில் கூட அப்படி யாரும் குடியிருக்கலாம். ஆனால் அரசநிறுவனங்களின் துணையுடன் தமிழர் நிலங்களில் குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதே பிரச்சனைக்குரியது. அந்தபகுதியில் ஏற்கனவே தமிழ்மக்கள் குடியிருக்கும் நிலையில், அவர்களை வெளியேற்றிவிட்டு சிங்களவர்களை குடியிருத்துவது பலவந்த குடியிருப்பல்லாமல் வேறென்ன?

**பதிவுசெய்யப்பட்ட விகாரைகள்**
வவுனியா 29
யாழ்ப்பாணம் 09
முல்லைத்தீவு 06





# அமைச்சர் சத்தியலிங்கத்தை “போட” 3 கோடி டீல்...

## சுவிசிலிருந்து பேசியது விடுதலைப்புலிகளா?

வ.நரேஜி

வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்திற்கு அச்சுறுத்தலாம் என்பது மாதிரியான செய்தியொன்றை பலரும் கேள்விப்பட்டிருப்பார்கள். வெளியில் தலை காட்ட முடியாமல் அமைச்சர் வீட்டுக்குள் பதுங்கியிருந்தார் என்ற தகவலோ, விடயம் சாதாரண விவகாரம் இல்லையென்பதே பெரும்பாலானவர்கள் அறியாதது.

அமைச்சர் தரப்பு வெலவெலத்துப் போனதற்கு காரணம், அமைச்சரை “போட“ சுவிசிலிருந்து மூன்றுகோடி ரூபா பேரம் பேசப்பட்டது, இதில் விடுதலைப்புலிகளும் தொடர்புபட்டுள்ளார்கள் என்ற செய்தியே. இதுபோன்ற பல்வேறு செய்திகள் பரபரப்பாக உலாவ, இந்த விவகாரத்தில் என்னதான் நடந்தது என்பதை அறிய கிளம்பினோம்.

வடமாகாணசபைக்குள் அண்மைக்கால மாக சில குத்துவெட்டுக்கள் நீடிக்கின்றன. முதலமைச்சரிற்கு எதிரான அணியின் முன்வரிசை உறுப்பினராக சத்தியலிங்கமும் மாறிவிட்டார் என்ற பேச்சுக்கள் அடி பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், இந்த முரண்பாடுகள்தான் விவகாரத்தின் பின்னணி யில் இருக்கலாமென முதலில் கருதப்பட்டது. எனினும், பொலிசார் மர்மத்தை துலக்கி சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். இந்தவிவகாரத்தின் பின்னணியில் விடுதலைப் புலிகள் இருந்தார்களா என்பதையும் தெளிவு படுத்தியுள்ளனர். இந்த கைதின் மூலம் நீண்டநாள் கப்பம்பெறப்பட்ட மர்மங்களை யும் பொலிசார் அம்பலப்படுத்தியுள்ளனர்.


எஸ்.பி.சீ.எஸ.கே.செனரத்

இதுபற்றிய பல்வேறு தகவல்களை வவுனியா பொலிஸ்நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.பி.சீ.எஸ்.கே.செனரத் பகிர்ந்து கொண்டார்.

கடந்த மாதம் 18ம் திகதி வடமாகாண சுகாதார அமைச்சரின் சகோதரரின் மனைவியின் கைத்தொலைபேசிக்கு அழைப் பொன்று வந்துள்ளது. அதில் பேசியவர்

“உங்கள் மச்சானுக்கு ஆபத்து ஏற்பட் டுள்ளது. இதை அவரிடம் சொல்லவும்“ எனக் கூறியுள்ளார். “இதை அவருக்கு சொல்ல வேண்டியது தானே“ என கூறி அண்ணி தொலைபேசி அழைப்பை துண்டித்துள்ளார். எனினும் அழைப்பை ஏற்படுத்தியவர் விடவில்லை. தொடர்ந்தும் அழைப்பு வந்து கொண்டிருக்கவே, சுகாதார அமைச்சரின் சகோதரர் கதைத்துள்ளார்.

அப்பொழுதுதான் எல்லோரையும் தூக்கி வாரிப்போடும் அந்த தகவலை அழைப்பை ஏற்படுத்தியவர் சொன்னார். 'நான் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர். புனர்வாழ்வு பெற்று இப்பொழுது வெளியில் இருக்கிறேன். அமைச்சரை போட்டுத்தள்ள சுவிஸ்சில் இருந்து என்னுடன் 3 கோடி ரூபா டீல் பேசப்பட்டுள்ளது.' என்று அதிர்ச்சிக் குண்டை போட்டுள்ளார். இந்த தகவலை கேட்டு வெலவெலத்துப் போனவர், சகோதர ரான அமைச்சரின் தொலைபேசி இலக்கத்தை மறுநாள் 19 ஆம் திகதி கொடுத்துள் ளார்.

விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப் பினர் என தன்னை அடையாளப்படுத்திய நபர் அடுத்தநாள் (20ம் திகதி) சுகாதார அமைச்சரின் கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அமைச்சர் அழைப்பை ஏற்றுள்ளார். அப்பொழுது அந்தநபர் இப்படி சொன்னார் 'நான் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி. புனர்வாழ்வில் இருந்த எங்களை சுவிஸ்சில் உள்ளவர்கள்தான் வெளியில் எடுத்து விட்டார்கள். இப்பொழுது எங்களை வைத்து வேறு வேலைகளை செய்விக் கிறார்கள். நாங்கள் ஏழு பேர் உள்ளோம். அவர்கள் சொல்லி மூன்று கொலை களும் செய்தனாங்கள். தற்போது உங்களை போட்டுத்தள்ள எங்கள் ஏழுபேருக்கும் மூன்று கோடி ரூபா டீல் பேசப்பட்டுள்ளது. நாங்கள் அதை செய்தே முடிக்க வேண்டும். அல்லது அவர்கள் எம்மை முதல் செய்த கொலைகளுக்கு காட்டிக் கொடுத்து விடு வார்கள். என்ன செய்வது' என கேட்டார்.

இதைக்கேட்டதும் சுகாதார அமைச்சரும் ஆடிவிட்டார். உடனடியாக வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவல கத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள் ளார். டிஐஜி தேசபந்து தென்னக்கோன், எஸ்.எஸ்.பி வசந்த விக்கிரமசிங்க, ஏஎஸ்பி பியசிறி பெர்ணான்டோ, வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமரட்ன விஜயமுனி ஆகியோரின் வழிகாட்டலில் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.பி.சீ.எஸ்.கே. செனரத் தலைமையில் பொலிஸ் சார்ஜன் (23298) சிசில், கொன்ஸ்டபிள் (36508) ஜெயபிரகாஸ், (50955) அபயரத்தின, (30183) ஜானக, (37437) திலகரத்தின, (84963) நிஜாம் ஆகியோர் அடங்கிய குழு துரித விசாரணைகளை ஆரம் பித்தது. சுகாதார அமைச்சருக்கு பொலிசார் கொடுத்த முதல் அறிவுறுத்தல், தொலைபேசி யில் தொடர்பு கொண்டு மிரட்டிய நபருடன் தொடர்ந்தும் தொடர்பில் இருங்கள் என்பது.

மீண்டும் அந்த அனாமதேயநபர் அமைச்சரிற்கு அழைப்பை ஏற்படுத்தினார். இப்பொழுது வேறுவிதமாக உரையாடலை நகர்த்தினார். “நீங்கள் யுத்த காலத்திலும் சேவை செய்திருக்கிறீர்கள். தற்போதும் செய்கிறீர்கள். அதனால் உங்களை “போட“ விருப்பம் இல்லாமல் இருக்கிறது. என்ன செய்வது? “என கேட்டுள்ளார். ஏற்கனவே பொலிசார் அறிவுறுத்தியதற்கு அமைவாக, அந்த நபரிடமிருந்து பேச்சோடுபேச்சாக தகவல்களை கறப்பதில் அமைச்சர் குறியாக இருந்தார். “என்னை கொல்லுமாறு யார் கூறினார்கள்?“ என அமைச்சர் கேட்டார்.

“அமைச்சரவை போட்டிதான் காரணம். உங்கட ஆட்கள் சுவிஸ்சில் உள்ள எங்கள் மேலிடத்திற்கு முறைப்பாடு செய்து, உங்களை போடச்சொல்லி கேட்டிருக் கிறார்கள். இப்ப மேலிடத்திருந்து எங்க ளுக்கு ஓடர் வந்திருக்கிறது, உங்களை போடச்சொல்லி. அவர்கள் சொன்னதை நாங்கள் கட்டாயம் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் நாங்கள் இங்கு இருக்க முடியாது“ என அந்த மர்மநபர் கூறியிருக் கிறார். பின்னர், “நாங்கள் ஏழுபேரும் இங்கு இருக்காமல் தப்பி இந்தியா போவதற்கு ஒரு படகும் 50 குதிரை வலுக் கொண்ட இரு இன்ஜின் மற்றும் படகு ஓட்டிக்கு ஒரு இலட்சம் ரூபாய் பணம் இவற்றை தந்தால் நாம் உங்களை போடாமல் தப்பி ஓடி விடுவோம்” எனத் தெரிவித்துள்ளார்.

“படகு,இஞ்சின் என்னிடம் இல்லையே.. எப்படி நான் அதை வாங்குவது” என அமைச்சர் கேட்டபோது, அதை வாங்கு வதற்கும் படகோட்டிக்குமாக 12 இலட்சம் ரூபாய் பணத்தை தொலைபேசி நபர் கோரியுள்ளார். இவ்வாறாக இவர்களது தொலைபேசி உரையாடல்கள் இடம் பெற்று வந்த நிலையில் பொலிசார் சூட்சு மமான முறையில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தொலைபேசி நபரும் பொலிசாரிடம் சிக்கக் கூடாது எனக் கருதி மிகவும் சூட்சுமமாக தொலைபேசி உரையாடல்களை முன்னெடுத்திருக்கிறார். அவரது தொலை பேசியில் வவுனியா, கொழும்பு, பதுளை ஆகிய இடங்களில் இருந்து வாங்கப்பட்ட சிம் அட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நீதிமன்ற அனுமதியைப் பெற்ற பொலிசார், தொலைபேசி வலையமைப்பில் கவனம் செலுத்தி சூட்சுமமான முறையில் மர்ம நபரை பின்தொடர முயற்சித்துள்ளனர். எனினும் இந்த முயற்சி ஓரளவிற்குமேல் நகராமல் நின்றுவிட்டது. தொலைபேசி வலையயமைப்பினூடாக பொலிசார் பின் தொடர்வார்கள் என்பதை விலாவாரியாக அறிந்த கில்லாடியொருவனே தண்ணீர் காட்டுகிறான் என்பது பொலிசாரை மேலும் எச்சரிக்கைப்படுத்தியது.

எனினும், பல்வேறு மாற்றுவழிகளை பயன்படுத்தி கில்லாடியின் இருப்பிடம்,பெயர் விபரங்களை பொலிசார் கண்டறிந்தனர். அடையாளம் காணும்போது அவர் கிளிநொச்சியில் தங்கியிருந்தார். அவருடன் வேறுயாராவது தொடர்பில் இருக்கி றார்களா என்பதை கண்டறிவதற்காக சிவில் உடையில் மூன்று நாட்களாக பொலிசார் அவரை பின்தொடர்ந்தனர்.

இறுதியாக இம்மாதம் 2ம் திகதி அதிகாலை வவுனியா செல்வதற்காக பஸ்சில் ஏறினார். சிவில் உடை பொலிசாரும் அவரை பின்தொடர்ந்தனர். வவுனியா சாந்தசோலை சந்திக்கு அதிகாலை 5 மணியளவில் வந்துசேர்ந்தது. அந்த நபர் பஸ்சிலிருந்து இறங்கினார். இரகசிய பொலிசார் கொடுத்த தகவலின் அடிப்படையில் அந்த இடத்தில் வைத்தே அவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கைதானவர் வவுனியா புதுக்குளத்தில் வசித்துவரும் மாடசாமி சுதாகரன் என்ற 38 வயதானவர் என்பது அடையாளம் காணப்பட்டது. இவர் கிளிநொச்சி இரத்தினபுரத்தை சேர்ந்தவர். 1996இல் அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்து, வவுனியா வேப்பங்குளம் முகாமில் தங்கியிருந்தார். பின்னர் 1997இல் மறவன்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டார். அப்பொழுது வவுனியாவில் கொடி கட்டி பறந்த இயக்கமொன்றின் உறுப்பினராகி யுள்ளார்.

பின்னர் திருமணம் செய்து, சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் அண்ணா வின் வீட்டிற்கு அருகில் உள்ள வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். பெயின்றராக வேலைசெய்து வந்த இவர் இதுபோல வேறு கப்பம் கோரிய சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்ததாக பொலிசார் கூறுகின்றனர். இவரிற்கு எதிராக கிளிநொச்சியில் மட்டும் மூன்று கப்பம்கோரிய முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தற்போது விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த கப்பம்கோரலின் பின்னணியில் விடுதலைப் புலிகளோ அல்லது வேறு ஆயுதக் குழுக்களோ நேரடியாக சம்பந்தப்படவில்லை. இது தனிநபர் ஒருவரின் கப்பம்கோரல் நடவடிக்கை. இதனை பொலிசார் உறுதிசெய்துள்ளனர். வறுமைகாரணமாக இப்படியான நடவடிக் கையில் இறங்கியதாக அவர் பொலிசாரிடம் வாக்கு மூலமளித்துள்ளதாக தெரிகிறது.

மாகாணசபைக்குள் நிலவும் குத்துவெட்டுக் களை சாட்டாக வைத்து குற்றக்கும்பல்கள் கூட தமது கைவரிசையை காட்ட ஆரம்பித் துள்ளனர். இந்த குத்துவெட்டுக்களை பார்த்து மக்கள் ஏற்கனவே முகம் சுளித்தும் போயிருக்கிறார்கள். இந்த சம்பவங்கள் எல்லாம் மாகாணசபை “குத்துவெட்டு” காரர்களிற்கே சமர்ப்பணம்!



# சொதி விட்டு சாப்பிடக்கூடிய வவுனியா வீதிகள்



வன்னிமது

வீதிகள்தான் ஒருநாட்டின் நரம்பு மண்டலங்கள். போக்குவரத்து, பண்டங்களை நகர்த்துதல் என அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் வீதிகளின் தரத்திலேயே தங்கியுள்ளது. ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதிகளில் தங்கியுள்ளதென்பது பொருளாதார நிபுணர்கள் சொல்லும் அடிப்படை சூத்திரம்.

இலங்கை வீதிகள் ஓரளவு நல்லநிலையில் இருக்கிறதென்ற கருத்து இருந்தாலும், அது தென்னிலங்கையை மையப்படுத்திய கருத்தே. வடக்கு, கிழக்கில் நிலைமை சொல்லிக் கொள்ளும் விதத்தில் இல்லை. பெருநகரங்களில் உள்ள வீதிகள், பிரதான நகரங்களை இணைக்கும் வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதே தவிர, இன்னும் ஒருமுறைகூட தார் ஊற்றப்படாத வீதிகளே ஏராளமாக உள்ளனே என்பதே யதார்த்தம். தமது வீதிகள் புனரமைக்கப்பட்டதை பார்த்தேயிராத தலைமுறை வாழும் பிரதேசங்கள் இவை.

வடக்கின் நுழைவாயில் வவுனியாவின் நிலையெப்படி உள்ளதென்பதை இந்த வாரம் ஆராய்ந்தோம்.

கடந்த ஆட்சியின்போது வவுனியாவை ஊடறுத்து செல்லும் ஏ9 வீதி, மாவட்டத்தில் உள்ள மதவாச்சி, செட்டிக்குளம் ஊடாக மன்னார் செல்லும்வீதி, வவுனியா நகரத்தை சுற்றியுள்ள வவுனியா நகரசபைக்கு உட்பட்ட வீதிகள் காப்பெற் வீதிகளாக்கப்பட்டன. வவுனியா செல்கிறோம் என சுற்றுலா வருபவர்கள் காப்பெற் வீதிகளால்த்தான்





பயணிப்பார்கள். சுற்றுலாப் பயணிகள் பார்க்கும் வவுனியா மட்டுமே வவுனியா அல்ல. அசல் வவுனியா என்பது நகரத்திற்கு அப்பால் வெகுதொலைவில் சின்னஞ் சிறிய கிராமங்கள், புழுதி பறக்கும் வீதிகள், காட்டோர கிராமங்களில் உள்ளது. அதாவது அபிவிருத்தியின் எந்தச்சுவடும் பதியாமல் வவுனியாவின் ஏராளம் கிராமங்கள் உள்ளன.

வவுனியாவின் பெரும்பாலான கிராமப்புற வீதிகளில் இன்றும் புழுதி பறக்கிறது, அல்லது 'சொதி விட்டு சாப்பிடலாம்' என உள்ளூரில் ஜோக்கடிக்கிறார்கள்.

யுத்தத்தில் மரணமடைந்தவர்களின் உயிரைத்தவிர மிச்சம் அனைத்தையும் தருவோம் என தமிழ்பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் அட்சரம் பிசகாமல் சொல்லிக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் சரி, ஆட்சிமாற்றத்தின் பின்னரும் சரி வவுனியாவின் கிராமங்களிற்கு விமோசனம் கிட்டவில்லை. மகிந்த ராஜபக்சவின் காலத்தில் தமிழ் கிராமங்கள் முழுமனத்துடன் அபிவிருத்தி செய்யப்படவில்லையென்ற குற்றச்சாட்டும் உள்ளது. இதுதவிர கடந்த காலத்தில் வன்னி அமைச்சர் ஒருவரின் கைங்கரியத்தால் தமிழ் கிராமங்களிற்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறிடங்களிற்கு மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு உதாரணம் சின்னத்தம்பனை கிராமம். மீள்குடியேற்றக் கிராமமான சின்னத் தம்பனையிலுள்ள தலையாய பிரச்சனை வீதி சீரின்மை. வீதிப்புனரமைப்பிற்காக நிதி ஒதுக்கப்பட்டபோதும், இறுதியில் அது மாற்றப்பட்டது. நீலியாமோட்டை, ஆண்டியாகுளத்தினூடாக செட்டிக்குளம் செல்லும் வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. ஆட்கள் தொகை குறைந்த இந்த கிராமத்தில் முஸ்லீம் மக்கள்தான் அதிகமாக வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா பிரதேசசபைகள் பெரும்பாலானவற்றின் பராமரிப்பின்கீழ் புனரமைக்கப்படாத வீதிகள் உள்ளன. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசத்தில் மாத்திரம் கிட்டத்தட்ட 1250 கிலோமீற்றர் வீதிகள் புனரமைக்க வேண்டியுள்ளது.

அதிக வீதி புனரமைக்கப்படாமல் இருக்கும் பகுதிகளென்றால் அது வடக்கு, கிழக்கு பிரதேசங்களாகத்தான் இருக்கும். வடக்கு, கிழக்கின் நரம்பு மண்டலங்களை சரி செய்து, புது இரத்தம் பாய்ச்ச வேண்டியது யாருடைய பொறுப்பு?

### பூவரசன்குளம் செட்டிக்குள வீதி

பூவரசன்குளத்தில் இருந்து சுமார் 20 கிலோமீற்றர் தூரமான இந்த பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் உள்ளது. போக்குவரத்திற்கு சிரமமான நிலையில் காணப்படுகிறது. பூவரசன்குளத்தில் இருந்து கங்கங்குளம், சண்முகபுரம், தட்டான்குளம், கந்தசாமிநகர் உட்பட பல கிராமங்களுடாக செட்டிகுளம்

---

வீதி புனரமைப்பில் நிலவும் மந்தம் பற்றி பிரதேசசபைகளிடம் கேட்டால், அவர்கள் சில காரணங்களை சொல்கிறார்கள். அதில் முதன்மையானது கிரவல் தட்டுப்பாடு. வவுனியாவில் அதிகம் கிடைக்கும் கிறவலை வீதிப்புனரமைப்பிற்கு பயன்படுத்த முடியாதுள்ளதாக கூறுகிறார்கள். காரணம், அதிகாரிகள் விரைவாக அனுமதி வழங்குவதில்லையாம். அனுமதி கிடைத்தாலும், மழைக்காலத்திற்கு கிட்டவாகத்தான் அனுமதிக்கிறார்களாம். மாறாக, வெளியிடங்களிற்கு கிறவல் தாராளமாக செல்கிறதென்கிறார்கள்.

---

### சிவசக்தி ஆனந்தன்
பாராளுமன்ற உறுப்பினர்



சுனுயுஇசுனுனுஇ உள்ளூராட்சி சபைகள் போன்ற மூன்று திணைக்களத்திற்குட்பட்ட பிரதான வீதிகள், கிரமப்புற வீதிகள் நீண்டகாலமாக திருத்தப்படவில்லை என்ற பாரிய குற்றச்சாட்டு மக்கள் பிரதிநிதிகளை நோக்கி வைக்கப்படுகிறது. எதிர்ப்பு போராட்டங்களும் நடந்துள்ளன. நகரப்புறங்கள், கிராமப்புறங்களில் கிட்டத்தட்ட 1000 கிலோமீற்றருக்கு மேலான வீதிகள் திருத்தப்படாமல் இருப்பதால் போக்குவரத்தில் பெரிய சிரமங்கள் உள்ளன. ஒழுங்கிணைப்புக்குழு கூட்டங்களில் இதுபற்றி பேசியுள்ளோம்.

உண்மையில் இந்த பாதைகளை திருத்துவதற்கு பெருமளவு பணம் தேவைப்படுகின்றது. மாகாணசபைகளின் கீழ் உள்ள வீதிகளை திருத்துவதற்கு மத்திய அரசாங்கம் நிதி வழங்கினால்தான் உள்ளூராட்சி வீதிகளையும், சுனுனு வீதிகளையும் முழுமையாக செய்யமுடியும். நாங்கள் தற்சமயம் சுனுயு உடன் பேசியுள்ளோம். வடமாகாணத்தில் 1000 கிலோமீற்றருக்கு மேல் காப்பெற் வீதியாக போடுவதற்கான ஆரம்ப பணிகளில் சுனுயு ஈடுபடுகிறது. மதிப்பீடுகள், பாதை தெரிவு போன்றவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அனேகமாக 2017ம் ஆண்டு வடமாகணத்தில் இருக்கும் 1000 கிலோமீற்றர் வீதிகளிற்கு காப்பெற் இடப்பட்டுவிடுமென கூறுகிறார்கள்.

அதேவேளை மாகாணசபைகளுக்குட்பட்ட வீதிகளை புனரமைப்பதற்கு மத்திய அரசாங்கம் போதியளவு நிதியை வழங்க வேண்டும். பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களிடம் இருக்கின்ற நிதிகளை கொண்டும் பிரதேச சபைகளுக்குள் இருக்கின்ற சொற்ப நிதியினை கொண்டும் தற்காலிக வீதிகளை செய்வதிலும் பிரச்சனையுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற பல கூட்டங்களிலும் அரசாங்க அதிபருக்கும் தெரிவித்துள்ளோம். கடந்த 06 மாதங்களுக்கு மேலாக குறிப்பிட்ட வீதிகளை புனரமைப்பதற்கு வனஇலாக்கா திணைக்களம் தடைவிதித்து வருவதுடன், தங்கள் திணைக்களம் ஜனாதிபதியின் கீழ் வருவதால் தாங்கள் இதற்கான அனுமதியை பெறுவதில் சிரமங்கள் உள்ளதாக கூறுகின்றனர்.

அதே நேரத்தில் வவுனியா மாவட்டத்தில் இருந்து வியாபார நோக்கத்திற்காக வெளியே கொண்டு செல்லப்படுவதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம். குறிப்பிட்ட சொற்ப நிதியில் தற்காலிகமாகவேனும் கிரவல் இட்டு வீதிகளை செப்பனிடுவதற்கு மாவட்டத்தில் எவ்வளவு கிரவல், எந்தெந்த வீதிகள் திருத்த வேண்டி இருக்கின்றது என்பதற்கு ஜனாதிபதி மாவட்ட அரசாங்க அதிருக்கு அதற்கான அதிகாரத்தினை வழங்கி கிரவலை எடுத்து கிரமப்புற வீதிகளை தற்காலிகமேனும் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல தடவை நாங்கள் முறையிட்டுள்ளோம்.

01.06.2016 அன்று வவுனியா அரசாங்க அதிபரின் தலைமையில் வனஇலாக்கா திணைக்களம், வீதி அபிவிருத்தி தினைக்களம் உட்பட சம்மந்தப்பட்டவர்களை அழைத்து கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. எங்களை பெறுத்தவரையில் மத்திய அரசாங்கம் இப்பாதைகளை அமைப்பதற்காக பெரும் தொகை நிதி தேவைப்படுகின்றது எனவே இதற்கான நிதியினை வழங்குவதன் ஊடாக தான் இப்பிரச்சனைக்கு தீர்வு எட்ட முடியும்.



**சுகந்தி கிஷோர்**
செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் கீழ் 1250 கிலோமீற்றர் வீதிகளும் 42 கிராமசேவகர்கள் பிரிவுகளும், 182 கிராமங்களும் உள்ளன. இந்த கிராமங்களில் அண்ணளவாக 100,000 மக்கள் வாழ்கிறார்கள். பொதுவாக எமது சபைக்கு கீழுள்ளவை பெரும்பாலும் மீள்குடியேற்ற கிராமங்கள். இந்த மக்களின் முக்கிய வேண்டுகோளாக இருப்பது வீதி திருத்தம் மட்டுமே. சுமார் 700 வீதிகளை அடையாளம் கண்டு 25 கிலோமீற்றர் வீதிக்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் தார் போட்டுள்ளோம். எமது கிராம மக்களிடம் இருந்து பெறப்படும் வருமானவரி, நிறுவனங்களின் உதவி போன்ற பல்வேறு நிதி மூலமே புனரமைப்புக்களை செய்து வருகின்றோம். எமது சபையின் கீழ் உள்ள 182 கிராமங்களில் இருந்து வருமானவரி துறையினரால் 06கிராமங்களில் பெறப்படும் 35 லட்சம் ரூபா நிதியினை கொண்டே இச்செயற்பாட்டினை மேற்கொள்கின்றோம். இதற்கு காரணம் வருமான வரி துறையினரின் ஆளனி பற்றாக்குறை முக்கிய பிரச்சனையாக உள்ளது. எனவே இப்பிரச்சனைக்குரிய தீர்வு எட்டப்படும் பட்சத்தில் வருங்காலத்தில் எமது சபை பெருமளவு நிதியுடன் மக்களின் முக்கிய பிரச்சனையாக உள்ள வீதியினை இவ்வாறு பெறப்படும்நிதியை மட்டுமே கொண்டு செய்யமுடியும்.

செல்லும் இந்தவீதி வவுனியாவின் மிகமுக்கியமான போக்குவரத்துப்பாதை. வீதி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதால் அந்த மார்க்கத்தில் சேவையிலீடுபட பேரூந்துகள் பின்னடிக்கின்றன. மழைக்காலத்தில் பேரூந்துகள் அந்த மார்க்கத்தில் பயணிப்பதில்லை.

### ஓமந்தை சேமமடு வீதி

ஓமந்தையினூடாக சேமமடு செல்லும் 16 கிலோமீற்றர் வீதியை சேமமடு படிவம் 1, 2, ஆறுமுகத்தான் புதுக்குளம், நொச்சிக்குளம் போன்ற கிராமமக்களால் பயன்படுத்துகிறார்கள். தினமும் 1000க்கும் அதிகமானவர்கள் போக்குவரத்து செய்கிறார்கள். கடந்த 20 வருடங்களாக இந்தவீதி செப்பனிடப்படவில்லை. வீதி மிக மோசமாக உள்ளதால் அரச, தனியார் பேருந்துகள் சேவையிலீடுபடுவதில்லை. தற்போது தனியாருக்கு சொந்தமான சிறியரகவான் ஒன்றே போக்குவரத்தில் ஈடுபடுத்தப் படுகின்றது. இந்த வீதியினால் நோலீளிகளை ஓமந்தை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதும் மிக ஆபத்தான தென்கிறார்கள் மக்கள்.

### பட்டைகாடு சுனுளு வீதி

300 குடும்பங்களுக்கு மேல் வாழும் பட்டைக்காட்டு மக்களின் பாவனையிலுள்ள வீதி. சுமார் 01கிலோமீற்றர் தூரமான இந்தவீதி மிக மோசமான நிலையிலுள்ளது. அதிகமாக முஸ்லீம் மக்கள் இங்கு வசிக்கின்றனர். 06 மாதங்களுக்கு முன்னர் கூட இவ்வீதியு+டாக பாடசாலை சிறுவர்களை ஏற்றி சென்ற முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளாகி ஒருவர் படுகாயமடைந்தார். இப்படி அடிக்கடி நடப்பதாக கூறப்படுகிறது.

### திருநாவற்குளம் வீதி

வவுனியா நகரசபைக்குட்பட்ட பெரிய கிரமங்களில் ஒன்று. 600 குடும்பங்களுக்கு மேல் வசிக்கிறார்கள். ஏ9 வீதிக்கு அண்மையிலும் தாண்டிக்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இருக்கிறது. இங்குள்ள வீதிகள் மக்கள் போக்குவரத்துக்கு உகந்தவையல்ல. இங்குள்ள சிறுவீதிகளின் நீளம் 5 6 கிலோமீற்றர் வரையானது. அவை பாவனைக்கு உதவாதவை. இந்த வீதிகளை நம்பித்தான் திருநாவற்குளமே உள்ளது. மழைக்காலத்தில் இங்குள்ள வீதிகளில் பல நீர் ஊற்றெடுத்து ஆறுகளாகிவிடுகின்றன. பலவீதிகளை குளங்களாகத்தான் பார்க்க முடிகிறது.

### து.ஜெயகாந்தன்



சிவநகர், வேலன்குளம், கோவில்மோட்டை, மடுக்குளம், சின்னத்தம்பனை, செங்கல்படை, கோவில் குளம், புலவநகர் ஆகிய கிராமங்களில் வசிக்கும் 450 வரையான குடும்பங்களிற்கு மிக முக்கியமான வீதியாக பூவரசங்குளம் கோவில் புளியங்குளம் வரையான16 கிலோ மீற்றர் வீதியுள்ளது. இது கடந்த பலவருடங்களாக எதுவித புனரமைப்பு வேலையும் இன்றி மோசமாக சேதமடைந்துள்ளது.

இதுபற்றி பாராளுமன்ற உறுப்பினர்கள், எமது பிரதேச செயலாளர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். வீதியை புனரமைத்து தருமாறு கோரி ஆர்ப்பாட்டமும் செய்தோம். எந்த பயனும் இல்லை.

### சிந்துஜன்



மரக்காரம்பளை வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சேதமாகி காணப்பட்ட போதும் இதுவரை எதுவித திருத்த பணியும் நடைபெறவில்லை. இது பற்றி பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களிடம்பல மகஜர்களை கையளித்திருந்தபோதும் எந்தவித முன்னேற்றங்களும் இல்லை. வடமாகானசபை போக்குவரத்து அமைச்சரிடமும் மகஜர் கையளித்திருந்தோம். 3..5 கிலோமீற்றர் வீதியில் 01 கிலோமீற்றர் வீதியை போக்குவரத்து அமைச்சர் திருத்தினார். என்றாலும் அது திருப்திகரமாக நடக்கவில்லை. எஞ்சிய 2..5 கிலோமீற்றர் வீதியை எப்போது திருத்துவார்கள் என்பதும் தெரியாது.

---

புதூர் நாகதம்பிரான் ஆலயத்திற்கு வந்த வாகன உரிமையாளர்களிடமிருந்து வவுனியா வடக்கு பிரதேசசபையினால் அதிக பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

புதூர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 06.06.2016 இடம் பெற்றது. பொங்கல் நிகழ்வுக்கு வந்த உழவு இயந்திரங்கள், ஆட்டோக்களிடம் 150 ரூபாவும், சிறியரக கன்ரர் வாகனத்திற்கு 300 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 50 ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது. இது அதிகபட்ச பண அறவீடு என ஆலயத்திற்கு சென்ற மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



ஆலயத்திற்கு செல்லும் பிரதானவீதி வவுனியா வடக்கு பிரதேசசபைக்கு சொந்தானது. வீதியின் கணிசமான பகுதி புனரமைக்கப்படாமல் இருப்பதால் ஒவ்வொரு வருடமும் ஆயத்திற்கு செல்பவர்கள் புழுதியில் குளித்துதான் செல்ல வேண்டியுள்ளது.




இந்தநிலையில் ஆலயத்திற்கு வரும் மக்களிடமிருந்து வரி, வாகன தரிப்பிட வாடகையும்ம் ஏனைய ஆலயங்களைவிட அதிகமாக அறவிடப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதியை புனரமைத்து, மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்துவதானே அரசஅதிகாரிகளின் முதற்பணி. அதிகாரிகளே இது உங்களின் கவனத்திற்கு!

---

ஒட்டுசுட்டான் தட்டாமலை செல்லும் பிரதானவீதி குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் பற்றைகளாலும் மூடப்பட்டுள்ளது. இந்த வீதி முல்லைத்தீவு Rddக்கு சொந்தமானது. பல ஆண்டு காலமாக இந்தவீதி கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

பெரிய இத்திமடு, தட்டாமலை, பழம்பாசி, தண்டுவான் ஆகிய கிராமமக்களின் போக்குவரத்துப்பாதையிது. இந்த வீதி காட்டுப்பாதையாகவே உள்ளது. குன்றும்குழியுமாக காணப்படுவதுடன், வீதியின் இருமருங்கிலும் பற்றைகள் வளர்ந்து வீதியை மூடும்நிலையேற்பட்டுள்ளது.



இதனால் சிறுவர்கள், பெண்கள் இந்தவீதியை பயன்படுத்த அச்சப்படுகிறார்கள். அடுத்த மாதம் பெரிய இத்திமடு நாதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் விழா இடம்பெறவுள்ளதால் மக்கள் பாவனை இந்தவீதியில் அதிகமாக இருக்கும். பிறபிரதேசங்களிலிருந்து அதிகளவு தூக்குகாவடிகள் இந்தபாதையால் ஆலயத்திற்கு செல்வதும் வழக்கமாகும்.

மக்களின் முக்கிய பாவனைப்பாதையான இதனை விரைவாக துப்பரவு செய்து தர வேண்டுமென்பது பிரதேசமக்களின் அவசர கோரிக்கை.

அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?



# யாழ் மாவட்டத்தில் பாரிய சவாலாக மரிவரும் திண்மக்கழிவுகள்.!

**V.P. குமார்**
சுற்றுச் சூழலியல் ஆய்வாளர்

**நகரத்தின் பேண்தகு அபிவிருத்தியிலும் நகரமக்களின் ஆரோக்கிய வாழ்க்கையிலும் செல்வாக்குச் செலுத்தும் திண்மக் கழிவுகளை பங்குதாரர் பங்களிப்பினுடாக சூழலுக்குபாதுகாப்பாக அகற்றுவதற்குயாழ் மாவட்டச்செயலகம் அனுசரணையுடனும் யாழ்ப்பாண மாநகரசபையின் ஒத்துழைப்புடனும் உலக சுற்றாடல் தினம் யூன் 5 2016ஐ நினைவு கூர்ந்து அது சார்பாக 02.06.2016 அன்று நடத்தப்பட்ட நகரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு (Clean away) வலுச்சேர்க்கும் வகையில் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

திண்மக் கழிவுகள் எனப்படுபவை, மக்கள் பயன்படுத்திய பின்னர் சூழலுக்கு

**தொலைக்காட்சிப் பாவனை மக்களின் பொழுதுபோக்கிற்கு அத்திவாரமிட்டது. மக்கள் இதற்கு அடிமையாகவே, வேலைகள் மற்றும் குடும்ப கவனம், கோயிலுக்கு செல்லுதல், இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளல், உணவு தயாரித்தல், பிள்ளைகளின் பாதுகாப்பு என்பன தொடர்பில் கவனம் செலுத்துதல் குறைவடைந்தது.**

வெளியேற்ற என தீர்மானிக்கப்பட்ட பொருட்களை இது கருதும். இதனுள் சமையலறைக் கழிவுகள், உணவுக்கழிவுகள், சேதனக்கழிவுகள், பிளாஸ்ரிக் என்பன உள்ளடங்கும். இலங்கையில் ஒவ்வொரு வீட்டிலும் சராசரியாக தினமும் 100 - 300 g வரை கழிவுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன்

உலக நாடுகளில் அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கமும் உலகமயமாக்கற் போக்கும் இதன் விளைவாக அதிக உற்பத்தி, அதிக நுகர்வு போன்றன காரணமாக பெருமளவான கழிவுகள் உருவாகின்றன. இவ்வாறு உருவாகிவரும் கழிவுகள் நிலம், நீர், வளி என்பவற்றை மாசுபடுத்துவதுடன் மனித






உடல்நலத்திற்கும் பங்கம் விளைவிப்பதாக மரிவருகின்றது. திண்மக் கழிவுகளை கையாள்வதில் நாடுகளும் அரசுகளும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இதே போன்று இலங்கையும் உள்ளூராட்சி நிறுவனங்களினுடாகவும் சுற்றாடல் அதிகார சபையினுடாகவும் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆயினும் செயற்திட்டத்தினுடாக எதிர்பார்க்கப்படும் இலக்கு என்பது வெற்றியடையாத ஒன்றாகவே உள்ளது. உற்பத்தியாளர் மட்டத்திலும் நுகர்வோர் மட்டத்திலும் மாற்றம் ஏற்படும் வரை திண்மக் கழிவுகளை முகாமைப்படுத்துவது இயலாத காரியமாகும்.

யாழ்ப்பாணத்தில் கழிவு உற்பத்தியும் நுகர்வு வடிவமும் எவ்வாறு காலத்துக்கு காலம் மரிவருகின்றது என்பதை நோக்குகின்றபோது 1995ற்கு முற்பட்ட காலப்பகுதியில் மக்கள் இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் தமக்குத்தேவையான உணவுப் பொருட்களை தாமே உற்பத்தி செய்திருந்தனர். விவசாய உற்பத்தி நடவடிக்கையின் போது வெளியேற்றப்படும் கழிவுகள் வெவ்வேறு தேவைகளை பூர்த்தி செய்யப் பயன்படுத்தப் பட்டு வந்தன. இக்காலத்தில் நுகர்வு வரையறுக்கப்பட்டிருந்ததால் கழிவுகளின் உற்பத்தி மிகவும் குறைவாகவே காணப் பட்டது. தொழிநுட்ப முன்னேற்றம் வளர்ச்சியடையாத காலம். உலகமயமாக்கற் போக்குகளுக்கு யாழ் மாவட்டம் உட்படாத காலம். அளவுக்கு அதிமாக தேவையற்ற நுகர்வுகளை நுகர்வதற்கு வாய்ப்புக்கள் உருவாகாத காலம். இதுவே கழிவுகள் அக்காலத்தில் பிரச்சினையாக கருதப்படாமல் இருந்ததற்கான காரணமாகும். இதனைத் தொடர்ந்து இம் மாவட்டம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் இம் மாவட்டத்திற்கும் வெளிமாவட்டத்திற்கும் இடையலான சகல தொடர்புகளும் கடற் பயணத்தினுடாகவே மேற்கொள்ளப்பட்டது. 1996 - 2002 வரையான காலப்பகுதியில் யுத்தமும் இடப்பெயர்வும் அடிக்கடி இடம்பெற்றதனால் அடிப்படைத் தேவை குறித்தே கூடுதல் கவனம் செலுத்தப் பட்டது. வர்த்தக செயற்பாடுகள் கடற்போக்குவரத்தை நம்பியிருந்தமையால் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே பொருட்கள் கொண்டு வரப்பட்டன. இதனால நுகர்வு மட்டுப்படுத் தப்பட்டே இருந்தது. இதனால் கழிவு உருவாகும் வீதம் வரையறுக்கப்பட்டிருந்தது.

2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இம் மாவட்டத்திற்கும் வெளிமாவட்டத்திற்கும் இடையில் தரைவழிப்போக்குவரத்து மீள ஆரம்பிக்கப் பட்டது. இக்காலத்தில் கொழும்பிலிருந்து பொருட்கள் இங்கே தருவிக்கப்பட்டன. இக்காலம் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கான திருப்புமுனைக் காலமாக கொள்ளலாம். 2002-2005 வரை அதிகமாக புதுவீடுகள் கட்டப்பட்டன. தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதானப்பெட்டி, கிறைண்டர் உள்ளிட்ட பொருட்கள் அதிகமாக நுகரப் பட்டன. தொலைக்காட்சிப் பாவனை மக்களின் பொழுதுபோக்கிற்கு அத்திவாரமிட்டது. மக்கள் இதற்கு அடிமையாகவே, வேலைகள் மற்றும் குடும்ப கவனம், கோயிலுக்கு செல்லுதல், இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளல், உணவு தயாரித்தல், பிள்ளைகளின் பாதுகாப்பு என்பன தொடர்பில் கவனம் செலுத்துதல் குறைவடைந்தது. அது சோம்பேறித்தன்மைக்கு வித்திட்டது. அத்துடன் ஆடம்பர பொருட்களின் நுகர்வுக்கும் நுகர்வுரிதியில் மக்கள் அடிமைப்பட்டுச் செல்வதற்கும் இயற்கையான வாழ்கையிலிருந்து மக்கள் விடுபடவும் வழிவகுத்தது. இக்காலத்தில் பொலித்தீன் பாவனை சற்று அதிகரிக்கத்தொடங்கியது. ஆரம்பத்தில் கடைகளில் பொருட்கள் வாங்கும்போது கடதாசி சுருள்களில் சுற்றி பொருட்கள் வழங்கப்பட்டது. கடதாசிப் பொருட்கள் மூலம் சுற்றி வழங்கப்படும் பொருட்கள் பெரிய போத்தல்களில் இடப் பட்டு பின் அக் கடதாசி அடுப்பு எரிப்பதற்கு பயன்படுத்தப்படும். அரிசி மா உள்ளிட்ட பொருட்கள் வீட்டிலிருந்து கொண்டு செல்லப்படும் சீலை பை மற்றும் மாட்டுத்தாள் பைகளில் வழங்கப்படும். ஒவ்வொரு பொருட்களுக்கும் ஒவ்வொரு பை வீட்டிலிருந்து கொண்டு செல்லப்படும். இது பெரும்பாலும் சங்கக்கடைகளில் காணலாம். இங்கு இப் பைகள் தொடர்ச்சியாக பொருட்கள் வாங்குவதற்காக பயன் படுத்தப்படுவதனால் தேவையற்ற பொலித்தீன் பைகள் வீட்டில் சேர்வது தவிர்க்கப் பட்டது. பொருட்கள் சேவைகளின் கிடைப்பனவு விருத்தியடையவும் மக்கள் ஆடம்பரத்திற்கு பழக்கப்படவும் பொருட்கள் வாங்குவதற்கென நேரம் இன்மையால் போகிற இடங்களில் பொருட்கள் நுகரத் தொடங்கினர். அதாவது நுகர்வுப் பழக்கம் மாற்றமடைய கடதாசி சுருள், மாட்டுத்தாள் பைகள் என்பனவற்றின் பயன்பாடு தவிர்க்கப்பட்டு சொப்பிங் பையின் பாவனை அதிகரித்தது. சிறிய நடுத்தர மற்றும் பெரிய பைகள் பாவனைக்கு வர பழையமுறை தவிர்க்கப் பட்டது. ஆயினும் இன்று பழைய நடைமுறையை நாம் சங்கக் கடைகளில் காணலாம். இன்று வீட்டுப்பாவனைப் பொருட்களிலிருந்து உணவு மற்றும் ஏனைய பொருட்கள் வரை எல்லாவற்றுக்கும் சொப்பிங்பை பயன் படுத்தப்படுவதனால் வீடுகளில் இவற்றின் எண்ணிக்கை அதிகரித்தது. இதேபோல கல்வி நிலையங்களிலும் அரச அலுவலகங்களிலும் அக்காலங்கிளில் உருவாக்கப்பட்ட கழிவுகள் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருந்ததுடன் அவை இலகுவில் அகற்றக் கூடியதாக இருந்தன. 2006ஆம் ஆண்டு மீண்டும் A9 கண்டி வீதி மூடப்பட்டது. தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் கடல்வழியாகவே பொருட்கள் கொண்டுவரப்பட்டன. இதனால் பொருட்களின் நுகர்வு மீண்டும் வரையறுக்கப்பட்டிருந்தது. 1998 இருந்து 2009 வரையான காலங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களில் தேர்தல்கள் இடம்பெற்று ஆட்சியமைக்கப்பட்டாலும் இந் நிறுவனங்களுக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால் கழிவகற்றல் செயற்பாடும் வரையறுக்கப் பட்டிருந்தது.

இக்காலத்தில் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் திண்ம கழிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்க அவற்றைக் கொட்டுவதற்காக காக்கைவெளி பிரதேசம் ஷ்தேர்வுசெய்யப்பட்டு இன்று வரை கொட்டப்படுகிறது. உண்மையில் யாழ்ப்பாண மாநகரசபை கழிவகற்றலை மேற்கொள்வதில் பாரிய சாவல்களை எதிர்நோக்கிவருகின்றது. **(தொடரும்)**



# சோதிடக்கலை மூலம் அறியப்படும் திருமண விடயங்கள்

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



***காலசர்ப்ப தோஷம்:*** ஆண் அல்லது பெண் சாதகத்தில் ராகு அல்லது கேது கிரகங்களுக்கு இடையில் எல்லாக் கிரகங்களும் அமைந்திருக்க காலசர்ப்ப தோஷம் உண்டாகின்றது.இத்தகைய தோஷம்இருப்பவர்களுக்கு திருமணம் அமைவது கடினம். மேலும் 32 வயது முடியும் வரை தொழில் மற்றும் குடும்ப வாழ்க்கையில் ஏற்றம் உண்டாவதில்லை.

***சமசப்தகம்:*** பெண் இராசிக்கு ஆண் இராசி 7 ஆவது இராசியாக வருமாயின் வாழ்க்கை எல்லாவிதமான கஸ்ட, நஷ்ட, துன்ப துயரங்களில் இருந்து விடுபட்டு நல்ல சிறப்பான அற்புதமானதாய் அமையும்.

***பாபகத்திரி தோஷம்:*** லக்கினம் அல்லது சந்திரன் இரண்டு பாவக்கிரகங்களுக்கு இடையில் இருப்பின் பாபகத்திரி தோஷம் உண்டாகின்றது. மேலும் 7 ஆம் வீட்டுக்கு முன்னும் பின்னுமாய் (அதாவது 6 ஆம் 8 ஆம் வீடுகள்) பாபக்கிரகங்கள் அமையுமாயின் பாபகத்திரி தோஷம் உண்டாகிறது. எவ்வளவு சொத்துக்கள் இருப்பினும் வாழ்வை அனுபவிக்க யோகம் உண்டாவதில்லை.

***சஷ்டாஷ்டகம்:*** பெண் இராசிக்கு 6 ஆவது இராசியாக ஆண் இராசி வருமாயின் குடும்ப நிம்மதி குறைவடையும். சச்சரவான கலவரமான நிலைகளைத் தோற்றுவிக்கும். மேலும் குழந்தைப் பாக்கிய சிறப்புக்களையும் பாதிக்கச் செய்யும்.

***சர்ப்ப தோஷம்:*** லக்கினம், 7 ஆம் இடம், 8 ஆம் இடம் இவை ஒன்றில் ராகுவோ, அல்லது கேதுவோ, அமையின் சர்ப்ப தோஷம் உண்டாகிறது. இதை விட குடும்பஸ்தானமாகிய 2 ஆம் இடத்தில் ராகு அல்லது கேது அமையின் இந்த தோஷம் உண்டாகிறது. இதனால் திருமணத்தடை ஏற்படுகிறது. அவ்வாறு திருமணம் நிறைவேறினாலும் குடும்ப வாழ்க்கையில் அமைதி, சாந்தம், நிம்மதி இருக்காது.

***செவ்வாய் தோஷம்:*** லக்கினம், 7 ஆம் 8 ஆம் நிலைகளில் செவ்வாய் இருப்பின் தோஷ பலம் அதிகம் அமையும். இதை விட 2, 4, 12 ஆம் இடங்களில் செவ்வாய் இருப்பின் தோஷ பலம் குறைவாய் அமையும். ஆண், பெண் இருவருடைய சாதகத்தில் தோஷம் இருப்பின் அதனை கவனத்தில் எடுக்கலாம். செவ்வாய் தோஷம் உள்ள சாதகம் மற்றவருக்கு செவ்வாய் தோஷம் இல்லாது இருப்பின் சேர்க்க முடியாது. ஆணுக்குத் தோஷம் இருந்து பெண்ணுக்கு தோஷம் இல்லையாயின் பெண்ணுக்குக் கெடுதி எனக் கொள்ளவும். இதே போல் பெண்ணுக்கு தோஷம் இருந்து ஆணுக்கு தோஷம் இல்லையாயின் ஆணுக்கு கெடுதி எனக் கொள்ளவும்.

***திருமணநாள்:*** திருமணநாளன்று ரோகினி, மிருகசீரடம், மகம், உத்தரம், அத்தம், சுவாதி, அனுஸம், மூலம், உத்தரட்டாதி, ரேவதி, திருவோணம், சதயம், அச்சுவினி, புணர்பூசம், சித்திரை, அவிட்டம், ஆகிய நட்சத்திரங்களில் ஒன்று அமையுமாயின் நல்லதாகும்.

துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, ஆகிய திதிகளில் ஒன்று அமையுமாயின் நல்லதாகும்.

ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி, ஆகிய கிழமைகளில் ஒன்றாயின் நல்லதாகும்.

மணப்பந்தல், மணவறை, மணமேடை என்பன அவரவர் மனையில் அமைவதே சிறப்பாகும். தற்காலம் இடவசதி உபசரிப்பு வசதி போக்குவரத்து வசதி பணிசெய்வோர் வசதி கருதி கல்யாணமண்டபத்தில் இது நிகழவேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகிவிட்டது.

**பொருத்தம் பாராமல் விவாகம் செய்யும் சந்தர்ப்பம்.**

பெண்ணுக்கும் ஆணுக்கும் சாதகம் இல்லையாயின் இருவரது பெயர்களுக்கும் ஒத்துப்போகும் தன்மை உண்டானால் விவாகம் செய்யலாம். இருவரது பெயர்களையும் நட்சத்திர வகைக்குள் தரப்பட்டுள்ள பெயர் நாமவரிக்குள் உள்ளடக்கி பொருத்தப்பாட்டினை விளங்கிக் கொள்ளாம்.

மிருகசீரடம், மகம், சுவாதி, அனுஷம், இந்த நான்கு நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்று ஆண் அல்லது பெண்ணுக்கு அமையின் பொருத்தம் பாராமல் விவாகத்தைச் செய்யலாம்.

***கர்ப்ப நிச்சிதம்:*** இது பெரும்பாலும் இனசனபந்து உறவுகளுக்குள் பெற்றோர்களிடயே காணப்படும் திருமண பந்தம் தொடர்பில் ஏற்படும் வாக்குறுதி ஒப்பந்தம் அடிப்படையில் அமைவதாகும். அதாவது குழந்தையொன்று தாயின் கர்ப்ப நிலையில் உள்ள போது இரண்டு வழிப் பெற்றோரும் முடிவுக்கு வருதல் ஆகும். நமது இலங்கைத் தேசத்தில் இந்த வழமையைப் பின்பற்றுவோர் மிகமிகக் குறைவு அல்லது இல்லை எனலாம்.

***காந்தர்வம் (காதல் கொண்டவர்):*** இருமனம் கலந்து ஒரு மனம் பெறும் விவாகம் இதுவாகும். தங்கள் கரங்களாலே பரஸ்பரம் தோள்களில் மாலை அணிவது போன்று இணைந்து விடுவார். சாதி, மதம் பார்க்காமல் இருவரும் இணையப்பெறுவார். இதற்கு பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை.

***சகுன நிச்சயம்:*** சாதகம் இல்லாதவர்கள் ஆலயத்தில் "பூ" வைத்துப் பார்த்தல், "வீபூதி" வைத்துப் பார்த்தல், "குங்குமம்" வைத்துப் பார்த்தல், இந்த வகையினுள் அடங்கும். இவ்வாறு பார்க்குமிடத்து நல்ல சகுனம் வெளிப்பட்டால் பொருத்தம் பாராமல் விவாகம் செய்யலாம்.

***குரு தெய்வ நிர்ணயம்:*** கட்டுச் செல்பவர், அருள் வாக்குச் சொல்பவர், தெய்வத்திற்கு நிகராக மதிக்கப்படுபவர், அவ்வாறான குருநாதர் அல்லது குரு பத்தினி ஒருவரின் அருள்வாக்குத் திருப்திப் பட்டுக் காணப்படுமாயின் பொருத்தம் பார்க்கும் அவசியமில்லை.

***உறவு முறைத் திருமணம்:*** முறை மைத்துனர், முறை மாமன் என்ற வகையில் இது கவனிக்கப்படும். இவ்வாறாயின் பொருத்தம் பாராமல் விவாகம் செய்யலாம்.

**மனைவி அமைவது இறைவன் தரும் வரம்.**

சுக்கிரன், துலாம் இராசியில் அமைதல், சுக்கிரன் குருவுடன் இணைதல், ஏழாம் அதிபதி குருவுடன் இணைதல், அல்லது பார்வை பெறுதல், குரு சந்திரன் சேர்க்கை பெறுதல், சந்திரன் நல்ல நிலையில் இருத்தல், இலக்கினம், இலக்கினஅதிபதி, இராசி, இராசி அதிபதி, நல்ல நிலை எனப்படும். கேந்திரம், திரிகோணம், நிலையில் அமைதல், கேசரியோக நிலை பெறுதல், சனி செவ்வாய் பாதிப்பில்லாத நிலையில் இருத்தல், ஏழாம் அதிபதி திரிகோண நிலை பெற்று சந்திரனால் பார்க்கப்படல், ஏழாம் அதிபதி பத்தில் இருப்பின் அதிர்ஷடம் எனச் சொல்லக் கூடிய மனைவி கிடைப்பார்.

சனி, செவ்வாய், சுக்கிரன், சேர்க்கை பெற்று 7 ஆம் நிலையில் இருப்பது, 3,6,8 ஆம் நிலைகளில் சுக்கிரன் இருப்பது, மீனம், கடகம், மகரம், விருச்சிகம், ஆகிய நீர் இராசிகளில் சுக்கிரன் இருப்பது 2,7 ஆம் நிலைகளில் ராகு கேது இருப்பது செவ்வாய் 7 இல் இருப்பது சூரியன் 2,7,8 நிலைகளில் இருப்பது 7 இல் சந்திரன் இருப்பது சூரியன், செவ்வாய் சேர்ந்து இருப்பது, பலவித தோஷ அமைப்புடன் கிரக நிலைகள் காணப்படுவது குடும்ப வாழ்வில் நிம்மதி, அமைதி, சாந்தம், மகிழ்ச்சி இவற்றைத் தராது. மாறாக துன்பம் துயரம் கஷ்டம், நஷ்டம், இவற்றையே தரும். இது ஆண், பெண் இருவரது சாதக அமைப்பில் கவனிக்கப்படும் விடயமாகும்.

சர்ப்பதோஷ நிலை, சந்திரன் புதன் கேந்திர நிலையில் இணைதல், 7 ஆம் இடம் நீசம் பெறுதல், 7 ஆம் நிலையில் பாவக்கிரகம் காணப்படுதல், 7 ஆம் அதிபதி 6,8,12 ஆம் இடங்களில் மறைதல், ஏழாம் இடத்திற்கு உரியவர் 12 இல் இருப்பது, 2 ஆம் இடத்தில் பாவக்கிரகம் இருத்தல், சூரியன் 7 ஆம் வீட்டில் சேர்க்கை, அல்லது 7 ஆம் அதிபதியுடன் சேர்க்கை, சுக்கிரன் சந்திரன் 7 இல் சேர்ந்திருப்பது, 7 இல் சந்திரன் சனி சேர்ந்து இருப்பது, செவ்வாய் சூரியன் 7 இல் சேர்ந்து இருப்பது, 7 இல் செவ்வாய், சனி சேர்ந்திருப்பது குடும்பவாழ்வு விவாக நிலையில் தாரதோஷ நிலையைத் தரும்.

**நட்சத்திர உள் கிடக்கைகள்.**

***சுவாதி நட்சத்திரம்:*** இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் திருமணத்திற்கு பின் சிறப்பாக வாழ்க்கை நடத்துவார். கணவன் வீட்டில் செல்வச் செழிப்புடன் வாழ்வார். பிறந்த வீட்டிலும் இவள் திருமணத்திற்குப் பின் மேன்மை கிட்டும். உடல் கட்டுமானம் திருமணத்திற்குப் பின்னர் நல்ல நிலையில் அமையப் பெறும்.

***கேட்டை நட்சத்திரம்:*** இந்தநட்சத்திரத்தில் பெண் ஆயின் மூத்த மைத்துனருக்கு ஆகாது. என்பது பழமொழி. இது முற்றிலும் உண்மை எனக் கொள்ள முடியாது. பெண்ணின் கிரக நிலையைப் பெறுத்தே இதனைத் தீர்மானம் பண்ணலாம். பெண்ணின் 5 ஆம் வீட்டில் பாவக்கிரகங்கள் அமையப் பெற்றாலும், 5க்கு 7 ஆம் வீட்டில் அதாவது லக்கினத்திற்கு 11 ஆம் வீட்டில் பாவக்கிரகங்கள் அமைந்தாலோ மூத்த மைத்துனருக்கு இன்னல்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

***ஆயிலிய நட்சத்திரம்:*** பெண்ணின் நட்சத்திரம் ஆயிலியம் ஆனால் மாமியாருக்கு ஆகாது என்பது பழமொழி ஆகும். ஆனால் மாமியாரின் ஆயுள் பலம் நன்றாக அமையப்பெற்றால் இந்த தோஷம் செயலிழக்கும். மரணபயம் நீங்கப்பெறும்.

***மூல நட்சத்திரம்:*** பெண்ணின் நட்சத்திரம் மூலம் ஆயின் மாமனாருக்கு ஆகாது என்பது சோதிடம் கூறும் விதி ஆகும். இருப்பினும் தனிப்பட்ட ரீதியில் மாமனாருக்கு ஆயுள் பலம் நன்றாக அமையப்பெற்றால் இந்த தோஷம் கெடுதல்கள் செய்யாது.

***விசாக நட்சத்திரம்:*** இந்த நட்சத்திரத்தில் பெண் இருப்பின் இளைய மைத்துனருக்கு ஆகாது. என்பது சோதிடம் தரும் விதி ஆகும். ஆனால் விசாகம் 4 ஆம் பாகமாய் அமைந்து விருட்சிக இராசிக்கு சேருமாயின் தோஷம் செய்யாது என்பதும் சோதிட விதி ஆகும்.

***7 ஆவது நட்சத்திரம்:*** பெண்ணின் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் வரை எண்ணிய தொகை ஏழு என வந்தால் விவாகப் பொருத்தம் கூடாது. அவ்வாறு அமையப்பெற்றால் ஒருவரை ஒருவர் பிரிந்திருக்கும் நிலை அல்லது ஒருவரையொருவர் இழக்கும் நிலை வரலாம் என்பது சோதிட விதியில் உள்ளதாகும்.

**இவ்வாரம் நல்ல நாள் நேரம்.**

விவாகம்: 16.06.2016 வியாழக்கிழமை பகல் 12.14 - 1.19 வரை.

6.06.2016 வியாழக்கிழமை இரவு 6.27 - 8.23 வரை.

8.06.2016 சனிக்கிழமை பகல் 12.05 - 1.52 வரை.

பொன்னுருக்கல் செய்வதற்கும் மேலே உள்ளவாறு கொள்ளவும்.

சனிக்கிழமை பொன்னுருக்கலுக்கு தவிர்ப்பது நல்லது.

**வீடு கட்டுதல், குடிபுகுதல்.**

16.06.2016 வியாழக்கிழமை இரவு 6.27 - 8.23 வரை.

18.06.2016 சனிக்கிழமை பகல் 12.05 - 1.52 வரை.

மேற்படி நாட்கள் இரண்டும் வடக்கு வாசல், தெற்கு வாசல் வீடுகளுக்கு குடிபுகுதலுக்கு மட்டும் பொருந்தும்.

காது குத்துதலுக்கு இவ்வாரம் சுப நாட்கள் இல்லை.

அன்னப் பிராசனம் புதிது உண்ணல் இவ் வாரத்தில் 16.06.2016 வியாழக்கிழமை பகல் 12.14 - 1.19 வரை உள்ள நேரத்தில் செய்து கொள்ளலாம்.

**இவ்வார சந்திராஸ்டமம்.**

12.06.2016 முதல் 18.06.2016 வரை
கும்பராசி: 12,13,14 ஆம் திகதிகள்.
மீனராசி: 15,16,17 ஆம் திகதிகள்.
மேடராசி:18 ஆம் திகதி.

**ஏனைய இராசிகளுக்கு இவ்வாரம் சந்திராஸ்டமம் இல்லை.**

இந்த சந்திராஸ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு, நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

**வாரம் ஒரு தகவல்.**

விஷமாதம், மலமாதம், அபிஜித் முகூர்த்தம்.

எந்த மாதத்தில் பௌர்ணமி, அமாவாசை, இல்லையோ அந்த மாதத்திற்கு "விஷமாதம்" என்று பெயர்.

எந்த மாதத்தில் இரண்டு பௌர்ணமியோ இரண்டு அமாவாசையோ வருகிறதோ அதற்கு "மலமாதம்" என்று பெயர்.

ஆனால் சித்திரை வைகாசி மாதங்களுக்கு இந்த தோஷம் கிடையாது.

"அபிஜித் முகூர்த்தம்" என்பது பகல் 12 மணி ஆகும். இந்த முகூர்த்தமானது எல்லா இடங்களிலும் முக்கியமானது. லக்கினத்திற்கு இருக்கும் தோஷங்களையும், நவக்கிரக தோஷங்களையும், போக்கி வெற்றியைத் தரும் முகூர்த்தம் இது. இதில் உபநயனம் செய்யக் கூடாது.





சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

# குழந்தைப் போராளி

## அம்மாவின் உண்மை முகம்

நான் நித்திரை விட்டெழுந்து பார்க்கும்போது அப்பா மீண்டும் நகரத்திற்குப் போய்விட்டிருந்தார். எனது வளர்ப்புத்தாய் தனது முகத்தில் ஓர் ஈரத்துணியுடன் நின்றிருக்க ஒரு சத்தமும் செய்யாது நான் வெளியே சென்று வானத்தில் பறவைகள் அமைதியாகப் பறந்து செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றேன். வருடம் முடியும் தருவாயில் அப்பா மீண்டும் பண்ணைக்கு வந்தார். மாடு வெட்டுபவர்களை அழைத்துவரும்படி அப்பா எனக்குக் கூற நான் வெளியே புறப்பட்டேன். மாடு வெட்டுபவர்களில் ஒருவரை வழியிலேயே சந்தித்தேன். இருவருமாகச் சேர்ந்து மற்றயவரையும் தேடிச் சென்றோம். இருவருமே எத்தனை மிருகங்கள் வெட்ட வேண்டியிருக்குமெனக் கேட்டனர். அதில் ஒருவர் சப்புக் கொட்டிக்கொண்டே வந்தார். ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்தின் பின்னர் இருவருடனும் வீடு திரும்பினேன். அப்பா அவர்களை மாடுகள் பக்கம் அழைத்துச் செல்ல மாடு வெட்டுவதைப் பார்ப்பதில் எந்த ஆர்வமுமில்லாத நான் தோட்டத்தில் இலைகளைச் சேகரிக்கத் தொடங்கினேன்.

சில மணித்தியாலங்களின் பின் நான்கு விருந்தினர்கள் வந்தனர். நால்வரில் ஒருவர் மிக வித்தியாசமாயிருந்தார். அவரின் தோல் ஓர் ஒளிக்கற்றை போல் வெண்மையாக இருந்தது. அவர் போகுமிடமெல்லாம் அவரை என் பார்வை தொடர்ந்து கொண்டேயிருந்தது. ஏனெனில் நான் அப்படி ஒருவரை இதுவரை கண்டதில்லை.



அவரின் அருகில் செல்வதற்காக எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருந்தேன். அவரின் அருகாமையில் சென்று ஏன் அவர் இவ்வளவு வெளுப்பாக இருக்கிறார் என அறிய வேண்டும்! அவரின் பழுப்பு நிறக்கண்களும் பெரிய காதுகளுடன் கூடிய அவரது முகமும் பெரிய மூக்கின் கீழ் வளர்ந்த மீசையும் என்னைக் கவர்ந்தன. அவரை என்னால் தொட்டு விட முடியும். கிள்ளினால் தோல் கழன்று விரலோடு வந்து விடுமோ?

ஒளிவீசும் தோல்களுடைய மனிதர் என் எண்ணங்கள் முழுவதையும் ஆட்கொள்ளத் தொடங்கினார்.

மாலையில் அவர்கள் விருந்தினை முடித்துச் செல்லும்போது ஒழுங்குபடுத்துவதும் கழுவுவதுமாக எனக்கு வேலைகளை விட்டுச் சென்றனர். அப்பா வேலை செய்யும் என்னையே பார்த்துக் கொண்டு நின்றார். பின்பு நாளை என்னை நகரத்திற்குக் கூட்டிச் செல்வதாகக் கூறிச் சிரித்துக் கொண்டே போனார். விவரிக்க முடியாத மகிழ்வுணர்வு புயலாக என்னுள் வீசியது. சிரித்துக்கொண்டே என்ன செய்வதென்று தெரியாது நான் நிற்க, அவரின் மனைவி அவரை உள்ளே அழைத்துச் சென்றது எனக்கு ஆறுதலாகவேயிருந்தது. அன்றிரவு என் கனவுகள் வழமையைவிட ஒளி பொருந்தியதும் அழகானதுமாயிருந்தன.

### அம்மாவின் உண்மை முகம்

நான் அடுத்த நாள் நகரத்திற்குச் சென்ற போது மூன்று சிறுமிகளும் ஒரு சிறுவனும் என்னை வரவேற்றனர். நான் அவர்களைக் கேள்விக்குறியுடன் பார்க்க அப்பா "இவர்கள் உனது சகோதரர்கள்" எனச் சொன்னார். அவர்களது அழகிய ஆடைகள் என்னை ஈர்த்தன. அவர்களது உடை அவர்களைப் பகட்டானவர்களாய்க் காட்டிற்று. முதல் பார்வையிலேயே அவர்களை நான் வெறுப்பாகப் பார்த்திருக்கவேண்டும். என் விநோதமான சகோதரர்கள் விநோதமான கேள்விகளைக் கேட்டனர்.

"முற்றெஸி உன்னை எப்படி நடத்துகிறார்?"

"முற்றெஸி" இந்தச் சொல்லை நான் கேள்விப்பட்டதே இல்லை. எனவே எதுவும் விளங்காது அவர்களைப் பார்த்து முற்றெஸி என்றால் என்ன அர்த்தமெனக் கேட்டேன்.

" முற்றெஸி" என எல்லோரும் பதிலளித்தனர்.

"உங்கள் அம்மாவைச் சொல்கிறீர்களா?" என அவர்களைக் கேட்டேன்.

"இல்லை,அவர் எங்களது அம்மா அல்ல, அவர் பெயர் முற்றெஸி"

"சரி யார் எங்களது அம்மா?" என அவர்களைக் கேட்டேன். அவர்களுக்கும் அம்மா எங்குள்ளார் என்று தெரியவில்லை.

"எங்களுக்குத் தெரிந்தது முற்றெஸி அம்மா அல்ல என்பது தான்"

நான் எவ்வாறு கீழ்தரமாக நடத்தப்படுகிறேன் எனச் சொன்னதும் அவர்களுக்குக் கவலையாய்ப் போயிற்று.

"இங்கு உங்களைப் பார்க்க வரும்போது அவர் உங்களை மோசமாக நடத்துவாரா"? எனக்கேட்க "இல்லை" என்று சொன்னார்கள்.

(தொடரும்)



குழந்தைப்போராளியான இந்த சிறுமி இணைந்த ஆயுதக்குழுவின் தலைவர் முசேவெனி. இந்தச்சிறுமி உள்ளிட்டவர்களின் தியாகத்தால் ஆட்சிமாற்றத்தை நிகழ்த்தி முசேவெனி உகண்டாவின் ஜனாதிபதியானார். பின்னர் சர்வாதிகார ஆட்சியை தொடர்கிறார். அண்மையில் மகிந்த ராஜபக்ச அவரது பதவியேற்பிற்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.








மட்டக்களப்பு வாகரை கதிரவெளி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவத்தின் இறுதிநாள் தீமிதிப்பு உற்சவம் அண்மையில் இடம்பெற்றது.

கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com.
0776284687





# வைத்தியரிடம் கேளுங்கள்

**நிஷா, வயது 30, நாவாந்துறை**

**கேள்வி:** குழந்தைக்கு முதன்முதலில் பால் ஊட்டும் போது முதலில் வருகின்ற பாலை வெளியேற்றி விட்டு பின்பு வரும் பாலை கொடுக்க வேண்டும் என்று கிராமங்களில் சொல்லப்படுகிறது. இது சரியா? தாய்ப்பால் அதிகமாக சுரப்பதற்கு எவ்வகையான உணவுகளை உண்ணலாம்?

**பதில்:** முதலில் வருகின்ற பாலை வெளியேற்றி விட்டு பாலூட்டுகின்ற பழக்கம் சில கிராமங்களில் பின்பற்றி வருகின்ற மூடநம்பிக்கை ஆகும். முதல் பாலிலேயே அதிகளவு ஊட்டச்சத்துக்கள் நிரம்பி உள்ளன. இது குழந்தைக்கான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. எனவே இதைக் கட்டாயமாக குழந்தைக்கு ஊட்டப்பட வேண்டும். துளசி தாய்ப்பாலை அதிகரிக்கும். மரக்கறி சூப் சமைக்கும் போது துளசியை சேர்க்க வேண்டும். இதே போல் வெந்தயமும், தாய்ப்பாலை அதிகரிக்கும். அதே போல் காய்கறி வகைகளில் பூசணிக்காய், சுரக்காய், புடலங்காய் மற்றும் கீரை வகைகள் எடுப்பதால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். பாதாம் பருப்பை பாலில் கலந்து சாப்பிடுதல் தாய்ப்பாலை அதிகரிக்கச் செய்யும்.

**சந்தோஸ், வயது 26, அரியாலை**

**கேள்வி:** இரத்தச்சோகை இருந்தால் இரத்தானம் செய்யலாமா?

**பதில்:** ஒருவர் 120 நாட்களுக்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யலாம். ஆரோக்கிய மான ஒருவரின் உடலில் 10கிராம் கிமோகு ளோபின் இருக்க வேண்டும். கட்டாயம் ஈமோகுளோபின் குறைவாக இருந்தால் இரத்தம் எடுக்க மாட்டார்கள்.

**றோஜினிதேவி, கோண்டாவில்**



**கேள்வி:** எனது மகன் சந்தோஸ் வயது 9. மிகவும் குண்டாக இருக்கிறான். விளையாடும் போது களைப்படைகிறான். இவனது பருத்த தோற்றத்தால் மற்றவர்களின் கேலிக்கு உள்ளாகின்றான். இதற்கு சித்த மருத்துவத்தில் தீர்வு என்ன?

**பதில்:** நீங்கள் மகனின் நிறை அளவை குறிப்பிடவில்லை. சிறுவர்களுக்கிடையே தற்போது உடற்பருமன் வளர்ச்சியடைதல் பிரச்சினையாக உள்ளது. உண்ணப்படும் கலோரியின் அளவுக்கும் செலவிடப்படு வதற்கும் இடையே சமநிலை இன்மையால் உடற்பருமன் ஏற்படுகிறது. சோடா, சொக்லேற், இறைச்சி வகைகள், மாப்பொருள் சேர்ந்த இனிப்பு, உணவுகள் அதிகமாக எடுப்பதால் கலோரி அதிகரிக்கும். இதோடு போதிய உடற்பயிற்சி இல்லாது விடின் உடற்பருமன் அடைதலைத் தடுக்க முடியாது. எனவே இத்தகைய உணவுவகைகளைத் தவிருங்கள். தானிய உணவுகளோடு இஞ்சி, உள்ளி, மிளகு, என்பவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள், ஓரிடத்திலே அதிக நேரம் உட்கார்ந்து இருந்தால், தொலைக்காட்சி பார்த்தல், கணினியில் கேம் விளையாடுதலை குறைத்து மைதான விளையாட்டுக்களில் ஈடுபடச் செய்யுங்கள். திரிபலா குளிகையை இரவில் தினமும் எடுத்து வரலாம்.

**சாளினி, வயது 20, பண்டத்தரிப்பு**

**கேள்வி:** வெய்யிற்காலம் முழுவதும் வியற்குரு போட்டு கடி ஏற்படுகிறது. வியற்குரு போக என்ன செய்யலாம்?

**பதில்:** இறுக்கமான ஆடை அணிவதை தடுக்க வேண்டும். காரமான உணவுகள் உண்பதைதவிர்க்கவேண்டும். உடற்சூட்டைத் தணிக்கும் பழங்கள், இளநீர், மோர், பதனீர் போன்றவற்றை உண்ண வேண்டும். தினமும் 2 வேளை குளிக்க வேண்டும். மேல் பூச்சாக சந்தனம் பூச வேண்டும், பாசிப்பயறு, கடலைப்பருப்பு, வெந்தயம் போன்றவற்றை சேர்த்து குளிக்க வேண்டும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பொடியை நீரில் கரைத்து பூசிக் குளித்து வர வியற்குரு மறையும்.

**அருள் வண்ணன், வயது 35 நவாலி**

**கேள்வி:** திருமணமாகி 10 வருடங்களா கிறது. இன்னும் குழந்தை இல்லை. விந்துப் பரிசோதணை செய்ததில் விந்துவின் அசை



வியக்கம் குறைவாக இருப்பதாக சொல் கிறார்கள். விந்து சக்தி அதிகரிக்க என்ன மருந்து செய்ய வேண்டும்.

**பதில்:** எண்ணெய் குளியல் மூலம் உடற் சூட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பெரிய கரண்டி நல்லெண்ணையில் ஒரு தேக்கரண்டி சீரகம், ஒரு தேக்கரண்டி புளுங்கல் அரிசி, 2 உள்ளிப்பல் சேர்த்து காய்ச்சி வடிகட்டவும். அதை தலை, தொப்பிள், அடிவயிறு, கால் கட்டை விரல் என உச்சி முதல் பாதம் வரை தடவி அரை மணி நேரம் ஊறிய பின் குளிக்கவும், அஸ்வகந்தலேகியம், தாதுபுஸ்டி லேகியம், என்பன பலன் அளிக்கின்றன. இன்னும் பல மருந்துகள் இதற்கு சிபார்சு செய்கின்றது. அதை மருத்துவரின் ஆலோசனையுடன் எடுக்கவும்.

**சரவணகுமார், வயது 40, மல்லாகம்**



**கேள்வி:** ஔவையார் நெல்லிக்கனியை அருந்தி நீண்ட நாள் வாழ்ந்ததாக இலக்கியம் கூறுகிறது. நெல்லிக்கனியின் மருத்துவ குணம் பற்றிக் கூறுகிறீர்களா?

**பதில்:** முதுமையைத் தடுக்கும் குணம் நெல்லிக்கனிக்கு உண்டு. நெல்லிக்கனி பித்தத்தை சமப்படுத்தும். பித்த அதிகரிப்பே முதுமைக்கும், உடல் சோர்வுக்கும் காரண மாகிறது. பித்தத்தைக் குறைத்து இரத்தத்தோடு சேர்ந்து உள்ள கொழுப்பை அகற்றும் சக்தி நெல்லிக்கனிக்கு உண்டு. அத்தோடு நார்ச்சத்து, இரும்புச்சத்து, கல்சியம், பொஸ்பரசு, விற்றமின் ஈ, என்பனவும் இதில் உண்டு.








## மேடையில் நடிக்கப்போகும் நாயகி

வேட்டையாடு விளையாடு படத்தில் கமலுடன் நடிப்பில் புகுந்து விளையாடியவர் கமலினி முகர்ஜி. இப்பொழுது இறைவி படத்திலும் நடித்துள்ளார். நீண்ட இடைவெளிக்கு பின்னர் தமிழில் தலைகாட்டியுள்ளார். குடும்பம், வேலை இரண்டையும் சமாளித்து வாழும் கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்துள்ளார். அடுத்த படம் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லையென்றார். நடிப்பு, எழுத்து, சமையல், கலைகளில் தனக்கு நிறைய ஆர்வம் உள்ளதென்றும் எதிர்காலத்தில் நிறைய எழுத திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். மேடை நாடகங்களில் முன்னர் நடித்திருந்ததாகவும், சந்தர்ப்பம் கிடைத்தால் இனியும் நடிப்பேன் என்றும் கூறியுள்ளார்.


## தியாகராஜன் ரிட்டர்ன்

தியாகராஜனிற்கு பல முகம். சில ஹிட் படங்களின் நாயகன். வில்லன் வேடமும் ஏற்றார். குணசித்திர வேடமும் போட்டார். படம் இயக்கினார். தயாரித்தார். மகன் பிரசாந்த் நடிக்க வந்தபின் நடிப்பிற்கு மழுக்கு போட்டுவிட்டார். நீண்ட இடைவெளிக்கு பின்னர் இப்பொழுது நடிக்க வருகிறார். பாக்கியராஜ் மகன் சாந்தனு நடிக்கும் வாய்மை படத்தில் நாயகனின் தந்தையாக நடிக்கிறார். அவரது ஜோடி பூர்ணிமா பாக்கியராஜ். இதுதவிர இன்னும் சில படங்களிலும் நடித்து வருகிறார். இனி நடிப்பில் தொடர்ந்து கவனம் செலுத்த போகிறாராம்.



## தன்ஷிகாவின் கடந்தகாலம்

தமிழில் சொல்லிக் கொள்ளும் வாய்ப்புக்கள் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தவர் தன்ஷிகா. சிறு பட்ஜெட் நாயகியாகத்தான் இருந்தார்.ஆனால் காத்தாடி, பிரதேசி, பேராண்மை உள்ளிட்ட படங்கள் அவரது மார்க்கெட்டை உயர்த்தி விட்டன. இப்பொழுது ரஜினியின் கபாலி ஒரேயடியாக மாற்றிவிட்டது. இப்பொழுது முன்னணி நாயகிகள் பட்டியலுக்கு தன்ஷிகா வந்துவிட்டார். அண்மையில் நடந்த நிகழ்வொன்றில் கடந்தகாலம் பற்றி உணர்ச்சிவசப்பட்டு பேசியிருக்கிறார். 'நடிக்க வந்த புதிதில் இலக்கில்லாமல் ஓடிக்கொண்டிருந்தேன். அங்கிள் ஒருவரும், தந்தையும்தான் என்னை காப்பாற்றி வழிநடத்தினார்கள். இப்பொழுது இந்த இடத்திற்கு வந்துள்ளேன்' என நெகிழ்ந்துள்ளார்.



## 'திடீர்' சித்தார்த்

தமிழில் நல்ல படங்களில் நடித்திருந்தாலும் நிலையான மார்க்கெட் இல்லாமல் தவிக்கும் ஒரே ஹீரோ சித்தார்த். மொக்கைப்படம் நடித்தவர்கள் எல்லாம் பெரிய படங்களில் நடித்துக் கொண்டிருக்க, சித்தார்த்தான் திண்டாடிக் கொண்டிருக்கிறார். அண்மைய சில படங்கள் கைகொடுக்காமல் விட்டதால் படத்தேர்வில் அவதானமாக இருந்தார். கடந்த வருடம் எனக்குள் ஒருவன் படத்தில் மட்டுமே நடித்தார். இப்படி அமைதி காத்த சித்தார்த் இப்பொழுது ஒரே சமயத்தில் நான்கு படங்களில் நடிக்க சம்மதித்துள்ளார். நல்ல படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளதான் மூலம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவேன் என்றும் கூறியிருக்கிறார்.

## குத்துப்பாட்டை கைவிட்ட சுஜா

சுஜா வருணீ இதுவரை தமிழ் சினிமாவின் குத்துப்பாட்டு நடிகை. பென்சில் படத்தில் நடித்ததன் பின்னர் குத்துப்பாட்டை நிறுத்திவிட்டார். இந்தப்படத்தில் பாடசாலை ஆசிரியை வேடம். நடிக்க கிடைத்த வாய்ப்பை சுஜா பயன்படுத்தி நல்ல ஸ்கோர் செய்துள்ளார். பலரும் அவரது நடிப்பை பாராட்டியுள்ளனர். இனிமேல் கரக்டர் ரோல்தான் செய்யப்போவதாக அறிவித்துள்ளார் சுஜா. போதாதற்கு ரம்யா கிருஸ்ணன்தான் தனது ரோல் மொடல் என்றும் அறிவித்துள்ளார். எத்தனைபேருடன் நடித்தாலும் அவர் நடிப்பில் தனித்து தெரிவார். அப்படி இருக்கத்தான் தனக்கும் விருப்பம் என்றுள்ளார். பொசிட்டிவ், நெகட்டிவ், டான்ஸ் என அனைத்திலும் அவர் பெயர் வாங்கிவிடுவார். அவரது இடத்தை பிடிக்காவிட்டாலும் நிழலையாவது பிடித்துவிடுவேன் என கூறியுள்ளார் சுஜா வருணீ.

# ரீல் டாக்கீஸ்



## களைகட்டும் லட்சுமிமேனன்

லட்சுமி மேனன் சில காலம் வரை ஊடகங்களின் வெளிச்சத்தில் இருந்து வந்தார். ஆனால் வேதாளம் படத்தின் பின்னர் அவர் சொல்லும்படியான படமொன்றிலும் நடிக்கவில்லை. மிருதன் படமும் சுமாராகத்தான் போனது. இப்பொழுது விஜய் சேதுபதியின் றெக்க படத்தில் நடிக்கிறார். இப்பொழுது மீண்டும் பரபரப்பாக பேசப்படுகிறார். இதில் மிக ஆர்வத்துடன் நடித்து வருகிறாராம். இரண்டாவது இன்னிங்சில் கிராமப்புற வேடங்களில் நடிப்பதில்லையென முடிவெடுத்துள்ளாராம்.



## கைகழுவிய ரன்வீர்

ரன்வீர்கபூரும் கத்ரீனா கைப்பும் சிறிதுகாலம் முன்னர்வரை நெருக்கமான காதலர்கள். இப்பொழுது ஆளையாள் திரும்பியும் பார்க்காமல் இருக்கிறார்கள். திருமணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பிரிந்துவிட்டார்கள். காதலர்களாக இருந்தபோது இருவரும் சேர்ந்து நடித்த படமொன்று பாதியில் நிற்கிறது. இப்பொழுது மீண்டும் படப்பிடிப்பு ஆரம்பித்துள்ளது. காதல்காட்சியில் ரன்வீரும் கத்ரினாவும் முகத்தை திருப்பிக் கொண்டு இருந்தார்களாம். இதனால் இயக்குனர்தான் திண்டாடிவிட்டாராம். ஒருகட்டத்தில் ரன்வீர் சொன்னாராம், 'காதல்காட்சிகளை இயன்றவரை குறைத்துக் கொள்ளுங்கள். இதுதான் நாங்கள் சேர்ந்து நடிக்கும் கடைசிப்படம்' என்றாராம்.



## 'கிக்' ஆன பூனம்

பூனம் பஜ்வாவை தமிழ் ரசிகர்கள் மறந்திருப்பார்கள். ஓரிரண்டு படங்களில் ஹீரோயினாக நடித்தார். ஆனாலும் தமிழில் பெயர் சொல்லும் நாயகியாக முடியவில்லை. காரணம், அமுல் பேபியாக அவர் இருப்பதே. உடம்பு வெயிட் போட்டிருப்பதை பற்றி அவரும் அலட்டிக்கொள்ளவில்லை. மற்ற ஹீரோயின்கள் என்றால் பட்டினி கிடந்தாவது இளைத்திருப்பார்கள். பூனம் இது பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. உடம்பு பற்றி அண்மையில் பகிரங்கமாக பேசியுள்ளார். இப்போதுள்ள தோற்றம்தான் கிக் ஆக உள்ளதாக பலர் சொல்லியுள்ளனர். அதனால் கொழுப்பு நீக்கி சிகிச்சை செய்ய மாட்டேன். கவர்ச்சியாக நடிக்க நான் தயார். வாய்ப்பு வந்தால் நான் தயார் என தொடைதட்டியுள்ளார்.

## தாராளம் காட்டும் ரெஜினா

கேடி பில்லா கில்லாடி ரங்கா நாயகி ரெஜினா தமிழில் காணாமல் போய்விட்டார். இப்பொழுது அவரிற்கு எஞ்சியிருப்பது தெலுங்கில் சிறிய வாய்ப்பு. அதனை தக்க வைக்க கடுமையாக போராடிக் கொண்டிருக்கிறார். அதற்காக எந்த லெவலிற்கு இறங்கிவரவும் தயாராக உள்ளாராம். தெலுங்கில் தாராளம் காட்டிய நடிகைகளுடன் ஈடுகொடுக்க முடியாமல்தான் பின்னுக்குசென்றார். கவர்ச்சிதான் கைகொடுக்கும் என்பதை உணர்ந்து, கவர்ச்சியாக நடிக்க ரெடியென அறிவித்தார். விழாக்களிலும் வில்லங்க உடையுடன் சென்றார் பலன் கிட்டவில்லை. இப்பொழுது தெலுங்கில் நட்சத்திரம் என்ற படத்தில் மட்டுமே நடித்துவருகிறார். இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள நினைத்த ரெஜினா, நீச்சல் உடைகாட்சி வைத்தால் நடிக்க தயாரென கூறி படக்குழுவிற்கு இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கிறார். நான் ரெடியென நாயகியே சொன்னால் தெலுங்கி இயக்குனர்கள் விடுவார்களா?



# யாழ்ப்பாண குடாநாட்டில் காலநிலை மாற்ற பாதிப்புக்களும் தணிப்பு நடவடிக்கைகளும்

**(Climate Change Impacts and Mitigation Measures in the Jaffna District)**

**நா.பிரதீபராஜா**
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

***த**ற்போதய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நீடித்த வாழ்கையை கருத்திற்கொண்டு 30.05.3016 இல் இருந்து 05.06.2016 பிரகடனப்படுத்தப்பட்ட சூழல் வாரத்தையொட்டி எமது இயற்கை வளங்களை பாதுகாப்பது தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யாழ் மாவட்டச் செயலக வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.*

### அறிமுகம்

காலநிலை மாற்றம் என்பது உலகின் அனைத்து சூழல் பிரச்சினைகளினதும் ஒட்டுமொத்த விளைவே ஆகும். எம்மில் அதிகமானோர் கற்பனையான மற்றும் மிகைப்படுத்தப்பட்ட விடயம் என எண்ணியிருந்த காலநிலை மாற்றம் இன்று எம் கண்முன்னே எமக்குப் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. எமது நாட்டின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட வெள்ள மற்றும் நிலச்சரிவு அனர்த்தங்களின் பின்னர் எம்மில் பலர் காலநிலை மாற்றம் என்ற ஒன்றினைப் பற்றிச் சற்று விழிப்படையத் தொடங்கியிருக்கின்றார்கள் என்பது கவனிக்கத்தக்கது. எனவே இக்கட்டுரை காலநிலை மாற்றம் அதனுடைய தாக்கம் மற்றும் அதனைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றிய விடயங்களை ஆராய்வதாக உள்ளது.

காலநிலை மாற்றம் என்பது வானிலை மூலக்கூறுகளான மழைவீழ்ச்சி, வெப்பநிலை, ஈரப்பதன், ஆவியாக்கம், வளிமண்டல அமுக்கம் போன்றவற்றில் ஏற்படுகின்ற நீண்ட கால மாற்றம் எனினும் வெப்பநிலை மாற்றமே ஏனைய மூலக்கூறுகளின்; மாற்றத்துக்கு பிரதானமான காரணமாக அமைகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும், காலநிலைக் காரணிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளன. விவசாயம், கடற்றொழில் போன்ற பொருளாதார நடவடிக்கைள் மட்டுமன்றி மக்களின் அன்றாட அசைவுகள் போன்றவற்றினைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக இவை உள்ளன. மேற்படி காலநிலைக் காரணிகளின் மாற்ற நிலைமைகள் மக்களின் அன்றாட வாழ்வில் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. உலகளாவியரீதியில் ஏற்பட்டுவரும் மாறுதல்களைப் பொறுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டினது காலநிலை தன்மைகளும் மரிக்கொண்டு வருகின்றன. இதனால் மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு உதவியாகத் தற்போதுள்ள காலநிலைப் போக்குகளை அறிந்து கொள்ள வேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது வேறான காலநிலைப் பண்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஒருபருவ வரட்சியையும் ஒரு பருவ ஈரத்தையும் கொண்டதான யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலையில் பல்வேறு புவியியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும், இந்திய உபகண்டம், மற்றும் வங்காள விரிகுடாவின் மிகப் பரந்த கடற்பகுதி என்பன யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலையில் பெரும் செல்வாக்கினைச் செலுத்துகின்றன. விளாடிமிர் கெப்பன் (Wladimir Koppen, 1846 – 1940) என்பவரின் காலநிலைப் பாகுபாட்டில் உலர் கோடை உப அயன (The Dry Summer Sub Tropical-CSa, CSb) காலநிலைப் பாகுபாட்டிற்கான காலநிலைப் பண்புகளைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலை மாற்றத்தினை அறிந்து கொள்வதனூடாக தணிப்பு நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க முடியும்.


**யாழ்ப்பாணக் குடாநாட்டு மழைவீழ்ச்சி ஆண்டுதோறும் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதற்குப் பருவ கால ரீதியாக ஏற்பட்டு வரும் மாறுதல்களும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்களுமே காரணமாகும்.**

### மழைவீழ்ச்சிப் போக்குகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் பெரும்பகுதி வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினாலேயே கிடைக்கின்றது. இதனைவிட அயன இடை ஒருங்கல் வலயத்தின் விரிவாக்கம், மேற்காவுகைச் செயற்பாடு சூறாவளி மற்றும் அயனக் குழப்பங்கள் என்பவற்றினாலும் இப்பிரதேசம் மழையைப் பெறுகின்றது. எனினும் நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையான காலப்பகுதிகளிலேயே இப்பிரதேசம் தனது மொத்த மழைவீழ்ச்சியில் 80% இற்கு மேற்பட்ட மழையினைப் பெறுகின்றது. இதனைவிட அயன இடை ஒருங்கல வலயத்தின் விரிவாக்கம், மேற்காவுகைக் காலங்களிலும் இடைப் பருவப் பெயர்ச்சி (Inter Monsoon) காலங்களிலும் 15% இற்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது.



யாழ்ப்பாணக் குடாநாட்டு மழைவீழ்ச்சி ஆண்டுதோறும் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதற்குப் பருவ கால ரீதியாக ஏற்பட்டு வரும் மாறுதல்களும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்களுமே காரணமாகும்.



### ஜனவரி ஏப்ரல் வரையான சராசரி மழைவீழ்ச்சி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆண்டு ரீதியாகக் குறிப்பிட்ட மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறைவடைந்து கொண்டு செல்கின்ற நிலைமையைக் காணலாம். இந்தவகையில் 1930 ஆம் ஆண்டுதொடக்கம் 1960 வரையில் ஜனவரிமாத சராசரி மழைவீழ்ச்சி 91.2 mm ஆகக் காணப்பட்டது. இது 1961 - 2015 வரையான காலப்பகுதியில் 67.1 mm ஆகக் குறைவடைந்துள்ளது.


மேலும் 2000 - 2008 வரையான காலப் பகுதியில் இது 89.7 mm ஆகக் காணப் பட்டுள்ளது. 2000 - 2008 வரையான காலப் பகுதியில் 2002 ஆம் ஆண்டு 144.5 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. ஆனால் 2004 ஆம் ஆண்டிலிருந்து ஜனவரியில் கிடைகின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறைவாகவே உள்ளது. இதற்கு வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றினது செல்வாக்கு டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியிலேயே வலுவிழந்து காணப்படுவது ஒரு காரணமாக இருந்தாலும், இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டினைச் சூழவுள்ள கடல்களில் காணப்படும் வெப்ப மாற்றங்களும் காரணமாகும். எனினும் மழைவீழ்ச்சி குறைவடைவதனைக் காணமுடியும்.

ஆனால் பெப்ரவரி மாதத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. 1931 - 1960 வரையான காலப்பகுதியில் 34.8 mm மழைவீழ்ச்சியும் 1961 - 1991 வரையான காலத்தில் 39 mm மழைவீழ்ச்சியும், 2000 - 2089 வரையான காலத்தில் 42.7 mm மழைவீழ்ச்சியும், சராசரியாக கிடைத்திருப்பதரனைக் காணலாம். பெப்ரவரியின் பிற்பகுதிகளில் உகைப்புச் செயன்முறையினால் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் அளவு அதிகமாகவிருப்பதுடன் ஜனவரி மாதப் பிற்பகுதியில் அதிகரித்து வருகின்ற வெப்பநிலையினால் வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்கச் செயற்பாடுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவை அதிகரிக்கச் செய்துள்ளன எனலாம். எனினும் கடந்த 2000ம் ஆண்டிலிருந்து ஜனவரி மற்றும் பெப்ரவரியில் கிடைக்கின்ற மழைவீழ்சியில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்)

சமூக வலைத்தளங்களில் /deepamlive





மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தியாகி கக்கனை முதல்வர் எம்.ஜி.ஆர். அன்புடன் நலம் விசாரிக்கிறார். உடன் காளிமுத்து. பாலகுருவா ரெட்டியார்.

எம்.ஜி.ஆர் **100** நெடுந்தொடர் 9

# தியாகி கக்கனுக்கு செய்த உதவி

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்** முதல்வராக இருந்த சமயம். 1978ம் ஆண்டு இறுதியில் ஒருநாள். முதல்வரை சந்தித்து மனுக்கள் அளிக்க எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்ட வீட்டில் மக்கள் குழுமியிருக்கின்றனர். அவர்களிடையே ஒரு பெண்மணி தயங்கித் தயங்கி நிற்கிறார். எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் அந்தப் பெண்மணியிடம் விசாரிக்கின்றனர். தனது கணவர் பற்றிய விவரங்களைச் சொல்லி தானும் தனது குடும்பமும் படும் கஷ்டங்களை கூறி முதல்வரை சந்தித்தால் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வந்திருக்கிறார் அந்தப் பெண்மணி.

வீட்டில் இருந்து வெளியே வந்து மக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டு கோட்டைக்கு காரில் ஏறிப் புறப்பட தயாரான எம்.ஜி.ஆரிடம் அந்த பெண்மணி பற்றிய விஷயம் தெரிவிக்கப்பட்டது. காரில் இருந்து இறங்கி பெண்மணி நின்றிருந்த இடத்துக்கே சென்று வணக்கம் தெரிவித்து வரவேற்று முதலில் அவரது கணவரின் நலன் பற்றி விசாரிக்கிறார். அவரை சாப்பிடச் சொல்லிவிட்டு, பின்னர், அவரது குடும்ப நிலைமை அறிந்து கொண்ட பின், தனது டிரைவரை அழைத்து அந்த பெண்மணியை வேறு காரில் அவரது வீட்டில் கொண்டு விட்டு வருமாறு கூறுகிறார். கவலை தீரும் என்ற நம்பிக்கையில் அந்தப் பெண்ணும் நிம்மதியாக எம்.ஜி.ஆரின் காரில் சென்றார்.

அ ந்தப் பெண்மணி... பெருந்தலைவர்

**கக்கனைக் கண்டதும் எம்.ஜி.ஆருக்கு கண்கள் கலங்கின. மருத்துவமனையில் தனக்கு தெரிவிக்காமல் சேர்ந்தது பற்றி கக்கனிடம் அன்புடன் தனது கவலையை வெளிப்படுத்தியதோடு, மருத்துவர்களை அழைத்து கக்கனுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டார்.**

காமராஜர் ஆட்சியில் அமைச்சராக இருந்த தியாகி கக்கனின் மனைவிதான். மதுரை மாவட்டம் மேலூர் அருகே தும்பைப்பட்டி என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர் தியாகி கக்கன். சுதந்திரப் போராட்ட வீரரான அவர் 10 ஆண்டுகள் தமிழக அமைச்சரவையில் பணியாற்றியவர்.

அமைச்சர் பதவிக் காலத்துக்குப் பின் மக்களோடு மக்களாக பஸ்ஸில் சென்றவர் என்பதிலிருந்தே பொதுவாழ்வில் அவர் எவ்வளவு புடம் போட்ட தங்கமாக வாழ்ந்திருக் கிறார் என்பது விளங்கும். வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வசித்து வந்த கக்கனுக்கு வாடகைப் பணம் 170 ரூபாயை கூட கொடுக்க முடியாத துரதிர்ஷ்டவசமான நிலைமை.

பல மாதங்களாக வாடகை பாக்கி இருந்த தால் அவருக்கு நோட்டீஸ் அனுப்பினர் அதிகாரிகள். இருந்தாலும் தன் கஷ்டம் தன்னோடே இருக்கட்டும் என்று காலம் கடத்தி வந்தார் கக்கன். ஒருநாள் வீட்டுக்கு சீல் வைப்பதற்காக அதிகாரிகள் வந்து விட்டார்கள். "வாடகையை கட்டுங்கள் இல்லை, வீட்டிலிருந்து வெளியேறுங்கள்" என்று கூறுகின்றனர். அவர்களிடம் ஒரு நாள் அவகாசம் கேட்கிறார் கக்கனின் மனைவி.

கிடைத்த ஒருநாள் அவகாசத்தில் தங்கள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்பிய கக்கனின் மனைவிதான் ஆரம்பத்தில் உள்ளபடி, ராமாவரம் தோட்டத்துக்கு சென்று முதல்வர் எம்.ஜி.ஆரிடம் தங்கள் நிலைமையை விளக்கிவிட்டு நம்பிக்கையுடன் சென்ற அந்தப் பெண்மணி.

அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. யாருமே கஷ்டப்படுவதை பொறுத்துக் கொள்ளாதவரான எம்.ஜி.ஆர்., நாட்டுக்கு தொண்டாற்றிய தியாகி கக்கனின் குடும்பம் சிரமப்படுவதை பொறுத்துக் கொள்வாரா? வீட்டு வசதி வாரியத் துக்கு கட்ட வேண்டிய வாடகை பாக்கி மொத் தத்தையும் எம்.ஜி.ஆர். அன்றே கட்டிவிட்டார். இங்கே, ஒன்றை கவனிக்க வேண்டும். முதல்வர் எம்.ஜி.ஆர். நினைத்திருந்தால் வாடகை பாக்கி முழுவதையும் தள்ளுபடி செய்து உத்தரவிடச் செய்திருக்க முடியும். ஆனால், தனது சொந்தப் பணத்தில் இருந்து வீட்டு வாட கையை கட்டியிருக்கிறார் என்றால் அதுதான் தியாகத் துக்கு எம்.ஜி.ஆர். கொடுத்த மரியாதை.

தான் மட்டும் மரியாதை காட்டினால் போதாது, அரசு சார்பிலும் கக்கனின் தியாகத் துக்கு மரி யாதை செய்யப்பட வேண்டும் என்று விரும்பிய எம்.ஜி.ஆர். மறுநாளே உத்தரவு போட்டார்.

"முன்னாள் அமைச்சரும் சுதந்திரப் போராட்ட வீரருமான தியாகி கக்கனின் மகத்தான தேச சேவையை கருத்தில் கொண்டு அவர் வாழ்நாள் முழுவதும் வசிக்க இலவசமாக வீட்டு வசதி செய்யப்படும். அவரது குடும்பத்துக்கு மாதம் 500 ரூபாய் அரசு உதவித் தொகை வழங்கப்படும்" என்பதுதான் எம்.ஜி.ஆர். போட்ட உத்தரவு.

அதோடு நில்லாமல் அந்த உத்தரவுக்கான அரசாணை சான்றிதழையும் வெள்ளிப் பேழையில் வைத்து சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 1979ம் ஆண்டு நடந்த திருவள்ளுவர் தின விழாவில் கக்கனிடம் முதல்வர் எம்.ஜி.ஆர். வழங்கினார்.

எம்.ஜி.ஆர். ஒருமுறை மதுரை சென்றார். உடல் நலம் சரியில்லாமல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்த தனது கட்சிக்காரர் ஒருவரை பார்ப்பதற்காக அங்கு செல்கிறார். கட்சிக் காரரைப் பார்த்துவிட்டு புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது, உடல் நலம் பாதிக்கப் பட்டு தியாகி கக்கனும் இங்கே சிகிச்சை பெற்றுவருகிறார் என்று அவருடன் இருந்த வர்கள் தெரிவித்தனர். உடனே, எம்.ஜி.ஆரின் முகம் மாறியது. "இதை ஏன் முதலிலேயே தெரிவிக்கவில்லை?" என்று கேட்டு, கக்கன் எந்த வார்டில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று அறிந்து அவரை காணச் சென்றார்.


அங்குசாதாரண அறையில்சிகிச்சைபெற்று வந்த கக்கனைக் கண்டதும் எம்.ஜி.ஆருக்கு கண்கள் கலங்கின. மருத்துவமனையில் தனக்கு தெரிவிக்காமல் சேர்ந்தது பற்றி கக்கனிடம் அன்புடன் தனது கவலையை வெளிப்படுத்தியதோடு, மருத்துவர்களை அழைத்து கக்கனுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டார்.

கக்கனின் மறைவுக்குப் பிறகும் அவரது குடும் பத்தினருக்கு இலவச வீடு, அரசு உதவித் தொகை, வைத்திய வசதிகள் கிடைக்கும்படி செய்தார்.


தியாகி கக்கனுக்கு செய்த உதவிக்காக முதல்வர் எம்.ஜி.ஆரை கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லா தரப்பினரும் பாராட்டினர். கவியரசு கண்ணதாசன் தெரிவித்த பாராட்டு சற்று வித்தியாசமானது, உண்மையும் கூட. அவர் சொன்னார்... "கக்கனைப் போன்ற உண்மையான தியாகிகளுக்கு உதவி செய்யும் எம்.ஜி.ஆரை எந்தக் கட்சிக்காரனும் பாராட்டித்தான் ஆகவேண்டும்."

எம்.ஜி.ஆரின் 'நாடோடி மன்னன்' படத்தில், 'தூங்காதே தம்பி தூங்காதே....', ' அரசிளங் குமரி' படத்தில் 'சின்னப் பயலே... சின்னப் பயலே சேதி கேளடா...' போன்ற கருத்தாழம் மிக்க பாடல்களை எழுதியவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். 1959ம் ஆண்டு அக்டோபர் 8ம் தேதி இளம் வயதிலேயே அவர் மறைந்துவிட்டார். அவரது குடும்பத்தினருக்கு பண உதவி செய்து ஆறுதல் கூறிய எம்.ஜி.ஆர்., 'நாடோடி மன்னன்' படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில் அந்தப் படத்தின் பாடல்கள் ரெக்கார்டு உரிமையை அவர்களுக்கே கொடுத்துவிட்டார்!

**தொடரும்...**



அரசு விழா ஒன்றில் மூதாட்டிக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். உதவி வழங்குகிறார்.



விழா ஒன்றில் எம்.ஜி.ஆருக்கு மாலை அணிவிக்கும் சிறுவன்.

ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263





# கருவண்டின் குடம்பியான கொறவணன் புழுவில் வளர்த்தல்

## இந்த முறை GMF வளர்த்து பெருக்குவதற்குரிய சுலபமான முறையாகும்

**தேவையான பொருட்கள்.**

- கருவண்டின் குடம்பி பருவம் (கொறவணன் புழு நடுத்தர பெரிய பருவம்) (இயற்கையான கொறவன் புழு பெருகுமிடத்திலிருந்து சேகரிக்காம்)
- GMF தென்னை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- (இனப்பெருக்க ஊடகம்)பெருகுமிடங்கள்: உதாரணமாக: மாட்டெரு குவியல், மரத்தூள் கலவை, தும்புத்தூள் (சோற்றி)
- மண்பானைகள், பிளாஸ்ரிக் வாளிகள்.

**முறை:** ஒரு பானை அல்லது வாளியினை நன்றாக கழுவி சூரிய வெப்பத்தில் உலரவிடவும். இனப்பெருக்க ஊடகத்தினால் நிரப்பவும். ஊடகம் நன்றாக உலர்ந்திருந்தால் சிறிதளவு நீர் சேர்த்து ஈரலிப்பாகவும், ஒரு பொதி இனோகூலத்தினை (inoculum) பானை அல்லது தட்டிலிடவும். கருவண்டு குடம்பிகளை இப் பானை அல்லது தட்டினுள் சேர்க்கவும். நூறு கிராம் கொண்ட ஒரு பொதி இனாகூலம் (inoculum) நூற்றிற்கு மேற்பட்ட கருவண்டு குடம்பிகளுக்கு கிருமித்தொற்றிற்கு போதுமானது. இக் கிருமித் தொற்று GMF உடன் நன்றாகச் சேருவதன் பொருட்டு கருவண்டுக் குடம்பிகளை சுமார் 20 30 நிமிடங்கள் வரை அப்பானை அல்லது தட்டில் ஊருவதற்கு விடவும்.

கிருமி சேர்க்கப்பட்ட கருவண்டுக் குடம்பிகளை பானை அல்லது வாளியினுள் வைக்கவும். பெரிய பானை அல்லது வாளியாயின் 40 இலிருந்து 50 குடம்பிகளை சிறியதாயின் 5 தொடக்கம் 6 குடம்பிகளையுமிட்டு காற்று உட்செல்லக் கூடியவாறு சீலைத்துண்டினால் மூடிக் கட்டி எறும்பு மற்றும் எலிகள் உட்செல்லாத வகையில் பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

3தொடக்கம்4நாட்கள்இடைவெளியில்இப் பானை அல்லது வாளியினை பரிசீலிக்கவும். ஏதாவது இறந்த குடம்பிகள் இருப்பின் அதனை அகற்றவும். சுமார் 2 தொடக்கம் 3 கிழமைகளுள் தொற்றுக்குள்ளான இக் குடம்பிகள் பச்சை நிறமாக மாறும்.

வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்ட புதிய குடம்பிகளுக்கு கிருமித் தொற்றினை மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பச்சை நிறமான கிருமி வளர்ந்த குடம்பிகளை உபயோகிக்க முடியும். ஒரு பச்சை நிறமான குடம்பியானது சுமார் 5 எண்ணிக்கையுடைய புதிய குடம்பிகளுக்கான கிருமி தொற்றிற்கு போதுமானதாகும். (அதாவது 1 க்கு 5 விகிதம் எனும் விதத்தில்) தொற்று மேற்கொள்ளப்பட்ட இறந்த குடம்பிகளுடன், புதிய குடம்பிகளையும் சேர்த்து சுமார் 15 தொடக்கம் 20 நிமிடங்கள் வரை வைத்திருந்து பின்பு விருத்தி ஊடகத்தினை கொண்ட பானை அல்லது வாளியினுள் வைத்து சாதாரண ஈரலிப்பு தன்மையினை பேணவும். சுமார் 3 தொடக்கம் 4 நாட்கள் இடைவெளியில் பரிசீலனை செய்து, இறந்த கிருமி தொற்றாத குடம்பிகளை (தவிட்டு நிறமானது) அகற்றவும், சுமார் 2 தொடக்கம் 4 கிழமைகளும் தொற்றிற்கு உள்ளான இறந்த குடம்பிகளைப் பெற முடியும்.

**பூஞ்சண தொற்றுடைய குடம்பிகளின் அறிகுறிகள்.**

1. தொற்று மேற்கொள்ளப்பட்ட குடம்பிகள் 12 தொடக்கம் 15 நாட்களில் இறந்துவிடும். தவிட்டு நிறமான புள்ளிகள் காணப்படுவதுடன், கடினமானதாகவும் இருக்கும்.
2. குடம்பிகள் இறந்து 4 தொடக்கம் 5 நாட்களில் அவற்றின் மேல் வெள்ளை நிறமான பூஞ்சணக் கொடி வளர்ந்திருக்கும்.
3. பூஞ்சண வித்தி உற்பத்தியுடன் இறுதியாக குடம்பிகளானது பச்சை நிறமாக மாறும். இந்த நிலையானது "பச்சை முயுஸ்காடின் நிலை" எனப்படும்.

கருவண்டினை கட்டுப்படுத்துவதற்காக GMF இனை உபயோகித்தல்

**01.இயற்கையான இனப்பெருக்க சூழலில் உபயோகித்தல்.**

மாட்டெருக்குவியல், சிதைவடையும் பழைய தென்னங்குற்றிகள், மற்றும் தென்னம் மரம் அரியும் ஆலையில் காணப்படும் அரிதூள் குவியல் ஆகிய இயற்கையான கருவண்டு இனப்பெருக்கம் செய்யும் இடங்களுக்கு மேற்படி GMF இனை நேரடியாக உபயோகிக்க முடியும்.

இவ் இனப்பெருக்கம் செய்யும் ஊடகத்தில் இலேச துளைகளிட்டு அதனுள் GMF பூஞ்சண வித்திகள் வளர்க்கப்பட்ட சோளம் அல்லது GMF தொற்றப்பட்ட கருவண்டு குடம்பிகளைச் சேர்த்து மூடிவிடவும். இவ் இடத்தினை சூரிய வெளிச்சத்திலிருந்து பாதுகாப்பதுடன் பூஞ்சண தொற்றினை ஊக்குவிப்பதற்காக சில நாட்களுக்கு அவ் இடத்தினை ஈரலிப்பாக வைத்திருக்கவும். இச் செயற்பாடானது. பூஞ்சணவன் இனப்பெருக்க ஊடகத்தில் நன்றாக வளர்வதற்கு உதவுகின்றது.

**02. செயற்கையான இனப்பெருக்க சூழலினை உருவாக்கப்பட்ட பெட்டிகளை உபயோகித்தல்.**

இயற்கையாக கருவண்டு இனப் பெருக்கம் செய்யும் சூழல் இல்லாத தென்னந் தோட்டங்களில், மேற்படி செய்கையான முறையில் உருவாக்கப்பட்ட பெட்டிகளை உபயோகிக்க முடியும். இப் பெட்டிகளின் இனப்பெருக்க ஊடகத்தினையிட்டு கருவண்டினைக் கவர முடியும். இவ் செயற்கைப் பெட்டி ஊடகத்திற்குப் பின்பு GMF வித்தி சேர்க்கப்படுகின்றது. சுமார் 50 கிராம் GMF வித்தி (பொதியின் 1/4 பங்கு) அல்லது தொற்றிற்குள்ளான 10 குடம்பிகள் ஒரு பெட்டிக்குப் போதுமானது. செயற்கைப் பெட்டிகளை இரண்டு முறைகளில் உருவாக்க முடியும். அதாவது தோட்டத்தில் 1மீற்றர் ஜ் மீற்றர் ஜ் 1/2 மீற்றர் அளவினைக் கொண்ட குழிகள் அல்லது நான்கு தென்னம்

குற்றிகளைக் கொண்டு அதே அளவிலான பெட்டி போன்ற அமைப்பினை உருவாக்கி அதனுள் கருவண்டு இனப்பெருக்கம் செய்யும் ஊடகத்தினை (மாட்டெரு மற்றும் தும்புச்சோறு அல்லது அரிதூள் கலவை) சுமார் 4 தொடக்கம் 5" உயரத்திற்கு நிரப்பவும். பின்பு இதனுள் GMF வித்திப்பொதியின் 1/2 பங்கினை அல்லது GMF தொற்றிற்கு உள்ளான குடம்பிகளைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். பின்பு, பெட்டி அல்லது குழியின் மட்டத்திற்கு நிரப்பி மிகுதியாக உள்ள GMF வித்திக்குடம்பிகளைச் சேர்த்து கலந்து உலர்ந்து விடுதலைத் தடுப்பதற்காக தென்னோலை அல்லது ஏதாவது பொருத்தமான பொருட்களினால் மூடிவிடவும். இவ் இனப்பெருக்க ஊடகம் உலர்ந்திருந்தால் நீர் தெளிப்பது பிரசன்னமாகும். (குறிப்பாக வரட்சியான காலங்களில்) நன்றாக உக்கிய இனப்பெருக்க ஊடகத்தினால் பெட்டிகள் நிரப்பப்படுமாயின், கருவண்டின் இனப்பெருக்கமானது விரைவாக 1 தொடக்கம் 2 கிழமைகளில் ஏற்படும். (தோட்டத்தில் உள்ள கருவண்டின் பரம்பலைப் பொறுத்ததாகும்) ஆனால் புதிய ஊடகங்களைப் பாவித்தால் 1 தொடக்கம் 3 மாதங்களின் பின்பு தான் கருவண்டின் இனப்பெருக்கம் ஏற்படும். ஆகவே இந்நிலையில் GMF வித்திகளை 2 தொடக்கம் 3 மாதங்களில் தான் சேர்ப்பது பிரயோசனமாயிருக்கும். அப் பெட்டிகளை காகம் மற்றும் சுண்டெலி போன்ற மிருகங்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கவும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இப்பெட்டிகளைப் பரிசீலித்து புதிய கருவண்டு இனப்பெருக்க ஊடகத்தினால் நிரப்பவும். GMF தொற்றிய கருவண்டுக் குடம்பிகள் காணப்படாவிட்டால் GMF பூஞ்சண வித்திகள் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும்.





கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஆற்றுப்படுக்கையை அண்டிய பகுதிகளில் நிலக்கடலை செய்கையை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் நிலக்கடலை அறுவடை நிகழ்வு மாவடியோடை புத்தம்புரி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்று.



# பெண்ணெழுத்து 7

பி.சியா

நமது இளைஞர்கள் மத்தியில் பிரபல்யமான ஒரு வார்த்தை 'வெளிநாட்டு பார்சல்'. இன்று இளவயதானவர்கள் எல்லோரிடமும் குறிப்பாக வடக்கை மையமாக கொண்டவர்கள் பாவிக்கும் தமிழ் வார்த்தைகளில் ஒன்றாக இது மாறிவிட்டது. ஒருவகையில் இது வெப்பியாரத்தின் விளைவும்கூட.

புலம்பெயர்ந்தவர்கள் ஊரிலிருந்து பெண் எடுப்பதால் உருவான வார்த்தையிது. புலம்பெயர் மாப்பிள்ளைக்கு கழுத்து நீட்ட நிச்சயிக்கப்பட்ட ஒருத்திக்கு உள்ளூரில் பையன்கள் சூட்டும் பெயரே வெளிநாட்டு பார்சல்.

வெளிநாடுகளிற்கு செல்லும் நம்மவர்கள் நிலத்தை, வாழ்வின் பண்பாட்டை, கலாசாரத்தை உதறிவிட்டு செல்வதில்லை. அவர்கள் இன்னொரு தேசத்தில் பதியமிடப்பட்டவர்கள். புலம்பெயர்ந்தவர்களில் மிகச்சிறிய எண்ணிக்கையானவர்கள்தான் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். மிகுதியானவர்கள் பொருளாதார அகதிகள்தான். போர் அவர்களின் புலப்பெயர்வை இலகுவாக்கியது.

புலம்பெயர்ந்தவர்களின் சிறிய எண்ணிக்கையானவர்கள் தத்தமது நாடுகளில் திருமணம் செய்து கொண்டாலும், மிகப்பெரும்பான்மையானவர்கள் உள்ளூரில்த்தான் திருமணம் செய்கிறார்கள். இதற்கு இன அடையாளம் மட்டும்தான் காரணமா என்றால் சொல்லத் தெரியவில்லை. ஏனெனில், புலம்பெயர்ந்த முதல்தலைமுறையினரின் பெண்பிள்ளைகள் கணிசமாக வெளி நாடுகளில் வாழ்கிறார்கள். அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைபவர்களை விட, இலங்கையில் திருமணம் செய்யவே பெரும்பான்மையானவர்கள் விரும்புகிறார்கள்.

அப்படியானால் என்ன காரணம்? உள்ளூரில் உள்ள பெண்கள்தான் ஒழுக்கமானவர்கள் என்பதைப் போன்ற ஒருவகையான ஆழ்மன பிம்பம் உள்ளது. இதனை மெய்ப்பிக்கும் விதமான நிறைய உரையாடல்கள் ஆண்கள் மத்தியில் நடக்கும். பெண்களை பாலியல்பொருட்களாக நோக்கும் நமது ஆண்களின் பல்லாயிரம் ஆண்டுகால சிந்தனை இதன் பின்னணியில் இருக்கலாம்.

புலம்பெயர்ந்தவர்கள் உள்ளூரில் திருமணம் செய்வது சிக்கலான விவகாரமல்ல. எல்லா விடயங்களையும்போல அதுவும் சாதக, பாதக அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பிடத்தக்க சாதகமென்றால், அழகிய பெண்பிள்ளைகள் பிறக்கும் ஏழைக் குடும்பங்கள் பொருளாதாரத்தில் முன்னுக்கு செல்லலாம். பாதகமென்றால், திருமண சந்தையில் சடுதியான மாற்றத்தை ஏற்படுத்தியதை சொல்லலாம்.

அழகிய பெண்பிள்ளைகளை கண்டால், இது வெளிநாட்டு பார்சலாகத்தான் போகும் என இளைஞர்கள் உரையாடும் கலாசாரம் உருவாகியுள்ளது.

பத்தொன்பது, இருபது வயதானதும் நமது பெண்களில் பெரும்பாலானவர்களின் அடுத்த இலக்கு வெளிநாட்டு திருமணம்தான். இது அவர்களின் தவறல்ல. அப்படியான சமூகஅமைப்பொன்றை நோக்கி அவர்கள் தள்ளப்பட்டு கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை பல பெண்களிற்கு அட்சய பாத்திரமாக காண்பிக்கப்படுகிறது. பொருளாதார நெருக்கடி நீங்க இருக்கும் சுலபமான வழியிது. இதனால் பருவமடைந்தது முதலே வெளிநாட்டு மாப்பிள்ளை கனவுடன் வளரும் பெண்பிள்ளைகள் நம்மத்தியில் உள்ளனர். எப்படியும் ஒரு வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு துணையாகிவிடுவேன் என வேலைக்குகூட செல்லாமல் இருப்பவர்களையும் கண்டிருக்கிறேன்.

**பத்தொன்பது, இருபது வயதானதும் நமது பெண்களில் பெரும்பாலானவர்களின் அடுத்த இலக்கு வெளிநாட்டு திருமணம்தான். இது அவர்களின் தவறல்ல. அப்படியான சமூகஅமைப்பொன்றை நோக்கி அவர்கள் தள்ளப்பட்டு கொண்டிருக்கிறார்கள்.**

வெளிநாட்டு மாப்பிள்ளை கனவு நிறைய விபரீதங்களையும் உருவாக்கிவிடுகிறது. வயதில் கூடியவன், ஏற்கனவே திருமணம் செய்தவன், மதுவிற்கு அடிமையானவன், தவறான தொடர்புகள் கொண்டவன் என விபரங்களை அறியாமல் வில்லங்கத்தில் மாட்டுபவர்கள் உள்ளனர். வில்லங்கம் பல பெண்களை ஆயுளுக்கும் மீள முடியாத குழியில் தள்ளிவிடலாம். வில்லங்கம் விதவிதமான வடிவங்களில் வரும்.

அப்படியொரு கதைக்கு சொந்தக்காரிதான் கவிதா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). யாழில் உள்ள பெண்கள் அமைப்பொன்றில் நீதியும், பாதுகாப்பும் வேண்டி அவர் தஞ்சமடைந்தார். அப்பொழுதுதான் அவரது கதையை அறிந்தேன்.

யாழில் உள்ள வர்த்தகர் ஒருவர். அவர் சாரதி பயிற்சி நிறுவனமும் வைத்திருக்கிறார். அவரது மகன் ஐரோப்பாவிலிருந்து ஊருக்கு வந்த சமயத்தில் பெண் பார்த்தார்கள். கவிதாவை பிடித்துப் போக உடனடியாக திருமணம் நடந்தது. கவிதா பார்ப்பதற்கு அழகான தோற்றத்துடையவள். அறிவாளி. குடும்பம் நன்றாகவே சென்றது. ஒரு வருடத்தில் பெண்குழந்தையும் பிறந்தது.

மனைவி இலங்கையிலேயே இருக்க கணவன் மட்டும் ஐரோப்பாவிற்கு சென்று, விடுமுறைகளில் வந்து போனான். கணவனின் தந்தை, தாயுடன் இருந்ததால் கவிதாவிற்கு வாழ்க்கை தொடர்பான எந்த சஞ்சலமும் இருக்கவில்லை.

ஒரு விடுமுறைக்கு ஊருக்கு வந்தபோதுதான் அந்த விபரீதம் நிகழ்ந்தது. தனது தந்தையின் வர்த்தகநிலையத்தில் பணிபுரியும் இளம்யுவதியொருவரிற்கும் அவனிற்குமிடையில் பழக்கம் ஏற்பட்டது. பழக்கம் நாளடைவில் நெருக்கமாகிவிட்டது.

நாகரிகமாக உடையுடுத்தி, எப்பொழுதும் துறுதுறுவென இருக்கும் அந்தப்பெண் வேலையில் இணைந்து சிறிதுகாலம்தான். தனக்கு திருமணமானதை மறைத்து காதல் வலையை அவன் வீசினான். அவளும் சம்மதித்தாள். பெற்றோருக்கு தெரியாமல் காதல் பறவைகள் உல்லாசமாக பறக்க ஆரம்பித்தன.

இந்த உறவு வலுக்க, கவிதாவை விட்டு விலக ஆரம்பித்தான் அவன். விலகல் இருவரிற்கிடையிலும் அடிக்கடி மோதலை ஏற்படுத்தியது. கணவனின் நடத்தையில் சநதேகம் கொண்ட கவிதா, அவனை இரகசியமாக அவதானித்துள்ளாள். அப்பொழுதுதான் அவனது கள்ளக்காதல் தெரியவந்தது. அவனது தந்தை, தாயிடம் முறையிட்டு அழுதாள். அவர்களும் அவனது நடத்தையை கண்டித்தார்கள். புதிதாக வேலைக்கு வந்த அந்த பெண்ணையும் வேலையை விட்டு நிறுத்தினார்கள்.

ஆனால் உல்லாசப்பறவைகளை யாராலும் பிரிக்க முடியவில்லை. அவர்களின் இரகசிய உறவு தொடர்ந்தது. விடுமுறை முடிந்தும் திரும்பிபோக மறுத்து கணவன் இங்கேயே இருக்க ஆரம்பித்தான். இதனால் கவிதாவின் சந்தேகம் அதிகரித்தது. அவனிற்கு வேறும் பெண்களுடன் தொடர்பிருப்பதாக சிலர் அவளிடம் கூறினார்கள்.

திடீரென ஒருநாள் கணவன் சொன்னான் தான் சிலகாலம் கொழும்பில் தங்கியிருக்க போவதாக. இதற்கு கவிதா சம்மதிக்கவில்லை. தானும் அங்கு வரப்போவதாக அடம்பிடித்து சென்றாள்.

கவிதாவின் வரவை விரும்பாவிட்டாலும், தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொண்டான். கொழும்பில் ஒரு பிளற் எடுத்து கவிதாவையும் பிள்ளையையும் தங்க வைத்தான். சிறிதுகாலத்தின் பின்னர்தான் கவிதா அறிந்தாள் கீழ் பிளற்றில் இருப்பது அவனது கள்ளக்காதலிதான் என்பதை. அப்பொழுது எல்லாம் தலைமுழுகியிருந்தது.

கொழும்பு சென்ற புதிதில் தனிமையிலிருந்து தப்பிக்க கவிதா வேலைக்கு செல்ல ஆரம்பித்தாள். கணவனும் முழுச்சம்மதத்துடன் அனுப்பினான். அவள் மாலையில் வீடு திரும்பும்போது பிள்ளை விறைப்பாக பயந்துபோயிருப்பதைப் போல உணரத் தொடங்கினாள். குழந்தைக்கு ஏதோ நடக்கிறது என்பதை ஊகித்த கவிதா அதை கண்டுபிடிக்க முடிவு செய்தாள்.

ஒருநாள் அலுவலகம் சென்றவள் சிறிதுநேரத்திலேயே திரும்பி வந்தாள். யன்னல் வழியாக பார்த்தபோது அவளை உலகம் கைவிட்டதாக உணர்ந்தாள். கீழ்தளத்தில் குடியிருந்த கள்ளக்காதலியும், கணவனும் உல்லாசமாக இருந்ததையும், குழந்தையை கதிரையில் கட்டிவைத்திருந்ததையும் கண்டாள். உடனே அதனை தனது கையடக்கத் தொலைபேசியில் பதிவுசெய்ய ஆரம்பித்தாள்.

மறைக்கும் வரைதானே இரகசியம். அம்பலமான பின்னர் மறைவெதற்கு? கவிதாவிடமிருந்து கையடக்கத்தொலைபேசியை பறித்த கணவன் நிலத்தில் எறிந்து உடைத்ததுடன், அவளையும், பிள்ளையையும் கட்டிவைத்து அடித்தான். கள்ளக்காதலியை கைவிட முடியாதென்றும், கவிதா வேலைக்கு சென்றபின்னர் பிள்ளையை பார்க்க அவள் வருவாள் என்றும் கணவன் முடிவாக கூறிவிட்டான்.

இதற்கு மேலும் அவனுடன் வாழ முடியாதென தீர்மானித்த கவிதா மறுநாளே பிள்ளையுடன் யாழ்ப்பாணம் வந்துவிட்டாள். தன்னைதேடி வீட்டிற்கு செல்வார்கள் என்பதை ஊகித்து நண்பியொருத்தியின் வீட்டில் தங்கினாள். அங்கிருந்து கொண்டு தனக்கும், பிள்ளைக்கும் பாதுகாப்பு கோரி யாழில் இயங்கும் மகளிர் அமைப்பொன்றின் துணையை நாடினாள்.

அவனிடமிருந்து சட்டப்படி விலக முடிவு செய்தாள். பிள்ளையை தன்னிடம் ஒப்படைக்கும்படியும், இல்லாவிட்டால் பிள்ளையை கடத்துவேன் என்றும் அச்சுறுத்தியுள்ளான். அவனது பெற்றோரும் பிள்ளையை ஒப்படைக்கும்படி அல்லது கணவனுடன் ஒத்திசைவாக வாழும்படி கேட்டார்கள்.

அந்த குடும்பத்திடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாதென உணர்ந்ததன் பின்னர் பொலிஸ் நிலையம் சென்றதாக கூறுகிறார் கவிதா. விடயம் பொலிஸ்வரை சென்றதையடுத்து அவன் ஐரோப்பாவிற்கு தப்பியோடிவிட்டான். அவனை நம்பிச்சென்ற கள்ளக்காதலியும் நடுத்தெருவில் நிற்க வேண்டியதாகிவிட்டது.

வயதான தனது பெற்றோர்களுடன் தங்கியிருப்பது அவர்களிற்கு மனக்கஸ்டத்தை ஏற்படுத்துமென நினைத்த கவிதா, பிள்ளையுடன் யாழ்ப்பாணத்தில் அறையொன்றை வாடகைக்கு எடுத்து குடியிருக்கிறார்.

எட்டுத்திக்கும் சென்று கலைச் செல்வங்களை கொண்டுவருமாறு பாரதி சொன்னான். நம்மவர்கள் சிலர் காவாலித் தனங்களையல்லவா கொண்டு வருகிறார்கள்.

# அழகின் இரகசியம் 23

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com





தலைமுடிக்கு அடுத்தாற் போல் முகத்திற்கு அழகு சேர்ப்பது நெற்றி தான். நெற்றியில் உயரமான நெற்றியாக இருந்தாலும் குறைவாக இருந்தாலும் நாம் செய்யும் “ஹெயா ஸ்டைலைக்” கொண்டே சரிப்படுத்தி விடலாம்.

முன் நெற்றி வழுக்கை உள்ளவர்கள் ஃப்ரின்ச் கட் செய்து கொள்ளலாம்.

நீங்கள் வைத்துக் கொள்ளும் பொட்டும் உங்களது முகத்திற்கு அழகு சேர்க்கும். தரமான பொட்டை பொருத்தமான கலரில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒலிவ் எண்ணெய் மிதமான சூட்டில் நெற்றியில் வட்ட வடிவான மசாஜ் செய்யவும்.

புருவங்களை ஐபுரொ காஜல் பென்சிலால் மற்றும் லைனராலும் அழகு படுதலாம்.

புருவங்களில் முடி இல்லாதவர்கள் விளக்கெண்ணெயை லேசாக சூடாக்கி இரவு மசாஜ் செய்யவும். காலையில் முகத்தைக் கழுவவேண்டும். இப்படி ஒரு மாதம் செய்தால் நன்கு புருவ முடி வளரும்.

### புருவ முடிக்கு நிறம் கிடைக்க

விளக்கெண்ணெய் கரிசலாங்கண்ணி எண்ணெய் தலா 5 சொட்டு எடுத்து சூடு செய்து நெல் உமி ஒரு சிட்டிகை கலந்து புருவங்களில் மசாஜ் செய்யவும். அரை மணி நேரம் கழித்து வெது வெதுப்பான நீரில் கழுவவம். இதை வாரம் மூன்று முறை செய்யவும்.

### மூக்கின் மேல் உள்ள கரம்புள்ளிக்கு

தோலின் உள்ளே இருக்கும் துவாரங்களில் அழுக்கு சேரும் போது மூக்ககில் கரும்புள்ளி தோன்றும்.

ரோஜா இதழ்கள்10

சூடான நீர் 1/2 ரம்ளர்

சுடு நீரில் ரோஜா இதழ்கனள அரை மணி நேரம் ஊற வைக்கவும். பின் அரைத்து மூக்கில் தடவவும்.

வ்வக்ஸ்

சீனி1கப்

எலுமிச்சம்பழசாறுஒரு கப்

தண்ணீர்ஒரு கப்

இவற்றை அடுப்பில் குறைந்த நெருப்பில் வைத்து சுடாக்கினால் வ்வக்ஸ் ஆகும். இதை மூக்கில் கரும்புள்ளி இருக்கும் இடத்தில் தடவவும். அதன் மேல் கொட்டன் துணியை வைத்து வேகமாக இழுத்தால் கரும்புள்ளி வந்து விடும். முகத்தில் மற்ற இடத்தில் வ்வக்ஸ் போட்டால் பரு அதிகரிக்கும்.

### மூக்கின் மேல் உள்ள எண்ணெய் பசைக்கு

சிலருக்கு எப்பொழுதும் மூக்கின் மேல் பளபளப்பாக எண்ணெய் பசையுடன் காணப்படம். இதைத் தவிர்க்க ஒரேஞ் பழச்சாற்றுடன் முல்தாணி மெட்டி கலந்து தேய்த்து வரலாம். அவ்வப்போது டிஷ்யூ பேப்பர் கொண்டு ஒற்றி எடுத்தலும் எண்ணெய் பசை போகும்.

### கழுத்து கறுப்பு மறைய

தக்காளி சாறு அரை டிஸ்பூன் தேன் அரை ஸ்பூன் சமையல் சோடா ஒரு சிட்டிகை மூன்றையும் கலந்து கழுத்தில் அப்பளை பண்ணி அரை மணி நேரம் கழித்து கழுவினால் சிறிது நாளில் கறுப்பு மறைந்து விடும்.

### கண் கருவளையம் நீங்க

ஒரு முட்டையின் வெள்ளைக் கருவை கண்களின் அடியில் தடவி 10 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவவும்.

உருளைக்கிழங்கு சாறு 10டிஸ்பூன்

ஆட்டா மா 1டிஸ் பூன்

கலந்து கருவளையங்களின் மீது போடலாம்.

இளம் பச்சை நிற வெற்றிளையைப் பன்னீரில் நனைத்து கண் மேல் வைத்து எடுக்கலாம்.

மேற்கண்ட சிகிச்சைச் செய்து பாருங்கள் கருவளையம் காணாமல் போய்விடும்.

### முகப்பரு தழும்பு மறைய

கடலை பருப்பு 1டிஸ்பூன் ஒரு மிளகு இவற்றை எடுத்து ஒரு டிஸ்பூன் பாலில் ஊற வையுங்கள். இதனுடன் கால் டிஸ்பூன் முல்தானி மெட்டி பவுடரை சேர்த்து கலக்குங்கள். பிறகு இதை முகத்தில் பக் ஆகப் போட்டு உலர்ந்ததும் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். பருக்கள் இருந்த வடு படிப்படியாக மறைந்து போகும்.

# தாயும் சேயும்



பிரசவ நேரத்தின்போது மேற்கொள்ள வேண்டிய முன் ஏற்பாடுகள் என்னென்ன?

மருத்துவமனையில் சேர்வதற்கு ஒருவாரம் இருக்கும்போதே எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்களை தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். தாய்ப்பால் ஊட்ட வசதியாக முன்பக்கம் திறப்பு வைத்த உடை, நீண்ட கவுன் போன்ற மாற்று உடைகள், காலணிகள், குழந்தைக்குத் தேவையான துணிகள், ஈரம் உறிஞ்சும் துண்டுகள் போன்றவற்றை மறக்காமல் எடுத்துச் செல்ல வேண்டும். ஏற்கனவே உங்களுக்கு குழந்தைகள் இருந்தால் அவர்களைப் பார்த்துக் கொள்வதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டும்.

அதேபோல் மருத்துவமனையிலிருந்து திரும்பியதும் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் தேவையான உடைகள், சோப்புகள், நாப்பிகள், துப்புரவுத் துணிகள் போன்றவற்றை தயாராக வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

உங்கள் மருத்துவர், மருத்துவமனை, கணவர், நண்பர், அவசரத்திற்குகூப்பிட்டால் ஓடிவரும் உறவினர்கள் போன்றோரின் தொலைபேசிஇலக்கங்களை குறித்துவைத்துக் கொள்ளுங்கள். அவசர நேரத்தில் அவர்களை அழைப்பதற்கு உதவியாக இருக்கும். பிரசவத்தின்போது மருத்துவமனைக்குச் செல்லும் வாகன ஏற்பாட்டையும் தயார் செய்து கொள்ளுங்கள்.

குழந்தைக்கு பாலூட்டியதும் செய்ய வேண்டியது:

குழந்தைகள் பால் குடிக்கும் போது அது தாயின் மார்பில் இருந்து தாய்பாலைக் குடித்தாலும் சரி பால் புட்டியில் குடித்தாலும் சரி பாலோடு சேர்த்து காற்றையும் சேர்த்து விழுங்கிவிடும்.

எனவே ஒவ்வொரு முறையும் பால் கொடுத்த பிறகு குழந்தையை தோளில் போட்டு முதுகின் மீது லேசாகத் தட்டி விட்டால் மிகவும் நல்லது. அப்போது அவர்களுக்கு ஏப்பம் போன்று காற்று வெளியே வரும். தோளில் போட்டு தட்டுவதைப் போன்றே சிலர் மடியில் குழந்தையை நிமிர்த்தி உட்கார வைத்துப் பிடித்துக் கொள்வார்கள். இதன் மூலமாகவும் வயிற்றுக்குள் சென்ற காற்று எளிதாக வெளியேறிவிடும்.

அதன் பிறகு குழந்தையை கீழே படுக்க வைக்கலாம். இதனால் பால் குடித்ததும் குழந்தை வாந்தி எடுப்பது போன்ற அசௌகரியங்கள் தவிர்க்கப்படும்.

இந்த விஷயத்தை எப்போதும் தவறாமல் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.



# சமையல் அறையில்

- கடலைமாவுடன் 1 ஸ்பூன் சுடு எண்ணெயை விட்டு கலந்து செய்தால் மொறு மொறு என பக்கோடா கிடைக்கும்.
- பாகற்காய் பழுக்காமல் இருக்க வாங்கிய உடனே வட்டமாக நறுக்கி இறுக்கமான பிளாஸ்டிக் டப்பாவில் போட்டு பிரிட்ஜில் வைத்தால் ஒரு வாரம் ஆனாலும் பழுக்காது.
- நீண்ட நேரம் கரண்ட் கட்டாகும் போது பிரிட்ஜ்ஜில் இருக்கும் பாலை காலியான அறையில் வைத்தால் கெடாது.
- உப்புமா செய்யும் ரவையை வானலியில் வறுத்து வைத்தால் பூச்சி வண்டுகள் வராது.
- மாவுப்பொருட்களை குளிர் காலங்களில் புழுபூச்சி வராமல் இருக்க பிரிட்ஜ்ஜில் வைக்க வேண்டும்.
- வெந்தயத்தை முதல்நாள் இரவே தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் உடல் சூடு தணியும்.
- கொத்தமல்லி கருவேப்பிலை வெந்தயகீரை வகைகளை உடனே ஆய்ந்து காற்று வெளிச்சத்தில் பிளாஸ்டிக் டப்பாவில் போட்டு வைத்தால் 1 வாரம் ஆனாலும் கெடாது.



# எட்டு விதமான கொண்டை

**1 மயில் கொண்டை**

முதலில் முன் பகுதியை சரி செய்யவும். பிறகு முடி எடுத்து போனி டைல்ஸ் போடவும். பிறகு சுற்றிலும் சுருள் மற்றும் நடுவில் ஒரு சுருள் போடவும் பிறகு மீதமுள்ள முடியில் சவுரி வைத்து பின்னல் போட்டு குஞ்சம் வைத்து பின்னவும். பிறகு மயில் வடிவத்தை அதில் இணைக்க வேண்டும்.

**2 கதம்ப கொண்டை**

நேர் வகிடு எடுத்து முன் பகுதியை சரி செய்து உச்சியில் முடி எடுத்து பில்லை செட் செய்யவும் பில்லை சுற்றி கதம்ப மலர் சுற்றி வைத்து கதம்ப இணைப்பை வைக்கவும்.

**3 மல்லிகை மற்றும் கோழிகொண்டை**

முகத்திற்கு தக்கபடி வகிடு எடுக்கவும். பிறகு தேவையான நீளத்திற்கு பின்னல் போட்டு தேவையான நிறத்தில் குஞ்சலம் வைத்து கொள்ளவும். அதன் பின்னர் மல்லிகை மற்றும் கோழி கொண்டை பூவை வைத்து அடுக்கு அடுக்காக அலங்கரிக்கவும்.

**4 முகூர்த்த கொண்டை**

தேவையானபடி வகிடு எடுத்து உச்சிபில்லை வைத்து பின்னல் போட்டு தங்க நிறம் குஞ்சலம் அல்லது குண்டு குஞ்சலம் வைக்கவும். பின்னர் சடை அலங்காரத்தை கூந்தலில் வைத்து கட்டி விடவும் பின்னர் ரோஸ் வைத்து நடு நடுவே அலங்கரிக்கவும்.

**5 ரிசப்சன் கொண்டை**

முதலில் முன்பகுதியில் "பப்" வைக்கவும். பிறகு ஓவர் டேப் சுருள் போடவும். அதன் பின்னர் மீதியுள்ள முடியை இழுத்து வைத்து பின்னல் இட்டு குஞ்சலம் வைக்கவும். அதன் பின்னர் நகை இணைப்பை உச்சியில் வைக்கவும். அதன் பிறகு கோழி கொண்டை மற்றும் மல்லிகை வைத்து அலங்கரிக்கவும்.

**6 பஷன் கொண்டை**

முதலில் முகத்திற்கு ஏற்ப வைத்து கொண்டு அதன் பிறகு உச்சிபில்லை (ராக்கொடி) வைத்து சவுரி வைத்து சடை பின்னி பிறகு குஞ்சலம் வைக்கவும். அதன் பிறகு உச்சியில் கோழி கொண்டை வைத்து அலங்கரிக்கவும். பின்னர் சடையில் நகை வைத்து அதன் மேல் கோழி கொண்டை சம்பங்கியை வைத்து அலங்கரிக்கவும்.

**7 சிம்பிள் முகூர்த்த கொண்டை**

முதலில் வகிடு எடுத்து பில்லை இணைக்கவும். பின்னர் சவுரி வைத்து குஞ் சலம் வைத்து அதன் பின்னர் மல்லிகைப்



பூவை பில்லையில் சுற்றி அதன் சடை மேல் சுற்றி விடவும். பிறகு சடை நடுவில் பென்டன்டை வைத்து அலங்கரிக்கவும்.

**8 முஸ்லிம் மணப்பெண் கொண்டை**

முதலில் முகத்திற்கேற்ப முன் பகுதியை சரி செய்யவும். பிறகு சவுரி வைத்து சடை பின்னி குஞ்சலம் வைத்து அதன் பிறகு 'கோல்டன் பீட்ஸ்' வைத்து அலங்கரிக்கவும்.



# குழந்தைகளும் உணவும்

குழந்தைவளர்ப்பில்தாய்மார்கள்முக்கிய கவனத்தை செலுத்த வேண்டியது உணவு முறையில் தான். ஒரு ஆண்டு காலம் நாம் அளிக்கும் சத்தான உணவே அவர்களின் எதிர்கால ஆரோக்கியத்திற்கு அத்திவாரமாக அமையும் என்கின்றனர் மருத்துவர்கள்.

**0 – 4 மாதம் வரை:**

தாய்ப்பாலிலேயே குழந்தைக்கு வேண்டிய அனைத்து சத்துக்களும் கிடைத்துவிடும். ஏனெனில் தாய்ப்பாலில் அளவுக்கு அதிகமான நோய் எதிர்ப்புச் சக்தி நிறைந்துள்ளது. மேலும் அந்த தாய்ப்பால் அவர்களின் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றுவதோடு பிறந்த குழந்தைக்கு மஞ்சள் காமாலையை ஏற்படுத் தும் பிலிரூபின் என்னும் நிறமியை வெளி யேற்றிவிடும். அதிலும் அந்த தாய்ப்பாலை குறைந்தது நான்கு மாதங்களுக்கு கொடுக்க வேண்டும். இதனால் அவர்களது உறுப் புகள் அனைத்தும் வலுவடைவதோடு செரி மான மண்டலமும் நன்கு செயல்பட ஆரம்பிக்கும்.

**4 – 6 மாதம் வரை:**

நான்கு மாதங்களுக்குப் பின்னர் குழந்தைகள் வேறு உணவை சாப்பிடுவதில் கவனத்தை செலுத்துவது போன்று தெரிந்தால் அப்போது ஒரு டேபிள் ஸ்பூன் வேக வைத்த இனிப்பு உருளைக்கிழங்கு கரட் அப்பிள் வாழைப்பழம் போன்றவற்றை நன்கு மசித்து கொடுக்க வேண்டும். அதிலும் இவர்களது ஆர்வத்தை எவ்வாறு தெரிந்து கொள்வதென்றால் ஒரு நாளைக்கு 810 முறை தாய்ப்பால் கொடுத்தும் அவர்கள் பசிக்கு அழுதால் அப்போது இந்த உணவுகளையும் தாய்ப்பால் கொடுத்து சிறிது நேரத்திற்குப் பின் கொடுக்கலாம். அதுவும் ஒருடேபிள் ஸ்பூன் தான் கொடுக்க வேண்டும்.

**6 – 8 மாதம் வரை:**

இந்த மாதங்களில் தாய்ப்பால் பழங்களை கொடுக்கும் போதோ மெதுவாக வேக வைத்து மசித்த சோறு காய்கறிகள் பருப்பு வகைகள் சிக்கன் போன்ற அனைத்தையும் கொடுக்கலாம். அதிலும் அவ்வாறு கொடுக்கும் போது அவர்களுக்கு 39 டேபிள் ஸ்பூன் செரலாக் 23 முறை தாய்ப்பால் மற்றும் 1/4 அல்லது 1/2 கப் வேக வைத்து மசித்த காய்கறிகள் என்று கொடுக்க ஆரம்பிக்கலாம். அவ்வாறு இவற்றையெல்லாம் கொடுக்கும் போது குழந்தைகளுக்கு அந்த உணவுகளால் ஏதாவது அலர்ஜி போன்று வருகிறதா என்று அவ்வப்போது கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வந்தால் எவற்றால் ஆகிறது என்று மருத்துவரிடம் சென்று ஆலோசித்து அவற்றை தவிர மற்றவற்றை கொடுக்கலாம்.

**8 – 10 மாதம் வரை:**

இந்த வயதில் சீஸ் தயிர் மற்றும் இரும்புச்சத்துள்ள தானியங்கள் மற்றும் ஓட்ஸ் போன்றவற்றை மெதுவாக கொடுக்க ஆரம்பிக்கலாம். அத்துடன் 1/4 கப் புரோட் டீன் உணவுகளான முட்டை மீன் போன்ற வற்றையும் கொடுக்க ஆரம்பிக்கலாம்.

**10 – 12 மாதம்:**

இந்த வயதில் அனைத்து உணவுகளையும் கொடுக்கலாம். அளவாக இருக்க வேண்டும். உணவுகள் கொடுக்கும் போது மிகவும் கவனமாகவும் அளவாகவும் கொடுக்க வேண்டும். அதாவது 1/3 கப் பால்பொருட்கள் அல்லது 1/2 கப் சீஸ் உடன் 1/4 அல்லது 1/2 கப் சோற்றுடன் காய்கறிகள் மற்றும் புரோட்டீன் உணவு களை நிச்சயம் கொடுக்க வேண்டும்.



# கீரை தோசை

**தேவையான பொருட்கள்:**

புழுங்கல் அரிசி,பச்சரிசி தலா 1கப், உழுத்தம் பருப்பு 1/4 கப், கீரை 1 கப், பச்சை மிளகாய் 3 விழுதாக அரைக்கவும், சீரகம் 1 ஸ்பூன், உப்பு தேவையான அளவு

**செய்முறை:**

1. இரண்டு வகை அரிசியையும் உழுத்தம்பருப்பையும் 2 மணி நேரம் ஊறவைத்து அரைக்கவும்.
2. கீரையை ஆய்ந்து சுடுதண்ணீரில் வேகவைத்து மிக்சியில் அரைக்கவும்.
3. அரைத்த கீரையை மாவுடன் கலந்து சீரகம் பச்சை மிளகாய் விழுது உப்பு சேர்க்கவும்.
4. தோசை கல்லில் எண்ணெ தேய்த்து மாவை வார்த்தெடுத்தால் கீரை தோசை தயார்.

இதற்கு தொட்டுக் கொள்ள ஊறுகாய் சுவையாக இருக்கும்.



# குசும்புக்காரன் பக்கம்

இலங்கை அரசதுறை விசித்திரங்கள் பல. அதில் முக்கியமானது தண்டனைமுறை. ஒரு அலுவலர் தவறிழைத்து விட்டார் என வையுங்கள். தவறென்றால் சாதாரண தவறல்ல, பெரிய தவறு. பணத்தை ஆட்டையைப் போட்டார், ஊழல் செய்தார் என வையுங்கள். பெரும்பாலும், இடமாற்றம்தான் தண்டனை. அதிலும் அதிகாரிக்கு வேண்டப்பட்டவர் என்றால் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அரச சொத்தை கையாடுவது, ஊழல் செய்வது, ஒரு சமூகவிரோத காரியம். சமூகவிரோத காரியம் ஒன்றை செய்வதென்பது வெட்கப்பட வேண்டியது. ஆனால் நமது அரசஅலுவலர்கள் மத்தியில் இது பெரிய விவகாரமல்ல. அரசசேவையை துஷ்பிரயோகம் செய்வது அவமானகரமான ஒன்றல்ல என்ற மனப்பாங்கு அரசஊழியர்களிடம் அதிகரித்து செல்வதன் விளைவுதான் மோசடிகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பின் காரணம்.

அரச சேவையில் ஆட்டையை போட்டு இடமாற்றம் செய்யப்படுபவர்கள் பற்றிய செய்திகள் இப்பொழுது அடிக்கடி வெளியாவதே இதற்கு சான்று. இதையெல்லாம் தூக்கிச் சாப்பிடுவதைப் போல அண்மையில் ஒரு சம்பவம் நடந்துள்ளது. மோசடியில் ஈடுபட்டு கையும் மெய்யுமாக அகப்பட்ட அரசஅலுவலர் ஒருவர் மீண்டும் அதே அலுவலகத்தில் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான அரசஅலுவலகம் ஒன்றில் நடந்த சம்பவம் இது. 15 வருடங்களிற்கும் மேலாக அங்கு அம்மணியொருவர் கிளார்க்காக பணியாற்றுகிறார். இவர் செய்த முறைகேடு வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அவரது முறைகேடு அம்பலத்திற்கு வந்தும், அவருக்கெதிராக எந்த நடவடிக்கையும் இல்லை. சிலமாதங்களின் முன்னர் பட்டினிக்கொடுமையால் பாடசாலை சிறுமியொருவர் தேங்காய் திருடி விவகாரம் ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்டது. பட்டினி ஒரு தேங்காயை திருட வைத்தது. அந்த செய்தி எல்லா இடமும் பேசப்பட்டது. படித்த, அரச பதவியில் உள்ள ஒரு அம்மணியும் திருடித்தான் இருக்கிறார். ஆனால் நடவடிக்கைதான் இல்லை.

அம்மணிக்கு அலுவலகத்தில் இன்னொரு பொறுப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. அலுவலகத்திற்கு தேவையான காகிதாதிகள் முதல் வாகன உதிரிப்பாகங்கள் வரை வாங்கும் பொறுப்பு அவருடையது. அதில்தான் ஆட்டையை போட்டுள்ளார்.

தேயாத வாகனத்தின் ரயரை அடிக்கடி மாற்றியும், நல்ல 'பிராண்'டில் உள்ள ரயரை கொள்வனவு செய்வதாக கணக்குப் போட்டு அதே 'பிராண்'டில் தரம் குறைந்த ரயரை கொள்வனவு செய்தும் அம்மணி பொக்கற்றை நிரப்பியுள்ளார். கொழும்பில் உள்ள ரயர் கொம்பனியுடன் டீல் போட்டு முறைகேடாக ரயர் கொள்வனவு செய்தபோது சிக்கியுள்ளார். இப்படியொரு பிரச்சனையில் சிக்கினால் அம்மணி பஞ்சர் ஆவார் என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள். அதுதான் தவறு. அம்மணி பஞ்சராகாமல் காப்பாற்றியுள்ளனர் மேல் அதிகாரிகள். மேலதிகாரிகள், கணக்காளரை இந்த புண்ணியம் சேரும்.

நீண்டகாலம் பணியாற்றியவர்களிற்கு இடமாற்றம் என அண்மையில் இடமாற்றங்கள் நடந்தபோதும் அம்மணிக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை. அதற்கு 'நாயகர்'தான் காரணமா என்றும் கேட்கிறார்கள். பிரச்சனையில் சிக்கிக்கொண்டதன் பின்னரும் அவருக்கு தண்டனை இல்லை. இடமாற்றம் வழங்குமாறு அறிவுறுத்தல் வந்தபோதும் மேலதிகாரிகள் விடவில்லையாம்.

பிறகென்ன, மீண்டும் அம்மணியின் 'கச்சேரி ஆரம்பம்'தான்.





முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர் மாநாடு அண்மையில் சிலாவத்தை தமிழ் மகாவித்தியாலயத்தில் நடந்தது. ஆசிரியர்களின் ஊர்வலத்துடன் ஆரைம்பமாகி பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.




தீபத்தின் பரிசு மழை
சென்ற வார வெற்றியாளர்கள்



தி.தர்மரூபி
2ம் ஒழுங்கை, சின்னக்குளம்,
வவுனியா.

கேள்வி
வடக்கில் இருக்கும் பறவைகள் சரணாலயம் எது?

பதில்
சுண்டிக்குளம்

தீபத்தின் இந்த மாபெரும் பரிசுத்திட்டத்தில் சரியான விடையெழுதி வெற்றியாளர் ஆகும் வாய்ப்பை இன்றே உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்...

தீபத்தின் பரிசு மழை

கேள்வி
சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் என்ன?


பதில் : ....................
பெயர் : ....................
முகவரி : ....................
தொ.பே : ....................

இந்த கூப்பனை வெட்டி நிரப்பி எமது அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நிரப்பப்பட்ட கூப்பனை புகைப்படம் எடுத்து facebook/DeepamNews என்ற முகபுத்தகத்தினூடாக எமக்கு அனுப்பவும்.

வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் லண்டன் மெட்ரோ பொலிட்டனது பெறுமதிமிக்க கட்டணச்சலுகைப் பத்திரம் வழங்கப்படும்...

II
முடிவு திகதி : 16.06.2016

இல. 211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 6633






# சரவெடி ஸம்பா

இன்றைய திகதியில் மொத்த கிரிக்கெட் உலகமும் திரும்பிப்பார்ப்பது 24 வயதான இந்த அவுஸ்திரேலியாவின் சுழற்பந்துவீச்சாளரை. அடம் ஸம்பா என்றால் அடடா என வாயைப்பிளக்கிறது மொத்த கிரிக்கெட் உலகமும். தற்போதைய சுழற்பந்துவீச்சாளர்களில் தலைசிறந்தவர் என அவரை சொல்லலாமா என்றால் இல்லைத்தான். ஏனென்றால் மொத்தம் மூன்றேமூன்று ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாடிய ஒரு வீரருக்கு அப்படியொரு கௌரவம் கொடுப்பது சற்று ஓவர்தான். ஆனாலும் தற்போதைய சுழற்பந்துவீச்சாளர்களில் அதிகம் கவனம் ஈர்ப்பவர் என்றால் ஸம்பாதான்.

சிலகாலத்தின் முன்னர் துடுப்பாட்டக்காரர்களை மிரட்டினார் அவுஸ்திரேலியாவின் லெக் ஸ்பின்னர் ஷேன் வோர்ன். அதன் பின்னர் அவுஸ்திரேலியாவில் சொல்லிக்கொள்ளும் விதமான ஸ்பின்னர்கள் கிடையாது. பிரட் ஹொக் சிலகாலம் தலைகாட்டினார். பிறகு ஸ்மித் வந்து அபாய துடுப்பாட்டக்காரராக உருமாறினார். இப்பொழுது நதன் லயன் இருக்கிறார். ஸ்பின் வறுமையில் அவுஸ்திரேலியா உழன்றுகொண்டிருந்த சமயத்தில்த்தான் ஸம்பா அறிமுகமாகியுள்ளார்.


இதுவரை மூன்று ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாடி ஆறு விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார். ஆறு T 20 போட்டிகளில் ஆடி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். எனினும், ஸம்பாவின் சரவெடியை பார்த்தது கடந்த ஐபிஎல் சீசனில்த்தான். தோனியின் அணி ஐபிஎல் போட்டிகளில் அடிமேல் அடிவாங்கி, “இவன் ரொம்ப நல்லவனா இருக்கானே“ என மற்ற அணிகள் எல்லாம் வாயைப்பிளந்து கொண்டிருந்த சமயத்தில், அதாவது போட்டிகளின் கடைசிக் கட்டத்தில்த்தான் ஸம்பாவிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஸப்பப்பா.. அதன் பின்னர் நடந்தது உண்மையில் வேட்டைதான். முதல்போட்டியில் அவர் வீழ்த்தியது 6 விக்கெட்டுக்கள். அந்த தொடரின் பின்பகுதியில் எதிராளிகளை ஈவிரக்கமில்லாமல் கூக்ளியால் காலியாக்கினார்.

ஐபிஎல் போட்டிகளின் பின்னர்தான் ஸம்பாவை எல்லோரும் திரும்பிப்பார்க்க ஆரம்பித்துள்ளனர். ஸம்பாவின் வீச்சிலும் ஆக்ரோசம், புதுமை தெரிகிறது. ஒருகாலத்தில் இலங்கையின் அஜந்த மென்டிஸ் வீச ஆரம்பித்தபோதும் இப்படியொரு நிலைமையிருந்தது. அவரது பந்துவீச்சு துடுப்பாட்டக்காரர்களை மயக்கியது. அந்த புண்ணியத்தில் இலங்கை ஒரு ஆசியக்கிண்ணத்தையும் வென்றது. யுவராஜ், சச்சின் எல்லோரையும் காலியாக்கினார் மென்டிஸ். ஆனால் மென்டிஸின் மர்மத்தை விரைவிலேயே துடுப்பாட்டக்காரர்கள் விலக்கினார்கள். சிறிது காலத்திலேயே மென்டிஸ் காணாமல் போய்விட்டார்.

மென்டிஸ் காணாமல் போனதன் காரணம், மென்டிஸிடம் புதுமை இருக்கவில்லை. மென்டிஸிடம் இருந்தது “கரம்“ புதிர் மட்டுமே. மென்டிஸின் விரல்களிலிருந்து பந்து விடுபடும் தருணத்தை கணித்தால் போதுமானது. அதன் பின்னர் அந்தவீச்சில் புதிர்கள், திருப்பங்கள் கிடையாது. தனது விரல்களிலிருந்து விடுபட்ட பின்னரும் பந்தின் புதிர் விலகாமல் இருக்க வீச்சாளரிடம் ஓயாத முயற்சி தேவை. அது மென்டிஸிடம் இருக்கவில்லை. இந்தியாவின் அஸ்வினிடம் இருந்தது.

ஸம்பாவிடமும் அந்த விடாமுயற்சி இருக்கிறது போல்த்தான் தெரிகிறது. விரல்களிலிருந்து விடுபட்ட பின்னரும் அவரது பந்துவீச்சு மர்மம் விலகாதது போல்த்தான் தெரிகிறது. குறுகிய வடிவ போட்டிகளில் மட்டும் ஸம்பா இதுவரை ஆடியுள்ளார். ஆகவே அவர் பற்றிய சடுதியான முடிவுகளிற்கு வருவதற்கான காலம் இதுவல்ல. சில டெஸ்ட் போட்டிகளில் அவர் ஆட வேண்டும். குறிப்பாக ஆசிய ஆடுகளங்களில், ஆசிய வீரர்களை அச்சுறுத்தும்வரை பொறுத்திருக்க வேண்டும். அதனை அவர் செய்வாராக இருந்தால், இன்னொரு ஷேன் வோர்ன் என சந்தேகமேயில்லாமல் கொண்டாடலாம்.




# ஜூட் விடும் ஜூனைத் கான்

பாகிஸ்தான் கிரிக்கெட்டும் ஒன்றுதான் பேரூந்து பயண நண்பர்களும் ஒன்றுதான். ஒருநாள் இருப்பவர் மறுநாள் இருக்க மாட்டார். அதென்ன மந்திரமோ மாயமோ தெரியவில்லை, ஒவ்வொரு தொடருக்கும் புதுப்புது அணியை பாகிஸ்தானியர்கள் கட்டியெழுப்புகிறார்கள். ஒருகாலத்தில் விளையாடிய பாகிஸ்தான் அணியில் விளையாடியவர்களின் பாதிக்கும் சற்று குறைந்தவர்கள் முன்னாள் அணித்தலைவர்கள்.

அப்படியென்ன அணுகுமுறையை பின்பற்றுகிறார்களோ தெரியவில்லை, அடிக்கடி அணியை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விபத்தில் சமீபத்தில் சிக்கியிருப்பவர் ஜூனைத் கான். பாகிஸ்தான் தேர்வாளர்களின் நடவடிக்கைகளால் வெறுத்துப்போய், இங்கிலாந்தில் நிரந்தரமாக குடியேறி அந்த நாட்டு அணிக்காக ஆடுவது பற்றி பரிசீலித்து வருகிறார்.

தற்போதைய பாகிஸ்தான் அணியில் விளையாடிவரும் வேகப்பந்துவீச்சாளர்களிற்குள் ஜூனைத்கான்தான் அதிகடெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியவர். 71 விக்கெட்டுக்கள் அவரது கணக்கில் உள்ளது.

பாகிஸ்தான் தேர்வுக்குழு அவரை தொடர்ந்து ஒதுக்கிவருவதையடுத்து இந்த விரக்தி முடிவிற்கு சென்றுள்ளார். கடந்த வருடம் அவரது முழங்காலில் ஏற்பட்ட காயத்தின் பின்னர் அவரால் சிறப்பாக வீச முடியவில்லையென தேர்வுக்குழு தலைவர் இன்சமாம் உல ஹக் கிரங்கமாகவே கூறியிருந்தார். இந்த பேச்சுத்தான் ஜூனைத்தை வெறுப்படைய செய்துள்ளது.

தற்போது அவர் நல்ல நிலையில் இருபதையே உள்ளூர் கிரிக்கெட் முடிவுகள் சொல்கின்றன. அண்மையில் நடந்த பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் அசத்தலாக வீசியிருந்தார். ஒரு போட்டியில் கிறிஸ்கெயிலை முதல் ஓவரிலேயே பெவிலியன் அனுப்பினார்.

ஜூனைத்சர்வதேசபோட்டிகளில்சொதப்பியதாக புள்ளிவிபரங்களும் இல்லை. இறுதியாக ஆடிய இலங்கை, இந்திய தொடர்களிலும் சிறப்பாக வீசியிருந்தார். துடுப்பாட்டக்காரர்களிற்கு சாதகமான பிட்ச்களிலும் நன்றாக வீசுவார் என பெயரெடுத்த ஜூனைத் இங்கிலாந்து தொடரில் சேர்க்கப்பட்டிருந்தால் நிச்சயம் பாகிஸ்தானிற்கு சாதகமாக அமைந்திருக்கும். சேர்க்காததன் விளைவு, இஙகிலாந்திற்கே சென்று குடியேற அவர் முடிவு செய்வதில் முடிந்திருக்கிறது.




**உடுவை எஸ். தில்லைநடராஜா**

உடுப்பிட்டி ஒரு கிராமம். அக்கிராமத்திலுள்ள ஆங்கில கல்லூரியொன்றில் ராமுவும் பாலுவும் படித்துவந்தார்கள்.

உடுப்பிட்டியின் எல்லையிலுள்ள பெரிய காட்டின் மத்தியிலுள்ள குடிசையில் ஒரு மந்திரவாதி வசித்து வருவதாகவும் அவனிடம் சக்திவாய்ந்த மந்திரக் கண்ணாடி உன்றிருப்பதாகவும் ராமுவும் பாலுவும் கேள்விப்பட்டனர்.

சிறுவர்களுக்கு எல்லாப் பொருட்களிலும் ஆசை இருக்குமல்லவா? ராமவும் பாலுவும் அந்த மந்திரக் கண்ணாடியைத் தங்கள் உடைமையாக்க வேண்டுமென்று ஆசை கொண்டனர். அம் மந்திரக் கண்ணாடியை வைத்திருப்பவர்கள் நினைத்தால் உலகத்தையே அடக்கி ஆளலாம். என்று கேள்விப்பட்ட ராமு தன் நண்பர்களை எல்லாம் அடக்கி வைத்திருக்க அந்த மந்திரக் கண்ணாடியை உபயோகப்படும் என்று நினைத்தான்.

எப்படியாவது மந்திரக் கண்ணாடியைத் தன்வசமாக்கி கொண்டால் தான் உல்லாசமாக ஊர் சுற்றி திரியலாம் என்று யோசித்தான் பாலு.

ஊர் மக்கள் மந்திரக் கண்ணாடியைத் தன்வசமாக்கி கொண்டால் தான் நிகனைத்தபடி உல்லாசமாக ஊர் சுற்றி திரியலாம் என்று யோசித்தான் பாலு.

ஊர் மக்கள் கண்ணாடியின் மகிமையைப் பற்றிப் பல விதமாகப் கதைப்பதை கேட்டராமுவும் அந்தமந்திரக்கண்ணாடியின் மேல் ஆசை வைத்தனர்.என்ன விதத்திலும் காட்டிலிருக்கும் மந்திரவாதியின் குடிசைக்குச் சென்று மந்திரக் கண்ணாடியை அபகரித்து ராமுவும் பாலுவும் திட்டமிட்டனர்.

கல்லூரி எதிர்பாராத விதத்தில் நடந்த ஒரு தீ விபத்தினால் கல்லூரியின் ஒரு பகுதி சேதமடைந்தது. அதனால் ஆசிரியர்கள் கல்லூரிக்கு ஒரு கிழமை விடுதலை விட்டார்கள்.

இது தான் சமயம் என்று எண்ணிய ராமுவும் பாலுவும் பெற்றோர்களிடம் ஸ்கவுட் காம்ப் போவதமாகச் சொல்லி காசும் வாங்கிக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள்.

ராமுவும் பாலுவும் ஒரு கைத்துப்பாக்கி டோர்ச் பிஸ்கட் டின் முதலியவற்றுடன் புதன்கிழமை காலையில் காட்டுக்குள் பிரவேசித்தனர். சனிக்கிழமை மாலை ஆறு மணிக்குள் எப்படியும் வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டுமென்று யோசித்துக் கொண்டே வழியில் இருந்த முட்செடிகளை ஒதுக்கிக் கொண்டு சென்றனர்.

மத்தியானம் சுமார் ஒரு மணியளவில் ராமுவும் பாலுவும் கட்டுச் சேற்றை எடுத்துச் சாப்பிட்டனர். காட்டை ஊடறுத்து ஓடிக்கொண்டிருக்கும் நீரோடையில் குளிர்ந்த நீரை இரண்டு கைகளாலும் அள்ளிப் பரகிவிட்டு மீண்டும் நடந்து சென்றனர்.

புதன்கிழமை மாலை சுமார் ஐந்து மணியளவில் பற்றைகள் அடர்ந்த ஒரு பகுதிக்கு சென்றனர். அப்பற்றைகள் அடர்ந்த பகுதியில் ராமுவும் பாலுவும் புதன் கிழமை ரவைக் கழித்தனர்.வியாழக்கிழமை அதிகாலையில் எழுந்து பிஸ்கட் டின்னில் இருந்து சில பிஸ்கட்களை எடுத்துச்சாப்பிட்டுவிட்டு ஒரு ஒற்றையடிப் பாதை வழியாக இருவரும் சென்றனர்.

ராமுவும் பாலுவும் மலைப்பாம்பின் மேல் ஏறியதம் பாம்பு நகரத்தொடங்கியது.

தொடரும்...

## தெரிந்து கொள்வோம்

1. இலங்கையில் உயர்ந்த நீவீழ்ச்சி எது?
   : பம்பரகந்த.
2. இலங்கையில் நீளமான ஆறு எது?
   : மகாவலி கங்கை. 335 கி. மீ
3. இலங்கையின் உயர்ந்த மலை எது?
   : பிதுருதலாகல. கடல் மட்டத்திலிருந்து 2524 மீற்றர் (8200 அடி)
4. இலங்கையின் இணையக் குறி என்ன?
   : lk
5. இலங்கையின் தொலைபேசி குறியீட்டு எண் என்ன?
   : +94
6. இலங்கையில் பாவனையில் உள்ள மின்னழுத்தம்?
   : 230V

## விடுகதை அறிவோம்

1. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை. அது என்ன?
2. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை. தேசமெல்லாம் சுத்தும். அது என்ன?
3. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
4. காற்று வீசும் அழகான மரம். அது என்ன?
5. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான். அது என்ன?
6. எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள். அவள் யார்?

(தீக்குச்சி, தபால் தலை, கடல் அலை, சாமரம், வெங்காயம் , செல்பேசி)

## பொறுமை

மனிதனுக்குரிய குணங்களில் சிறந்தது பொறுமை. உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினத்தை காத்துக் கொள்ளும் குணமே குணம் என்கின்றார் ஒரு கவிஞர். வெம்மை விளைவிப்பது கோபம். செம்மை விளைவிப்பது பொறுமை இத்தகைய பொறுமை மன உறுதியில் அமையுமா? இப் பொறுமை எமக்கு நல்லியல்புகள் பலவாகும். அந் நல்வியல்புகள் அனைத்யையும் திரட்டி பார்த்தால் அவையனைத்தும் பொறுமை என்னும் ஒன்றில் அமையுமாம். வாய்மையை தந்தையாகவும் மெய்யறிவை அன்னையாகவும் வைத்துக்கொள்ளவேமெனில் இவ்விரண்மடும் கூடி ஈன்றெடுக்கும் குழந்தை பொறுமை எனக் கூறலாம்.. (வாய்டமை+மெய்யறிவு = பொறுமை) மெய்யறிவு ஊற்றினால் தோன்றுவதே பொறுமை. மெய்யறிவு விளக்கம் பெறாத இடத்தில் துலங்குகின்ற பொறுமை பொறுமையாகாது என்பர். எனவே நாம் வாழ்க்கையில் பொறுமையை கடைப் பிடித்து வாழ்வோமாக.



ப. விஸ்ணுதரன்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

தீபத்தின் மாணவர் பகுதியுடன்
நீங்களும் இணைந்து கொள்ளலாம்
மாணவச்செல்வங்களே.
கதை, கவிதை, சித்திரம், துனுக்கு
என உங்கள் ஆக்கம் எதுவானாலும்
உங்கள் படத்துடன்
அனுப்பி வையுங்கள்.



## திருப்தி

மனம் என்ற
புச்செடியில்
பூத்ததோர் திருப்தி
பூக்கள்
அப் பூக்களை எடுத்து
ஒன்றாக்கினால்
உருவாகும் வசந்தம்
வாழ்க்கை.

மனதில் உருவாகும்
திருப்தி ஒளி
அதுவே எங்கள்
வாழ்க்கை ஒளி
முகத்தில் ஒளிர்ந்த
புன்னகை ஒளி
அது வர காரணம்
திருப்தி ஒளி



ச.சன்யு
யா/உடுப்பிட்டி
அ.மி.கல்லூரி



# வவுனியா ஆணழகன்

வன்னிமது

ஆணழகன்போட்டிகள்இப்பொழுதுதான் மெல்லமெல்ல வடக்கு, கிழக்கில் தலைகாட்ட தொடங்கியுள்ளன. பல வருடங்களின் முன்னரே ஜிம்கள் எல்லா இடங்களிற்கும் வந்துவிட்டன. ஜிம்முக்கு போய் கை கொஞ்சம் 'வீங்கினாலே' போதும், நமது பையன்கள் ஆர்ம்கட் பெனியனுடன்தான் ஊர்சுற்றுவது வழக்கம். ஆனால் எல்லோராலும் சொல்லிக்கொள்ளும் விதமான ஆணழகர்களாக உருவெடுக்க முடிவதில்லை. இருந்தாலும் இந்த சவால்களை கடந்து சாதிக்க முடிக்கும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இப்பொழுது மெல்லமெல்ல ஆங்காங்கே போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. முறையான பயிற்சி, வாய்ப்புக்கள் இல்லாமை போன்ற நெருக்கடிகளின் மத்தியிலும் சாதித்துக் கொண்டிருக்கும் நம்மவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். சிலகாலத்தின் முன்னர் வறுமையிலும் ஜொலிக்கும் மலையக ஆணழகன் மாணவன் ஒருவன் பற்றிய செய்திகள் வந்திருந்தன. அதேபோல வவுனியாவிலும் சவால்களை கடந்து ஆணழகன் பட்டம் வென்றவரே மாரிமுத்து என்பவர்.

வவுனியாவில் இறுதியாக 2013 இல் ஆணழகன் போட்டி நடந்தது. தனியார் ஜிம் நிலையமொன்று மாவட்டத்திலுள்ள ஆணழகர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து 2012, 2013 இல் நடத்தப்பட்ட ஆணழகன் போட்டிகள் அதன்பின் நடத்தப்படாமலேயே விடப்பட்டுவிட்டது. இந்த இரண்டு வருடங்களிலும் ஆணழகன் பட்டம் வென்றவர் மாரிமுத்து.

மாரிமுத்து இந்த இடத்தை அடைந்தது சாதாரண விடயமல்ல. வாழ்வுடன் அன்றாடம் போராடும் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர் மாரிமுத்து. இந்தியாவிலிருந்து வந்து வவுனியாவில் குடியேறியவர். பூந்தோட்டம் பெரியார்குளத்தில் வசிக்கும் மாரிமுத்துவிற்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

ஆணழகாக அதிக பணம்செலவாகுமென்ற பரவலான அபிப்பிராயத்தை தகர்த்தது மாரிமுத்துவின் வாழ்க்கை. தினமும் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து பயிற்சியில் ஈடுபடுகிறார். 8.30க்கு கூலிவேலைக்கு செல்கிறார். அவரின் சொத்து ஒரு துவிச்சக்கரவண்டிதான்.

மாரிமுத்து ஒரு மரநிறுவனத்தில் வேலை செய்கிறார். வெட்டப்பட்ட மரங்களை வாகனங்களில் எற்றிஇறக்குவதுதான் வேலை. மாலை ஆறு மணிவரை உடலை சோர்வாக்கும் இந்த வேலையில் ஈடுபடுகிறார். நாளாந்த வருமானம் ஆயிரம் ரூபா. இதில்தான் குடும்பம், பயிற்சி, சத்தணவு எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும்.

வறுமையுடனும், ஆணழகன் கனவுடனும் விடாமல் போராடிக்கொண்டிருக்கும் மாரிமுத்து ஒரு வித்தியாசமான மனிதர்தான்!





**தனுராஜ்**
மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்

வவுனியா மாவட்டத்தில் ஆணழகன் போட்டி ஆர்வம் குறைந்துவிட்டது. பொருளாதார பிரச்சனை, குடும்பபொறுப்புக்கள், ஆளணி பற்றாக்குறை, உபகரணங்கள் இல்லாமை என பல காரணங்கள் இருக்கலாம். வவுனியா நகரசபையால் 1998இல் முதன்முதலாக உடற்பயிற்சிகூடமொன்று அமைக்கப்பட்டது. அப்பொழுது 1,100 அங்கத்தவர்கள் பயிற்சிபெற்றார்கள். பின்னர் 2001 இல் பொலிசார் ஆணழகன் போட்டி நடத்தினார்கள். பின்னர் போர்ச்சூழலால் எதுவும் நடக்கவில்லை. 2012இல் தான் மீண்டும் போட்டி நடந்தது. வீரர்களின் ஈடுபாடு குறைவுதான் போட்டிகளை தொடர்ந்து நடத்த முடியாமல் உள்ளது. வீரர்களிற்கு பயிற்சியளிக்கும் திட்டத்தை தற்போது ஆரம்பித்துள்ளோம். வவுனியா மாவட்ட தேககட்டுமான சங்கம் உருவாக்கப்பட்டால், இலங்கை தேககட்டுமான சங்கம் அவர்களுடன் இணைந்து போட்டிகளையும், வசதிவாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும்.

---



தர்ஜி என்ற 11 வயது சிறுவன் இக்தியோசிஸ் என்னும் அரியவகை நோயால் பாதிக்க பட்டுள்ளான். இந்நோயின் தாக்கத்தினால் ரமேஷ் தர்ஜி நாளாக நாளாக கற்சிலையை போன்று மாறி வருகிறான். இந்த நோயினை குணப்படுத்த சிகிச்சைகள் இருந்தும், போதிய பணம் இல்லாததால் தங்களின் மகனை சிகிச்சைக்கு அழைத்து செல்ல முயலவில்லை என்று ரமேஷ் தர்ஜியின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.



றோமன் கத்தோலிக்க பாடசாலை விஞ்ஞான ஆசிரியரினால் வாழைத்தண்டில் இருந்து மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாழைத்தண்டில் உள்ள வாழைக்கயருடன் செப்புத்தகடுகள் தாக்கமடைந்து அதில் மின்சாரம் உருவாகுவது ஆசிரியரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. லிணிஜி மின்குமிழ்கள் ஒளிர போதுமான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. திரு.ஆறுமுகம் பொன்வாசன் என்ற விஞ்ஞான பாட ஆசிரியராலேயே இக்கண்டு பிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் நடக்கும் அதிசயம் இது. அங்குள்ள ஒருவர் ஐந்து வேட்டைநாய்களை வளர்த்துள்ளார். பூனை வளர்க்க ஆசைப்பட்டு குட்டியொன்றை கொண்டு வந்திருக்கிறார். அது பால் குடிக்க சிரமப்பட்டுள்ளது. பின்னர் குட்டி ஈன்ற நாய் ஒன்றிடம் பால் குடிக்க ஆரம்பித்துள்ளது. கடந்த 5 மாதங்களாக இப்படி பால் குடித்து வருகிறது.





யப்பானியர்கள் எப்பொழுதும் புதுமையானவர்கள். கண்டுபிடிப்புக்களில் முன்னோடிகள். குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்த பாடசாலை பேரூந்துகளை இப்படி அமைத்துள்ளனர்.



இந்தியாவின் கொச்சியில் உணவக உரிமையாளரான பெண்ணொருவர் தனது கடைக்கு முன்னால் பெரிய குளிர்சாதன பெட்டியொன்றை வைத்துள்ளார். வீடுகளில் உணவு மிச்சமானால் யாரும் அதில் கொண்டுவந்து வைக்கலாம். உணவில்லாமல் திண்டாடுபவர்கள் அதை எடுத்து சாப்பிடலாம். பழுதான உணவை வைக்க முடியாதென்பதே நிபந்தனை. தினமும் 50 பேர் வரையில் இங்கு பசியாறுகிறார்களாம்.

## தீபம் வார இதழின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு...

# படைப்பாளிகள் கொண்டாட்ட திருவிழா

தமிழின் முதல்தர சஞ்சிகையாக உருவெடுத்துள்ள தீபம் வாரஇதழ் வரும் யூலை மாதத்தில் முதலாவது வயதை பூர்த்தி செய்கிறது. இதனை முன்னிட்டு படைப்பாளிகளிற்கு ஒரு கொண்டாட்ட திருவிழாவை அறிவிக்கிறது.

**சிறுகதை, கவிதை போட்டிகள் அத்துடன், பாடசாலை மாணவர்களிற்கான கட்டுரை போட்டி**

### விதிகள்

1. ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம். ஏற்கனவே பிரசுரமான படைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. ஏ 4 தாளின் ஒரு பக்கத்தில் தட்டச்சு செய்தோ, தெளிவான கையெழுத்திலோ அனுப்பலாம். எழுதியவர் சுயவிபரம் பிறிதொரு தாளில் தெளிவாக குறிப்பிடப்பட்டு, படைப்புடன் இணைக்கப்பட வேண்டும்.
3. சிறுகதையெனில், எந்தகருவை அடிப்படையாக கொண்டும் எழுதலாம். ஏ 4 தாளில் 5 பக்கத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
4. கவிதையெனில், மரபுக்கவிதையாகவோ, புதுக்கவதையாகவோ இருக்கலாம். ஏ4 தாளில் இரண்டு பக்கத்திற்கு மேற்படக்கூடாது.
5. கட்டுரையெனில், நீங்கள் பாடசாலை மாணவராக இருக்க வேண்டும். அதை பாடசாலையின் அதிபரை கொண்டு உறுதிசெய்து கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஏ4 தாளில் மூன்று பக்கத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். விஞ்ஞானம், சமயம், மொழி, ஆன்மீகம், வரலாறு என எந்தத்துறை சார்ந்ததாகவும் இருக்கலாம்.
6. நடுவர்கள் முடிவே இறுதியானது. முடிவுத் திகதி 30.06.2016

**தமிழின் முன்னணி படைப்பாளிகளை கொண்ட நடுவர் குழு வெற்றியாளர்களை தேர்வு செய்வார்கள். வெற்றியாளர்களிற்கு பெறுமதிமிக்க பரிசில்கள், யூலை மாதம் நடைபெறும் தீபத்தின் ஆண்டுநிறைவு விழாவில் வழங்கப்படும்.**

படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
படைப்பாளிகள் திருவிழா, தீபம், 211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

மேலதிக தகவல்களிற்கு அலுவலக தொலைபேசி இலக்கங்களிற்கு கடமைநேரத்தில் அழைக்கலாம்.

தவணை முறையிலான கொடுப்பனவு
(நியந்தனைக்கு உட்பட்டது)

LG
Experience the Real Surround Sound



13%
LG Home Theater System DH4130S ~~23,990/=~~ 20,990/=
330W
DVD Video
USB Movie Player
HDMI



23%
LG Home Theater System DH3140S ~~21,990/=~~ 16,990/=
300W
DVD Video
USB Plus
DIVX

NIKAI 32 INCH LED TV NTV3272 LED6 ~~30,900/=~~ 24,900/=
கையிருப்பு உள்ளவரை மட்டும்!



38%

# 127, K.K.S. Road, Jaffna.
Web : www.celltronic.lk
www.facebook.com/WWW.CELLTRONICS.LK
Tel/Fax : +94 212 223393
Mob : 077 49 78 782
Celltronics

KINGS
யாழ்
தேயிலை



சிறந்த தரம், நறுமணம், சுவை கொண்ட
இயற்கையான தேயிலை



KINGS TEA INTERNATIONAL (PVT) LTD
A9, கண்டி வீதி, மிருசுவில், யாழ்ப்பாணம்
மின்னஞ்சல் : info@kingsteas.com
இணையம் : www.kingsteas.com

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 12.06.2016 அன்று வெளியிடப்பட்டது